**பொ.து.ந.க.எண்.ஈ2/8299/10**

**ஆணையாளர் அவர்களின் 26.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :131/2010 பொருள் எண்.1

**வயதுமுதிர்வு ஓய்வு**

சென்னை மாநகராட்சியில் பல்வேறு துறைகள் / மண்டலங்களில் வெவ்வேறு பணியமைப்பின் கீழ் பணிபுரிந்த / பணிபுரியும் அலுவலர்கள் பின்வரும் பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதியில் அவர்கள் மீது தணிக்கை தடைகள் இருப்பது சுட்டிக்காட்டி உள்ளாட்சி நிதி தணிக்கையினரால் அறிக்கை பெறப்படும் பட்சத்தில் மற்றும் தனிப்பட்ட நீண்ட கால முன்பணம் அல்லது அலுவலக முன்பணம் தீர்வு செய்யப்படாமல் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு உரியவரை பொறுப்பாக்கி அவர்களது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி ஓய்வு பெற்றதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி / ஓய்வு பெற மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

கீழ்கண்ட ஓய்வு பெற அனுமதிக்கப்படவேண்டிய மற்றும் பின்னேற்புஆணை வழங்க வேண்டிய அலுவலர்கள் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ. எண் | அலுவலரது பெயர் திருவாளர்கள் | பதவியின் பெயர் | பிறந்த தேதி | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | தற்போது உள்ள பதவியில் சேர்ந்த நாள் | ஓய்வு பெறும் தன்மை | ஓய்வு பெறும் தேதி | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆர். விஜய ராகவன் | பூங்கா கண் காணிப் பாளர் | 27.7.1951 | 10.4.1978 | 9.12.1988 | வயது முதிர்வு ஓய்வு | 31.7.2009 | 31.07.2009 தேதியிட்ட செயல்முறை ஆணை எண்.பூ.து.ந.க.எண்.பி1/617/ 2009ன்படி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப் படுகிறது. |
| 2. | டாக்டர். ரீட்டா மொரைஸ் | மருத்துவ அலவலர் | 7.12.1951 | 22.8.1984 | 22.8.1984 | வயது முதிர்வு ஓய்வு | 31.12.2009 | 22.12.2009 தேதியிட்ட செயல்முறை ஆணை எண்.மா.கு.ந.து. எப்1/3858/2009 ன்படி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு வயதுமுதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது. |
| 3. | எம்.சி. கோபால ரத்தினம் | கூடுதல் வருவாய் அலுவலர் | 5.4.1952 | 27.12.1972 | 7.8.2009 | வயது முதிர்வு ஓய்வு | 30.4.2010 | இவரை வயதுமுதிர்வு ஓய்வில் செல்ல பரிந்துரைக்கப் படுகிறது. |

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/0536/2010**
**ஆணையாளர் அவர்களின் 08.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :132/2010 பொருள் எண்.2

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

டாக்டர். திருமதி. வி. எழில்மணி, மருத்துவ அலுவலர், புளியந்தோப்பு மண்டலம், மருத்துவ அலுவலராக 11.11.1989 அன்ற சென்னை மாநகராட்சியில் மாவட்ட குடும்ப நலத்துறையில் பணி அமர்த்தப்பட்டார். இவரது பணியை மன்றத்தீர்மான எண் 1517/94, 27.05.1994 நாளிட்ட மாநகராட்சி மன்றத்தீர்மானத்தின்படி, 06.12.1993 நாளிட்ட அரசாணை எண்.1460ல் கண்டுள்ளபடி பணி நியமன உத்தரவினை ஏற்பளிப்பு செய்தும் 11.11.1989 முதல் பணிவரன்முறைப்படுத்தியும், 03.03.1992 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறை மக்கள் தொகைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ.) அவர்களின் 24.06.1994 நாளிட்ட செயல்முறை ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை.

எனவே, கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மாவட்ட குடும்ப நலம் அவர்கள் இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை காலமுறை சம்பள விகிதம் தமிழ்நாடு திருத்திய சம்பள ஊதிய குழு 2009 கணக்கின்படி தனியர் ஏற்கெனவே பெற்று வரும் அடிப்படை ஊதியத்தில் 3 விழுக்காடு ஊதிய உயர்வு ஒன்று வழங்க டாக்டர் திருமதி. வி. எழில்மணி அவர்கள் சிறப்பு நிலை கால சம்பளம் அனுமதிக்கும் முன்பெற்று வந்த காலமுறை ஊதிய விகிதம் ரூ.15600–39100 + G.P. ரூ.5700ல் ஊதியம் நிர்ணயம் செய்து சிறப்பு ஊதியம் ரூ.300/– என 11.11.2009 முதல் வழங்க கருத்திசைவு அளித்துள்ளார். இவரின் பணி பற்றிய விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பெயர் | பணி வரன் முறை நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | LLP | தேர்வு நிலை வழங்கிய நாள் | 20 ஆண்டு முடித்த நாள் | இதற்கு முந்தைய ஆண்டு களில் தண்டனை | சிறப்பு நிலைக்கு தகுதி உடையவரா | சிறப்புநிலை வழங்க வேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| டாக்டர். திருமதி. வி. எழில் மணி, மருத்துவ அலுவலர் | 11.11.89 | 03.03.92 | NIL | 11.11.99 | 10.11.09 | ஏதுமில்லை | ஆம் | 11.11.2009 |

டாக்டர். திருமதி. வி. எழில்மணி, மருத்துவ அலுவலர், புளியந்தோப்பு மண்டலம், அவர்களுக்கு சிறப்பு நிலை காலமுறை சம்பளம் வழங்க வேண்டும். மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 10.11.2009ல் முடித்துள்ளதால் 11.11.2009 முதல் சிறப்புநிலை புக அனுமதித்து அடிப்படை சம்பளம் ரூ.31590+300 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பள விகிதம் ரூ.15600–39100 + G.P. 5700ல் 11.11.2009 முதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்4/316/2010</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 17.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :133/2010 பொருள் எண்.3

**<u>சிறப்பு நிலை வழங்க அனுமதி</u>**

டாக்டர். திருமதி. எஸ். சரஸ்வதி, மருத்துவ அலுவலர், புளியந்தோப்பு மண்டலம், மருத்துவ அலுவலராக 10.11.1989 அன்று சென்னை மாநகராட்சியில் மாவட்ட குடும்ப நலத்துறையில் பணி அமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.1460 நாள் 06.02.1993 மற்றும் 27.05.1994 நாளிட்ட மன்ற தீர்மான எண்.1517/94ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டு, 10.11.1989 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் 10.11.1991 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதற்கான பதிவுகள் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளன.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை.

எனவே, கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மாவட்ட குடும்ப நலம் அவர்கள் இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை காலமுறை சம்பள விகிதம் தமிழ்நாடு திருத்திய சம்பள ஊதிய குழு 2009 கணக்கின்படி தனியர் ஏற்கெனவே பெற்று வரும் அடிப்படை ஊதியத்தில் 3 விழுக்காடு ஊதிய உயர்வு ஒன்று வழங்க டாக்டர் திருமதி. எஸ். சரஸ்வதி அவர்கள் சிறப்பு நிலை கால சம்பளம் அனுமதிக்கும் முன்பெற்று வந்த காலமுறை ஊதிய விகிதம் ரூ.15600–39100 + G.P. ரூ.5700ல் ஊதியம் நிர்ணயம் செய்து சிறப்பு ஊதியம் ரூ.300/– என 11.11.2009 முதல் வழங்க கருத்திசைவு அளித்துள்ளார். இவரின் பணி பற்றிய விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பெயர் | பணி வரன் முறை நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | LLP | தேர்வு நிலை வழங்கிய நாள் | 20 ஆண்டு முடித்த நாள் | இதற்கு முந்தைய ஆண்டு களில் தண்டனை | சிறப்பு நிலைக்கு தகுதி உடையவரா | சிறப்புநிலை வழங்க வேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| டாக்டர். திருமதி. எஸ். சரஸ்வதி, மருத்துவ அலுவலர் | 10.11.89 | 10.11.1991 | NIL | 09.11.2009 | 09.11.09 | ஏதுமில்லை | ஆம் | 10.11.2009 |

டாக்டர். திருமதி. எஸ். சரஸ்வதி, மருத்துவ அலுவலர், புளியந்தோப்பு மண்டலம், மருத்துவ அலுவலருக்கு சிறப்பு நிலை காலமுறை சம்பளம் வழங்க வேண்டும். மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 09.11.2009ல் முடித்துள்ளதால் அடிப்படை சம்பளம் ரூ.31590+300 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பள விகிதம் ரூ.15600–39100 + G.P. 5700ல் 11.11.2009 முதல் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்4/0497/2010</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 15.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :134/2010 பொருள் எண்.4

**<u>சிறப்பு நிலை வழங்க அனுமதி</u>**

டாக்டர். திருமதி. எ. தமிழ்செல்வி, மருத்துவ அலுவலர், அயனாவரம் மண்டலம், மருத்துவ அலுவலராக 14.10.1988 அன்று பணியில் சேர்ந்துள்ளார். இவரது பணியை 14.10.1988 முதல் பணிவரன்முறைப்படுத்தியும் 17.12.1990 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டு அரசாணை எண்.410, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.07.1989ல் வழங்கப்பட்டு மாமன்றத் தீர்மானம் எண்.564/2003, நாள் 20.10.2003ல் பெறப்பட்டு சென்னைமாநகராட்சி துணை ஆணையர் (சு) அவர்களின் செயல்முறை ஆணையும் 29.10.2003 அன்று வழங்கப்பட்டுள்ளது.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை.

எனவே, கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மாவட்ட குடும்ப நலம் அவர்கள் இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை காலமுறை சம்பள விகிதம் தமிழ்நாடு திருத்திய ஊதிய குழு 2009 கணக்கின்படி தனியர் 23.12.2008 அன்று ஏற்கெனவே பெற்று வரும் அடிப்படை ஊதியம் ரூ.29770/—ல் 3 விழுக்காடு ஊதிய உயர்வு ஒன்று வழங்க டாக்டர் திருமதி. எ. தமிழ்செல்வி அவர்கள் சிறப்பு நிலை கால சம்பளம் அனுமதிக்கும் முன்பெற்று வந்த காலமுறை ஊதிய விகிதம் ரூ.15600—39100 + G.P. ரூ.5700ல் அடிப்படை ஊதியம் ரூ.30670/— என நிர்ணயம் செய்து சிறப்பு ஊதியம் ரூ.300/— என 11.11.2009 முதல் வழங்க கருத்திசைவு அளித்துள்ளார். இவரின் பணி பற்றிய விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பெயர் | பணி வரன் முறை நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | LLP | தேர்வு நிலை வழங்கிய நாள் | 20 ஆண்டு முடித்த நாள் | இதற்கு முந்தைய ஆண்டு களில் தண்டனை | சிறப்பு நிலைக்கு தகுதி உடையவரா | சிறப்புநிலை வழங்க வேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| டாக்டர். திருமதி. எ. தமிழ்செல்வி மருத்துவ அலுவலர் | 14.10.88 | 17.12.90 | 72 | 17.11.1998 | 22.12.2008 பி.ப | ஏதுமில்லை | ஆம் | 23.12.08 |

டாக்டர். திருமதி. எ. தமிழ்செல்வி, மருத்துவ அலுவலர், அயனாவரம் மண்டலம், அவர்களுக்கு சிறப்பு நிலை காலமுறை சம்பளம் வழங்க வேண்டும். மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 22.12.2008ல் முடித்துள்ளதால் அடிப்படை சம்பளம் ரூ.30670+300 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பள விகிதம், ரூ.15600—39100 + G.P. 5700ல் 23.12.2008 முதல் வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/52255/2007**
**ஆணையாளர் அவர்களின் 16.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :135/2010 பொருள் எண்.5

**பணிவரன்முறைப்படுத்தல்**

அரசாணை எண்.321, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 13.07.2009ல், சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கான தேர்ந்த பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கி பின்வரும் ஆறு செயற்பொறியாளர்களுக்கு மண்டல அலுவலராக பதவி உயர்வு அளித்து பணி நியமனம் செய்து ஆணை வழங்கியது.

| வ.எண். | மண்டல அலுவலராக பதவி உயர்வு பெற்ற செயற்பொறியாளர்களின் பெயர் (திருவாளர்கள்) |
|---|---|
| 01. | ஜெ. அட்லி |
| 02. | எம்.எஸ். பிரேம்நாத் |
| 03. | ஜெ. வேணுகோபால் |
| 04. | எம். கிருஷ்ணமூர்த்தி |
| 05. | ஏ. ஞானமணி |
| 06. | எம். பரசுராமன் |

இவ்வரசாணையினை தொடர்ந்து, இவ்வலுவலக செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/52255/2007, நாள் 29.07.2009 தேதியிட்டு மேற்படி நபர்களுக்கு பின்வரும் பட்டியலின்படி பணியிடம் வழங்கப்பட்டது.

| வ.எண். | மண்டல அலுவலரின் பெயர் (திருவாளர்கள்) | தற்போது பணிபுரியும் மண்டலம் | மண்டல அலுவலர்களாக பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 01. | ஜெ. அட்லி | மண்டலம்–3 | 30.07.2009 |
| 02. | எம்.எஸ். பிரேம்நாத் | மண்டலம்–9 | 31.07.2009 |
| 03. | ஜெ. வேணுகோபால் | மண்டலம்–6 | 30.07.2009 |
| 04. | எம். கிருஷ்ணமூர்த்தி | மண்டலம்–5 | 31.07.2009 |
| 05. | ஏ. ஞானமணி | மண்டலம்–8 | 31.07.2009 |
| 06. | எம். பரசுராமன் | மண்டலம்–1 | 31.07.2009 |

மேற்படி மண்டல அலுவலர்கள் அவரவர் பெயருக்கெதிரே கலம்–4ல் குறிப்பிட்டுள்ளபடி பணியில் சேர்ந்துள்ளனர். இவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 06.10.2009ல், சென்னை மாநகராட்சி பணியமைப்பிலுள்ள மண்டல அலுவலர் பதவியினை பணி நியமனம் செய்துக்கொள்ளும் அதிகாரத்தினை அரசு சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிகார பங்களிப்பு வழங்கியுள்ளது.

இவ்வதிகாரப் பங்களிப்பின்படி மேற்படி பட்டியலிலுள்ள மண்டல அலுவலர்கள் கலம்–4ல் குறிப்பிட்டுள்ளபடி மண்டல அலுவலராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘பத்தி 3ல் வரிசை எண்.1ல் தற்போது பணிபுரியும் இடம் மேற்பார்வைப்பொறியாளர் (பேருந்து சாலைத்துறை) (பொ) மற்றும் வரிசை எண்.5ல் மண்டலம்–2 என்ற திருத்தத்துடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**சு.து.ந.க.எண்.சி1/000818/2010**
**ஆணையாளர் அவர்களின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :136/2010 பொருள் எண்.6

**பணிவரன்முறைப்படுத்த அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி**

அரசாணை (ப) எண்.25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 14.01.2008ல் சென்னை மாநகராட்சியில் காலியாக இருந்தசுகாதார அலுவலர் பதவியினை டாக்டர். பெ. குகானந்தம் என்பவரது பெயரைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவு பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கி அவரை சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளித்து பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

இவ்வரசாணையினை தொடர்ந்து டாக்டர். சி. வாசுதேவன், சுகாதார அலுவலர் என்பவர் 31.07.2000 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலிப்பணியிடத்தில் டாக்டர். பெ. குகானந்தம் என்பவரை ரூ.14,300–400–18,300 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் சுகாதார அலுவலராக பணியமர்வு செய்து 20.02.2008 தேதியிட்டு ஆணை வழங்கப்பட்டது.

டாக்டர். பெ. குகானந்தம் என்பவர் ஆந்திர பிரதேச மாநிலத்தில் உள்ள ஷேர் இந்தியா என்ற நிறுவனத்தின் பொது சுகாதார மேலாண்மை நிலையத்தில் திட்ட இயக்குநராக 01.01.2008 முதல் 03.08.2008 வரை பணிபுரிய அரசு ஆணை ப.எண்.420, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள் 23.09.2009ல் அரசு பின்னேற்பு ஆணை வழங்கியுள்ளது. இவர் கூடுதல் சுகாதார அலுவலர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்று சுகாதார அலுவலர் பதவியில் 04.08.2008 அன்று பொறுப்பேற்று கொண்டார்.

தனியர் சுகாதார அலுவலர் பதவியில் 04.08.2008 முதல் பணியில் சேர்ந்துள்ளதால் அந்த தேதியிலிருந்து சுகாதார அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்த படவேண்டும்.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் சுகாதார அலுவலர் பதவி வகுப்பு–1A என்று வகைப்படுத்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சி சட்டவிதி 1919 துணை விதி 85(3)(a)ன்படி இப்பதவியினை பணி நியமனம் செய்ய அரசு அதிகாரம் பெற்றுள்ளதால் டாக்டர். பெ. குகானந்தம் என்பவருக்கு சுகாதார அலுவலர் பதவியில் 04.08.2008 அன்று பொறுப்பேற்ற நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த அரசாணை பெற வேண்டியுள்ளதால் அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.2.ந.க.எண்.இ3/8399/2003</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 25.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :137/2010 பொருள் எண்.7

**<u>தமிழ்மொழி தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்</u>**

துப்புரவு ஆய்வாளர், திரு. ஜி. சுந்தர்ராஜா என்பவர் 31.10.2003 அன்று வயதுமுதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 30.10.1972 அன்று சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை மலேரியா பிரிவில் களப்பணியாளராக பணியமர்த்தப்பட்டு, 16.12.1980 முதல் துப்புரவு ஆய்வாளராக பணியாற்றி வந்த நிலையில் 31.10.2003 அன்று வயதுமுதிர்வு ஓய்வு பெற்றார். அன்னாரின் தாய்மொழி தெலுங்கு என்பதால், தனியர் பணியில் இருக்கும் காலத்தில், தமிழ்நாடு தேர்வாணையக்குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்திற்காக தனியருக்கு ஓய்வுகால சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு தற்காலிக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுத்துறையின் கோப்பு பொ.து.ந.க.எண்.ஜி4/5173/2004ல், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில், தமிழ்மொழி தேர்ச்சி பெறுவது தொடர்பான தெளிவுரை கோரப்பட்டது. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை கருத்துரையில், அரசு கடிதம் எண்.83795/பணியமைப்பு–எஸ்/1988–7, நாள் 10.04.1989 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அனுப்பியுள்ள கடிதத்தின்படியும், உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் 05.01.1976க்கு முன்னதாக பணியமர்த்தப்பட்டவர்களை அரசு பொது விதி எண்.12(f)ன் படி, தமிழ்மொழியில், தமிழ்நாடு அரசு தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாவிடினும், அத்தகையவர்களுக்கு தமிழ்மொழியில் போதிய அறிவும், படிக்கவும், எழுதவும் மற்றும் பேசவும் தெரியும் என்பதனை அவரவர் துறைத் தலைவர்களால் மேற்படி தேர்வினை நடத்தி, உறுதியான அறிக்கையினை சம்பந்தப்பட்ட பணியாளர் / அலுவலரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது. தற்பொழுது மண்டல அலுவலர்–2 அவர்கள் துறைத்தலைவர் என்கிற முறையில், தனியருக்கு தமிழ்மொழியில் போதிய அறிவும், படிக்கவும், எழுதவும் மற்றும் பேசவும் தெரியும் என்பதனை உறுதி செய்து, அதனை தனியரது பணிப்பதிவேட்டில் பதிந்துள்ளார். எனவே உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் கருத்துரையின்படியும், அரசு கடித எண்.83795/பணியமைப்பு–எஸ்/1988–7, நாள் 10.04.1989 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அனுப்பியுள்ள கடிதத்தில் உள்ள அறிவுரையின்படியும், தனியர் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மன்றத் தீர்மான எண்.58/2007, நாள் 25.04.2007ன்படி தனியர் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசாணை பெற மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது. ஆனால் அரசிடமிருந்து விலக்காணை கிடைக்கப் பெறவில்லை. தற்போது அரசு ஆணை (நிலை) எண்.181, நாள் 06.10.2009னை தொடர்ந்து தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அதிகார பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, தனியர் திரு. ஜி. சுந்தர்ராஜா, ஓய்வு பெற்ற துப்புரவு ஆய்வாளர் அவர்கள் தனது பணிக்காலத்தில் தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழியில் தேர்ச்சி பெறவில்லை என்பதாலும், அரசு கடிதத்தின்படி, தனியர் சென்னை மாநகராட்சியில் 05.01.1976க்கு முன்னதாக (தனியர் முதன்முதலில் சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறை, மலேரியா பிரிவில், களப்பணியாளராக 31.10.1972ல் பணியமர்த்தப்பட்டவர்) பணியமர்த்தப்பட்டமையால், தனியர் பணிபுரிந்த துறைத்தலைவரான மண்டல அலுவலர்–2 அவர்கள், தனியர் தமிழில் போதிய அறிவும், படிக்கவும், எழுதவும் மற்றும் பேசவும் தெரியும் என்பதனை உரிய தேர்வு நடத்தி, தனியரது பணிப்பதிவேட்டில் பதிந்துள்ளபடியால், தனியர் தமிழ்மொழியில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.10.வ.து.ந.க.எண்.ஆர்2/360/2010</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 17.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :138/2010 பொருள் எண்.8

**<u>தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்</u>**

திரு. முனுசாமி, வரிவசூலர், வருவாய் துறை, மண்டலம்–10 அவர்கள் தான் சென்னை மாநகராட்சியில் 02.09.1968 அன்று வாடகை வசூலிப்பவராக பணியமர்வு செய்யப்பட்டதாகவும் 02.10.1970ல் வரிவசூலராக பதவி மாற்றம் செய்யப்பட்டு 31.07.2007 வரை 38 ஆண்டுகளாக குற்றம் குறைவின்றி பணிபுரிந்து உள்ளதாகவும் தன்னுடைய தாய்மொழி தெலுங்கு என்றும் தனக்கு தமிழ்மொழி சரளமாக பேச எழுதத் தெரியுமென்றும், தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வு 3 முறை எழுதியும் அத்தேர்வில் தன்னால் தேர்ச்சி பெற இயலவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். தேர்வு எழுதியதற்கான அனுமதி குறிப்பாணையை இணைத்துள்ளார். தனக்கு தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து தனக்கு முழு ஒய்வூதியப் பயன்கள் கிடைக்க வழிவகைகள் செய்து தருமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தனியர் தமிழ்மொழி தேர்ச்சி பெறாததால் கடந்த காலத்தில் இவருக்கு வழங்கப்பட வேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. பொதுத்துறையின் சுற்றறிக்கை ந.க.எண்.ஜி4/7370/2000, நாள் 16.04.2002ன் படி 2002ம் ஆண்டு முதல் வருடாந்திர ஊதிய உயர்வு தனியருக்கு நிறுத்தப்பட்டு விட்டது.

தனியருக்கு 11.12.2006 அன்று சென்னை மாநகராட்சி மண்டலம்–10, உதவி ஆணையாளர் அவர்கள் முன்னிலையில் நடத்தப்பட்ட தமிழ்மொழி தேர்ச்சி தேர்வில் தமிழ்மொழியில் போதிய அறிவும் படிக்கவும் எழுதவும் மற்றும் பேசவும் தெரியும் என்ற திறனாய்வு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

கணக்கு அலுவலர், ஓய்வூதியம் அவர்களின் குறிப்பில் தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து மன்ற தீர்மானம் பெற்ற பின்னரே முழு ஓய்வூதியம் பணிக்கொடை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தனியருக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய பயன்கள் வழங்குவதற்கு ஏதுவாக தற்போது 04.11.2009 நாளிட்ட பொதுத் துறை சுற்றறிக்கையில் அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.10.2009ன்படி அரசிடம் அனுமதி பெறவேண்டிய இனங்களுக்கு சென்னை மாநகராட்சி மன்றம், நியமனக்குழு மற்றும் ஆணையர் அவர்களுக்கு அதிகாரப் பகிர்ந்தளிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்மொழி தேர்ச்சி விலக்களிக்க நியமனக்குழுவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால் 31.07.2007 அன்று பிற்பகல் முதல் வயதுமுதிர்வு காரணமாக ஒய்வு பெற்ற வரிவசூலருக்கு தமிழ்மொழி தேர்ச்சியிலிருந்து விலக்களிக்க நியமனக்குழுவின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/436/2008**
**ஆணையாளர் அவர்களின் 24.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :139/2010 பொருள் எண்.9

**தமிழ்மொழி தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்**

திருமதி. டி. சுவர்த்தகுமாரி, மகப்பேறு உதவியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் 30.06.2009 அன்று பிற்பகல் வயதுமுதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். இவர் சென்னை மாநகராட்சியில் மகப்பேறு குழந்தை நல பிரிவில் 04.03.1983ல் மகப்பேறு உதவியாளராக பணியமர்ந்துள்ளார். அன்னாரின் தாய்மொழி தெலுங்கு, இவர் பணிக்காலத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ் மொழித் தேர்வில் 5 முறை கலந்து கொண்டும், தேர்ச்சி பெறவில்லை. தனியர் தமிழ்மொழித் தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் ஆணை நியமனக்குழு மூலம் பெறப்பட்ட பின்னரே ஓய்வூதிய பயன்கள் அளிக்கப்பட வேண்டும்.

இது குறித்து சமர்ப்பித்துக் கொள்வதாவது, தனியர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தமிழ்மொழி தேர்வில் 5 முறை கலந்து கொண்டும் தேர்ச்சியடைவில்லை. தனியர் தமிழ்மொழி தேர்வில் தோல்வி அடைந்ததற்கான அரசிதழ் நகல் சமர்ப்பித்ததின் அடிப்படையிலும் 30.06.2009ல் வயது முதிர்வு ஓய்வடைந்து ஓய்வூதிய பயன்கள் ஏதும் பெறாததாலும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாததற்கு விலக்களிக்க அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 06.10.2009ல் தெரிவித்துள்ள அதிகார பகிர்வின்படி சென்னை மாநகராட்சி மன்றமே தற்போது அதிகாரம் பெற்றுள்ளதால் தனியர் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னரே முழு ஓய்வூதியம் பணப்பயன்கள் அனுமதிக்க இயலும்.

எனவே, திருமதி. டி. சுவர்த்தகுமாரி, ஓய்வுபெற்ற மகப்பேறு உதவியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களின் தாய்மொழி தெலுங்கு என்பதாலும் இவர் தனது பணிக்காலத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ்மொழித் தேர்வில் 5 முறை எழுதியும் தேர்ச்சி பெறவில்லை என்பதாலும், தனியர் 30.06.2009 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற்று ஓய்வூதிய பயன்கள் ஏதும் அனுமதிக்காத நிலையில் தனியருக்கு, மேற்கூறிய அரசாணையின்படி தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/580/05**
**ஆணையாளர் அவர்களின் 22.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :140/2010 பொருள் எண்.10

**தமிழ்மொழி தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்**

திருமதி. டி. ஜெயக்குமாரி, மகப்பேறு உதவியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் சென்னை மாநகராட்சியில் முதல் முதலில் மகப்பேறு குழந்தை நலம் மற்றும் குடும்ப நலப்பிரிவில் மகப்பேறு உதவியாளராக 06.03.1971ல் பணியமர்த்தப்பட்டுள்ளார். (நியமனக்குழு தீர்மான எண்.76/70, நாள் 02.11.1971) இவர் 30.06.2005 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளார். அன்னாரின் தாய்மொழி தெலுங்கு என்பதால், தனியர் பணியிலிருக்கும் காலத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்பதை காரணம் காட்டி தனியருக்கு ஓய்வு கால சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு தற்காலிக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

தனியர் வயது முதிர்வு காரணமாக 30.06.2005 அன்று ஓய்வு பெற்றார். சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து 34 ஆண்டுகள் எந்தவித குற்றச்சாட்டுகளும் நிலுவையில் இல்லாமல் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் ஆவார். இவர் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் நடத்தும் தமிழ்மொழி தேர்வில் 3 முறை கலந்துக் கொண்டு தேர்ச்சி பெறவில்லை. அதற்கான அரசிதழ் நகல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்மொழியில் தேர்ச்சி பெறாமைக்கு சிறப்பினமாக கொண்டு தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு அரசுக்கு 20.06.2007 அன்று கடிதம் அனுப்பப்பட்டதில் இதுநாள் வரை அரசாணை பெறப்படாமல் உள்ளது.

இந்நிலையில் தற்போது தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 06.10.2009ல் தெரிவித்துள்ள அதிகார பகிர்வின்படி சென்னை மாநகராட்சி மன்றமே தற்போது அதிகாரம் பெற்றுள்ளதால் தனியர் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னரே முழு ஓய்வூதிய பயன்கள் அனுமதிக்க இயலும். எனவே, திருமதி. டி. ஜெயக்குமாரி, ஓய்வுபெற்ற மகப்பேறு உதவியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் வயதுமுதிர்வு காரணமாக 30.06.2005 அன்று ஓய்வு பெற்றவருக்கு முழுஓய்வூதியப் பயன்கள் அளிக்க இயலாத நிலையில் தற்காலிக ஓய்வூதியம் மட்டுமே பெற்றுவருவதாலும், இவர் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் நடத்தும் தமிழ்மொழி தேர்வில் 3 முறை கலந்து கொண்டு தேர்ச்சி பெறாத நிலையிலும் இவர் சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து 34 ஆண்டுகள் எந்தவித குற்றச்சாட்டுகளும் இல்லாமல் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளதாலும் தமிழ் மொழியில் தேர்ச்சி பெறாததால் மேற்கூறிய அரசாணையின்படி தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண்.இ1/719/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 16.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :141/2010 பொருள் எண்.11

**<u>துறைத் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்</u>**

திரு. கே. விஸ்வநாதன், உதவியாளர், கட்டடதுறையில் 31.03.2009 அன்று வயதுமுதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் உதவியாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்–1ல் தேர்ச்சி பெறவில்லை என்பதால் தேர்வுநிலை ஊதியம் மற்றும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

தனியர் ஐந்து முறை சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறவில்லை என்பதாலும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இருப்பதாலும் தனியர் கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசின் தளர்வாணை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசின் தளர்வாணை பெறுவதற்கு காலதாமதமாகும் என்பதால் தனியருக்கு தற்காலிக ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தனியருக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதி 2009ன்படி ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு அதனடிப்படையில் திருத்திய ஊதியத்தின் அடிப்படையில் தற்காலிக ஓய்வூதியப்பயன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும், மன்றத்திற்கும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறையால் 06.10.2009 அன்று வழங்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.181ல் கணக்கு தேர்வு மற்றும் மொழித் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத சென்னை மாநகராட்சி பணியாளர்கள் பிரிவு வகுப்பு 1 முதல் 4 வரை, மன்றத்தின் ஒப்புதல் பெற்று தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

தனியர் 5 முறை சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்–1 தேர்வில் கலந்து கொண்டு எழுதியும் தேர்ச்சி பெறாமைக்கான சான்றிதழினை அளிக்கும்படி செயலாளர், தமிழ்நாடு அரசு தேர்வாணைய குழுமத்தை கேட்டுக் கொள்ளப்பட்டது.

25.01.2010 நாளிட்ட சார் செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–2 அவர்கள் தனியர் சார் நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு பாகம்–1 தேர்வினை எழுதிய விவரம் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

| வ.எண். | தேர்வு எழுதிய மாதம் மற்றும் ஆண்டு | பதிவு எண். | தேர்வின் முடிவு |
|---|---|---|---|
| 1. | நவம்பர் 1987 | 10051 | தேர்வு எழுதியுள்ளாரா என கண்டறிவதற்குரிய ஆவணங்கள் 23 ஆண்டுகள் ஆனதால் பதிவறையில் நிறுத்தி வைப்பதற்கான காலகெடு முடிவுற்றதால் அழிக்கப்பட்டுவிட்டது. |
| 2. | மே 2004 | 003255 | தேர்ச்சி பெறவில்லை |
| 3. | டிசம்பர் 2004 | 002750 | தேர்ச்சி பெறவில்லை |
| 4. | மே 2005 | 002818 | தேர்ச்சி பெறவில்லை |
| 5. | டிசம்பர் 2008 | 003535 | தேர்ச்சி பெறவில்லை |

தனியர் ஐந்து முறை தேர்வு எழுதியதற்கான விவரங்கள் ஏற்கனவே இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்து மேற்கண்ட தேர்விலிருந்து தேர்ச்சி பெறாமைக்கு

தளர்வாணை பெற்று உதவியாளர் பதவியினை வரன்முறை செய்த பின்பு ஓய்வூதியப் பயன்கள் முழுவதும் வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

தனியர் அவர்கள் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் கொல்லாவாக 19.08.1972 அன்று பணியில் சேர்ந்தார் மேலும் பணக்கணக்கராக 21.02.1974 அன்று பதவி உயர்வு பெற்று பணக்கணக்கராக பணிப்புரிந்து மீண்டும் 23.03.1978 அன்று இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று இளநிலை உதவியாளராக பணிபுரிந்து கடந்த 10.11.1986 அன்று உதவியாளராக பதவி உயர்வு பெற்று 31.01.1987 வரை உதவியாளராக பணிபுரிந்து, பொதுத்துறையால் உதவியாளர் பணியிடம் காலி இல்லாத காரணத்தினால் மீண்டும் இளநிலை உதவியாளராக 01.02.1987 முதல் பதவி இறக்கப்பட்டு 02.08.1987 வரை இளநிலை உதவியாளராக பணிபுரிந்துள்ளார். மீண்டும் 03.08.1987 முதல் உதவியாளராக பதவி உயர்வு பெற்று 31.03.2009 வரை உதவியாளராக பணிப்புரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.03.2009 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். தனியர் 21 ஆண்டுகள் 10 மாதங்கள் மற்றும் 20 நாட்கள் உதவியாளராக பணிபுரிந்துள்ளார்.

எனவே, கட்டடதுறையில் உதவியாளராக பணியாற்றி 31.03.2009 அன்று வயதுமுதிர்வு ஓய்வு பெற்ற திரு. கே. விஸ்வநாதன் என்பவர் 5 முறை சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்–1 ஐ எழுதி தேர்ச்சி பெறவில்லை என்பதாலும், தனியர் ஒய்வு பெற்றுவிட்டதாலும், 06.10.2009 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3)ல் தெரிவித்துள்ள அதிகார பகிர்ந்தளிப்பின்படி தனியர் துறைத் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து தளர்வாணை வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>க.து.ந.க.எண். டி1 / 037 / 2007</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 12.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :142/2010 பொருள் எண்.12

**<u>பணியமைப்பு</u>**

திருமதி. M. மகாலெட்சுமி, திருமதி.R. மகாலெட்சுமி, திரு. K. சேகர், ஆகியோரின் மனுவில் தாங்கள் மூவரும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சென்னை மாநகராட்சி கல்வி துறையின் கீழ் இயங்கி வரும் எக்ராட் பிரிவில் சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் சமுதாய கல்லூரிகளுக்கான அமைச்சுப் பணிகளை செவ்வனே செய்து வருகிறோம். தாங்கள் மிகவும் வறுமையில் குடும்பம் நடத்துகின்றோம். ஆகவே அரசு ஆணை (நிலை) எண் : 22 பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 28.02.2006–ன்படி சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திற்கு அரசு வழங்கியுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்ட பதவிகளுக்கு முறையே இளநிலை உதவியாளர், தட்டச்சர், அலுவலக உதவியாளர் பதவிகளில் தங்களை பணிவரன் முறை செய்து காலமுறை ஊதியம் வழங்க ஆவனம் செய்யும்படி கோரி 13.11.2009 நாளிட்ட மனு சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு சமர்பித்துள்ளனர். இவர்களின் மனுவை கல்வித்துறையில் பரிசீலிக்க கீழ்காணும் விவரங்கள் ஆணையர் அவர்களின் சிறப்பு கவனத்திற்கு சமர்பிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி கல்வி துறையின் கீழ் இயங்கும் தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் சமுதாய கல்லூரிகள் கடந்த 1999–ம் ஆண்டு முதல் கல்வி வேலை வாய்ப்பு வழிகாட்டல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (Educational Carrier Research Guidance and Training Centre – ECRAT) என்ற பிரிவாக செயல்பட்டு வருகிறது.

**<u>சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய விபரம்</u>**

சென்னை மாநகராட்சி கல்வி துறையின் கீழ் அரசு ஆணை நிலை எண் 55 தொழிலாளர் (ம) வேலை வாய்ப்பு துறை (எஸ்.2) நாள் 26.04.1999 ன்படி தொழிற் பயிற்சியுடன் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தர ஒரு தொழிற் பயிற்சி நிலையம் துவங்கி அவ்வரசாணையில் கூறப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றி தற்போது மத்திய அரசின் நிரந்தர அங்கீகாரத்துடன் செயல்பட்டு வருகிறது.

தொழிற் பயிற்சி நிலையத்தில் 1) Fitter 2) Electrician 3) Mech Motor Vehicle 4) Electronic Mechanic 5) Plumber 6) Computer Operator Cum Programming Assistant போன்ற பாடப் பிரிவுகளில், அரசாணையில் தெரிவித்ததின்படி மத்திய அரசின் National Council for Vocational Training (NCVT) அங்கீகாரம் பெற்று அங்கீகாரத்தில் பெற்றுள்ள எண்ணிக்கையில் மாணவர் சேர்க்கை செய்து பயிற்சி மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி பெற்று வருகிறார்கள். பயிற்சி முடித்த மாணவர்கள் வேலை வாய்ப்பு மற்றும் சுய வேலை வாய்ப்புகளில் பயன் பெறுகிறார்கள்.

அரசு ஆணை எண்.292, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்சி–3) துறை, நாள் 06.08.2004ன்படி சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திற்கு தொழில்நுட்ப பணியிடங்கள் மற்றும் தொழில்நுட்பம் அற்ற பணியிடங்கள்( Technical and non –Technical) சேர்த்து 22 பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் இனசுழற்சி முறையில் நியமனம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பதவிகளுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் கால சம்பள ஏற்ற முறையில் குறைந்த பட்ச சம்பளம் தொகுப்பூதியமாக வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையை மன்றத் தீர்மான எண் 367/2004 நாள் 20.09.2004–ன்படி அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் எண் **36789**/MC3/ **2007–1.** நாள் **06.11.2008**ன் படி அரசாணை எண் **292** / MC-III/ **2006** நாள் **06/08/2004**க்கு பின்வரும் திருத்திய ஆணையை அரசு அளித்துள்ளது. “சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின் மொத்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியமாக வழங்குவதற்கு பதிலாக காலமுறை ஊதியத்தில் அரசு விதிகளின்படி மாநகராட்சி நிதியில் இருந்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.” இத்திருத்திய ஆணையினை மன்றத் தீர்மானம் எண்.**72/2009**, நாள் **23.02.2009**படி அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையின்படி தொழிற் பயிற்சி நிலையத்தில் ஏழு தொழில் நுட்ப பணியாளர்கள் பணி செய்து வருகிறார்கள் மீதமுள்ள பணியாளர்களை நியமிக்க கோப்புகள் நடைமுறையில் உள்ளது. இந்த நியமனம் நடைபெறும் வரை சென்னை மாநகராட்சி இதர துறைகளில் உள்ள தொழில் நுட்பம் சார்ந்த பணியாளர்கள் மாற்று பணி முறையில் பணி செய்கிறார்கள்.

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்திற்கு அரசு ஆணை எண் **292** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி– III) துறை நாள் **06.08.2004**ல் உள்ள தொழில் நுட்பம் சார்ந்த பதவிகளுக்கு அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள பணி விதிகளை பின்பற்ற மன்றத்தின் அனுமதி பெற கோப்பு நடைமுறையில் உள்ளது. மேலும் அமைச்சு பணியாளர்களின் பணி விதிகள் ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் உள்ள அமைச்சு பணி விதிகளை தொடரப்படுகிறது.

தொழிற் பயிற்சி நிலையத்திற்கு அரசாணை **292–**ல் தோற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் அல்லாதோர் பதவிகளான – **6** அமைச்சுப் பணியாளர்கள் பதவிகளை அரசாணையில் கூறப்பட்டுள்ளபடி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணியமர்த்துவதற்கு பதிலாக சென்னை மாநகராட்சியில் தற்போது உள்ள விதிகளின் படி நியமனம் செய்ய அரசிடம் தெளிவுரை கேட்டு **27.06.2007** அன்று ஆணையரின் கடிதமும் **31.10.2007** அன்று இணை ஆணையர் (கல்வி) அவர்களின் கடிதமும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது – அதில், சென்னை மாநகராட்சி பணியாளர் வரைவு துணை விதிகளின் படி அலுவலக மேலாளர், பண்டக காப்பாளர் மற்றும் உதவியாளர் பதவிகளுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடியாக பணி நியமனம் செய்யாமல் ஊட்டப் பதவியில் இருந்து பதவி உயர்வு முறையில் பணி நியமனம் செய்ய தெளிவுரையும், இளநிலை உதவியாளர், தட்டச்சர், அலுவலக உதவியாளர் பதவிகளுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடியாக பணி நியமனம் செய்யாமல் தற்போது சென்னை மாநகராட்சியின் நடைமுறையில் உள்ள அரசாணையின் படி பணியில் இருந்து இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கவும் தெளிவுரையும் கேட்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பொருள் குறித்து அரசிடம் இருந்து **22.12.2008** நாளிட்ட அரசு கடிதத்தில் பணியாளர்களின் பணியிடங்களுக்கான பணி விதிகளின் நகல் கேட்டு கடிதம் பெறப்பட்டது. அதற்கு பொதுத்துறையின் விளக்கப்படி கல்வி அலுவலரின் கடிதம் **08.03.2009** நாளிட்டு அரசுக்கு சமர்பிக்கப்பட்டது. ஆனால் அரசிடம் இருந்து இக்கருத்துரு சம்மந்தமான திருத்திய ஆணைகள் இது வரை பெறப்படவில்லை.

**சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூாி பற்றிய விபரம்**

சென்னை மாநகராட்சி சார்பில், கல்வித்துறையின் கீழ், சமுதாயக்கல்லூாி ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் மாநகராட்சி பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திதருவதற்கான வழிவகைகள் செய்வதற்காக **1999–**ம் ஆண்டு துவங்கப்பட்டது.

**1999** ஆம் ஆண்டு முதல் சமுதாயக் கல்லூரிகள் தெற்கு , வடக்கு, மத்தியம் மற்றும் கிழக்கு வளாகங்கள் என **4** இடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் நடத்தப்படும் தொழிற் பயிற்சிகள் **1999** முதல் **2006** வரை ஓராண்டு தொழிற் பயிற்சி

படிப்புகள் முறையே 1) கணிப்பொறி நுட்பவியல் 2) செவிலியர் உதவியாளர், 3) உணவக மேலாண்மை, 4) கணிப்பொறி செயற்பாடு பராமரிப்பு பழுதுபார்ப்பு 5) அலுவலக மேலாண்மை 6) இரண்டு மற்றும் நான்கு சக்கர வண்டிகள் பழுது பார்ப்பு 7) ஸோனாலஜி உதவியாளர் பயிற்சி போன்றவை அளிக்கப்பட்டது.

2007 முதல் சமுதாயக் கல்லூரிகளில் மாறிவரும், சூழ்நிலைக்கு ஏற்ப இந்த கல்வி ஆண்டு வரையிலும் பின்வரும் 3 மாத குறுகிய கால பயிற்சி வகுப்புகள் தெற்கு மற்றும் வடக்கு வளாகங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. 1) Business Process Outsourcing (B.P.O ) 2) Customer Relation and Sales 3) Hospitality Services 4) Information Technology Enabled Services (ITES) 5) Electrical Technician 6) Cutting and Tailoring ஆகும். இந்த 3 மாத குறுகி கால தொழிற் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு பயிற்சி முடித்த மாணவ மாணவியர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தர ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

மன்றத் தீர்மான எண். 115/99 நாள் 22.02.99 மற்றும் மன்ற தீர்மான எண் 332/2000 நாள் 22.06.2000 ஆகிய மன்றத் தீர்மானங்களில் சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரிகள் அமைக்கவும் அதற்கு தேவையான பாடப்பிரிவுகள் , பதவிகள் மற்றும் அக்கல்லூரிகள் திறமையாக செயல்படுத்த வழிமுறைகளுக்கும் மன்றத்தின் ஒப்புதல் பெற்றப்பட்டு, இவ்வலுவலக கடிதம் க.து.ந.க.எண். டி1/27/2000 நாள் 04.072000 மூலம் , சமுதாயக் கல்லூரிக்கான பல்வேறு பணியிடங்கள் தோற்றுவிக்க கருத்துரு, அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து 17.01.2002 அன்று நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் நான்கு சமுதாயக் கல்லூரிகள் செம்மையாக இயங்க முழு நேர பயிற்சி ஆசிரியர்கள் –20, எழுத்தர் பதவிகள் – 4, அலுவலக உதவியாளர்கள் பதவிகள் – 4 போன்ற அதிதேவையான பதவிகளும் அடங்கும். இப்பதவிகளுக்கும் இதுவரை அரசிடம் இருந்து ஆணை பெறப்படவில்லை.

சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரிகளுக்கு தேவையான ஆசிரியர்கள் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை பகுதி நேரம் பணி செய்யவும் மற்றும் திறமையான ஆசிரியர்கள் Hour basis–ல் வெளியில் இருந்தும் நியமிக்கப்பட்டு சமுதாயக் கல்லூரி மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வந்தது. தற்போது 2007–ஆம் ஆண்டு முதல் சமுதாயக் கல்லூரி Courses Out sourcing செய்யப்பட்டு உள்ளது. ஆகவே ஆசிரியர்கள் தனியார் நிறுவனமே நியமிக்கப்பட்டுள்ளது.

**அமைச்சுப் பணியாளர்களின் விபரம்**

சென்னை மாநகராட்சி கல்வி துறையின் கீழ் 1999 ம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் ஒரு தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் சமுதாயக்கல்லூரிகள் நான்கு (திறன் மேம்பாடு தொழிற் பள்ளிகள் ) ஆகியவற்றின் அன்றாட நிர்வாகம் பணிகளை மேற்கொள்ள கல்வி துறையின் கீழ் பணி புரிந்து வருபவர்கள் விபரம்,

| வ. எண் | பணியாளர்களின் பெயர்கள் | பதவி | பணியில் அமர்த்தப்பட்ட நாள் | மாத தொகுப்பூதியம் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.எம். மகாலெட்சுமி | எழுத்தர்/எக்ராட் | பிப்ரவரி 1999 | ரூ.2500/– |
| 2. | திருமதி.ஆர்.மகாலெட்சுமி | கணிப்பொறி, தட்டச்சு இயக்குபவர் | பிப்ரவரி 1999 | ரூ. 850/– |
| 3. | திரு. கே. சேகர் | அலுவலக உதவியாளர் | ஆகஸ்டு 1999 | ரூ. 850/– |

சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் சமுதாய கல்லூரிகளின் அலுவலக பணிகளில் நிரந்தர பணியாளர்கள் ஒருவரும் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட மூன்று தனியர்களும் 1999ஆம் ஆண்டு துணை ஆணையர் (கல்வி) அவர்களால் தற்காலிக தொகுப்பூதியத்தில் நேரடி நியமனம் செய்யப்பட்டனர்.

அச்சமயம் நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு கல்வித்துறையில் போதிய நிதி இல்லாத காரணத்தால் ஊதியம் வழங்க இயலாத நிலையில் இவர்களுக்கு ஊதியம்

2001 மே மாதம் வரை அறிவொளி இயக்கத் திட்டத்தில் இருந்து பெற்றும் 2001 ஜுன் மாதம் முதல் 2002 செப்டம்பர் மாதம் வரை சமுதாயக் கல்லூரி மாணவர்களிடம் இருந்து வசூலிக்கும் தொகையில் இருந்தும் ஊதியம் வழங்கப்பட்டது.

மன்றத் தீர்மானம் எண்.363/2002, நாள் 30.09.2002படி 2002 அக்டோபர் மாதம் முதல் இன்று வரை சென்னை மாநகராட்சி வருவாய் நிதியில் இருந்து தொகுப்பூதிய செலவீனம் கல்வித்துறை சமுதாயக் கல்லூரிகள் (25) பணியாளர்கள் செலவு – 116 நிரந்தரமற்ற பணியாளர்கள் ஊதியம் என்ற கணக்குத் தலைப்பிலிருந்து பெற்று வருகிறார்கள்.

## <u>தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் சமுதாயக் கல்லூரிகளில் மேற்கண்ட மூன்று நபர்களின் அலுவலக பணிகளின் விவரங்கள்</u>

மேற்கண்ட சமுதாயக் கல்லூரி பயிற்சிகளுக்கு தேவையான விண்ணப்ப படிவங்களை மாணவ மாணவியர்களுக்கு வழங்கி, மாணவ மாணவிகளை தேர்வு செய்து மேற்கண்ட வளாகங்களுக்கு அனுப்பி வைத்தல், பயிற்சி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடு செய்தல், ஓராண்டு பயிற்சி வகுப்புகளை முடித்த மாணவ மாணவிகளை அவர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய தக்க அறிவுரை வழங்குதல், தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் சமுதாய கல்லூரியின் மேற்கண்ட வளாகங்களின், தொலைபேசி, மின் கட்டணம் போன்றவற்றின் பட்டியல் நேர் செய்தல், தொழிற் பயிற்சி நிலைய ஆரம்ப கால ஆயத்த பணிகளான கருவிகள், உபகரணங்கள், தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு வெவ்வேறு பட்டியல்கள் தயாரித்தல் – உதவி செய்தல் – தொழிற் பிரிவுகள் NCVT அங்கீகாரம் பெறுவதற்கான ஆரம்ப பணிகள், வளாகங்களில் பணிபுரியும் துப்புரவாளர், கழிவறை துப்புரவாளர், மற்றும் தொழிற் பயிற்சி ஆசிரியர்களின் ஊதியம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அலுவலக பணிகள், சமுதாயக் கல்லூரிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அலுவலக பணிகள், சமுதாயக் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு National Institute of Open Schooling (NIOS) மூலம் தேர்வுகள் நடத்தி மதிப்பெண் சான்றிதழ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல். மாணவ மாணவியர்களின் தகுதிக்கு ஏற்ப தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவதற்கான நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளுதல்.

தொழிற் பயிற்சி நிலையத்திற்கு மத்திய அரசின் நிரந்தர NCVT அங்கீகாரம் பெறும் ஆய்வு அறிக்கையின் பெயர் பட்டியலில் தேவையான பணியாளர்கள் விவரங்கள் தரப்பட வேண்டிய இணைப்பு – B யில், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு தனியர்களின் பெயர்களை குறிப்பிட்டு புதுடெல்லிக்கு அனுப்பப்பட்டு NCVT ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும் மேற்கண்ட பதவிகளுக்கு மன்றத் தீர்மானங்கள் 34/2005 நாள் 20.01.2005, 57/2006 நாள் 2.2.2006, 136/2007, நாள் 25.4.2007, 643/2008 நாள் 30.12.2008 பெறப்பட்டுள்ளது. மன்றத் தீர்மான எண்.643 நாள் 30.12.2008ன்படி, தற்போது பெறப்படும் மாத தொகுப்பூதியம் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகின்றது.

| வ.எண். | பணியாளர்களின் பெயர்கள் | பதவி | தற்போது பெறும் மாத தொகுப்பூதியம் |
|---|---|---|---|
| 1 | திருமதி. எம். மகாலெட்சுமி | இளநிலை உதவியாளர் | ரூ.4250/– |
| 2. | திருமதி. ஆர். மகாலெட்சுமி | தட்டச்சர் | ரூ.4250/– |
| 3. | திரு. கே. சேகர் | அலுவலக உதவியாளர் | ரூ.2250/– |

தனியர்கள் பிப்ரவரி 1999 முதல் மே 2009 வரை அவர்கள் பணிக்கு வந்த நாள்கள் விவரங்கள் வருகை பதிவேட்டின் ஒளி நகலுடன் அதற்குரிய உயர் அதிகாரியிடம் இருந்து சான்றொப்பம் பெறப்பட்டுள்ளது. இந்த நாட்களில் இவர்கள் தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் சமுதாய கல்லூரிகளின் அலுவலக பணிகளையே மேற்கொண்டுள்ளனர். மேற்காணும் 3 நபர்கள் மேற்படி பணிகாலத்தில் எவ்வித குற்றசாட்டுகளுக்கும் ஆட்படாமல் தங்களுக்கு இட்ட பணிகளை செவ்வனே செய்து வருகின்றனர்.

மேலும் திருமதி. எம். மகாலெட்சுமி, மற்றும் திருமதி. ஆர். மகாலெட்சுமி ஆகிய இருவரும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு தொடர்ந்து புதுப்பித்து கொண்டு வருகின்றனர். அதன் ஒளி நகல் சான்றொப்பம் பெற்று சரி பார்க்கப்பட்டுள்ளது. மேற்படி நபர்களின் கல்வி சான்றிதழ்கள் சான்றொப்பம் பெற்று சரி பார்க்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | கல்வித்தகுதி | இனம் |
|---|---|---|---|
| 1 | திருமதி. எம். மகாலெட்சுமி<br>இளநிலை உதவியாளர் | எம்.ஏ (ஆங்கிலம்)<br>டிப்ளமோ இன் கம்பியூட்டர் அப்ளிகேசன், அரசு நடைமுறை நூல் தேர்ச்சி (DOM) | ஆதிதிராவிடர் ( SC ) |
| 2 | திருமதி. ஆர். மகாலெட்சுமி<br>தட்டச்சர் | பி.காம்., எம்.ஏ (பொருளாதாரம்)<br>டிப்ளமோ இன் ஆபிஸ் ஆட்டோமேசன், தட்டச்சு (தமிழ், ஆங்கிலம் ) முது நிலை தேர்ச்சி, அரசு நடைமுறை நூல் தேர்ச்சி (DOM) | பிற்படுத்தப் பட்டோர் ( BC ) |
| 3 | திரு. கே. சேகர்<br>அலுவலக உதவியாளர் | 8ஆம் வகுப்பு தேர்ச்சி | பிற்படுத்தப் பட்டோர் ( BC ) |

மேலும் திருமதி. எம். மகாலெட்சுமி மற்றும் திருமதி. ஆர். மகாலெட்சுமி இருவரும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் தேர்வாணையம் டிசம்பர் 2003ல் நடத்திய (DOM) “ அரசு அலுவலக நடைமுறை நூல் “ தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் மாநகராட்சியின் நடைமுறை விதிகள் / அலுவலக விதிகள் இவர்களின் அனுபவத்தின் காரணமாக தெரிந்துள்ளனர்.

இவர்களின் தகுதிகள், அனுபவம் மற்றும் தொழிற் பயிற்சி நிலையம் துவங்குவதற்கு உண்டான ஆயத்தப் பணிகளுக்கு இவர்களின் பணியை உட்படுத்தியதாலும் மற்றும் இன்று வரை நடைபெற்றுவரும் ECRAT பிரிவு அலுவலக பணிகளுக்கும் இவர்களுடைய பணி தேவைப்படுவதால், அரசாணை (நிலை) எண் 22 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 28.02.2006 –ன்படி 01.01.2006 அன்றைய நிலையில் 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளவர்களின் பணியினை பணி வரன்முறை செய்ய தெரிவிக்கப்பட்டதன் படி தொழிற் பயிற்சி நிலையத்திற்கு அரசாணை எண் 292ல் தோற்றுவித்த அமைச்சு பணியிடமான இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும்

அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களில் தற்போது வரை யாரையும் பணியமர்த்தாமல் காலியாக உள்ளதால் இக்காலி பணியிடங்களில் மேற்காணும் மூவரையும் பணி நியமனம் செய்ய பரிசீலிக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் மூன்று தற்காலிக அமைச்சு பணியாளர்களையும் அரசாணை (நிலை) எண் 22 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 28.02.2006 –ன்படி அரசாணை எண் 292ல் உள்ள அமைச்சு பணியிடமான இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களில் பணி வரன்முறை செய்ய கீழ் கண்டவற்றிற்கு அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும் . இவர்களின் தேர்வு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நியமிக்கப்படாததால்

1) வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்படாமைக்கு தளர்வாணையும்
2) இனச்சுழற்சி முறையை பின்பற்றாததற்கு தளர்வாணையும்
3) இவர்களில் திரு. K. சேகர், தற்காலிக அலுவலக உதவியாளரின் வயது 52 ஆவதால் இவருக்கு வயது தளர்வாணையும், போதுமான கல்வித் தகுதி இல்லாமைக்கு அது குறித்த தளர்வாணையும்,
4) இக்கோப்பில் அரசாணை எண் 292–விற்கு அரசின் விளக்கம் கேட்டு ஆணையரின் 27.06.2007 மற்றும் இணை ஆணையர் (கல்வி) அவர்கள் 31.10.2007 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்தது யாதெனில் ,

அ) சென்னை மாநகராட்சி பணியாளர் வரைவு துணை விதிகளின் படி அலுவலக மேலாளர், பண்டக காப்பாளர் மற்றும் உதவியாளர் பதவிகளுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடியாக பணி நியமனம் செய்யாமல் ஊட்டப் பதவியில் இருந்து பதவி உயர்வு முறையில் பணி நியமனம் செய்ய விளக்கம் கேட்டும்,

ஆ) இளநிலை உதவியாளர், தட்டச்சர், அலுவலக உதவியாளர் பதவிகளுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடியாக பணி நியமனம் செய்யாமல் தற்போது சென்னை மாநகராட்சியின் நடைமுறையில் உள்ள அரசாணையின் படி பணியில் இருந்து இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கவும் திருத்தம் கேட்கப்பட்டது

இதில் இனம் ‘ஆ’ ல் மூன்று பதவிகளுக்கு பணியில் இருந்து இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்க கேட்டதற்கு பதிலாக மேற்காணும் மூன்று நபர்களையும் பணி நியமனம் செய்ய திருத்தம் பெறவேண்டும்.

எனவே கீழ்கண்ட இனங்களுக்கு நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

1) அரசு ஆணை எண் 292 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி–III) துறை நாள் 06.08.2004–ல் உள்ள அமைச்சுப் பதவிகளுக்கு சென்னை மாநகராட்சி பணியாளர் வரைவு துணை விதிகளின் படி அலுவலக மேலாளர், பண்டக காப்பாளர் மற்றும் உதவியாளர் பதவிகளுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடியாக பணி நியமனம் செய்யாமல் ஊட்டப் பதவியில் இருந்து பதவி உயர்வு முறையில் பணி நியமனம் செய்ய அரசின் திருத்திய ஆணை வேண்டியும்

2) அரசு ஆணை எண் 292 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி– III ) துறை நாள் 06.08.2004–ல் உள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர், அலுவலக உதவியாளர் பதவிகளுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடியாக பணி நியமனம் செய்யாமலும் தற்போது சென்னை மாநகராட்சியின் நடைமுறையில் உள்ள அரசாணையின் படி பணியில் இருந்து இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்குவதற்கு பதிலாக 1. திருமதி. எம். மகாலெட்சுமி (இளநிலை உதவியாளர்), 2. திருமதி. ஆர். மகாலெட்சுமி (தட்டச்சர்) 3. திரு.கே. சேகர். (அலுவலக உதவியாளர்) மூவரையும் நியமிக்க அரசின் திருத்திய ஆணை வேண்டியும்

**3)** தற்சமயம் சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் எக்ராட் பிரிவில் தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் சமுதாய கல்லூரியில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதியம் பெற்று அலுவலக பணிகளை மேற்கொள்ளும் **1.** திருமதி. எம். மகாலெட்சமி (இளநிலை உதவியாளர்), **2.**திருமதி.ஆர். மகாலெட்சுமி (துட்டச்சர்) **3.** திரு.கே. சேகர். (அலுவலக உதவியாளர்) மூவரையும் தற்சமயம் வகித்து வரும் பதவிகளில் இவர்களின் பதவிகளுக்கு ஏற்ப தமிழ்நாடு அரசு/ சென்னை மாநகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணிவரன் முறை செய்ய அரசின் அனுமதி வேண்டியும்,

**4)** தனியர்கள் மூவரும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் இல்லாமல், நேரடி நியமனம் செய்யப்பட்டதற்கு அரசின் தளர்வாணை வேண்டியும்,

**5)** தனியர்களில் திரு.கே. சேகர், அலுவலக உதவியாளரின் வயது தகுதிக்கு அரசின் தளர்வாணை வேண்டியும்,

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>க.து.ந.க.எண்.இ4/395/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 15.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :143/2010 பொருள் எண்.13

**<u>பணியமைப்பு</u>**

சென்னை மாநகராட்சி, கல்வித்துறையில் தற்போது உள்ள பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியிடங்களான உதவியாளர்–11, இளநிலை உதவியாளர்–9, பதிவுரு எழுத்தர்–11, அலுவலக உதவியாளர்கள்–26 ஆகிய 57 பணியிடங்கள் கடந்த 2004ம் ஆண்டு முதல் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது. இப்பணியிடங்கள் அரசின் அனுமதியுடன் TNPSC மூலமாகவும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாகவும் நிரப்பப்பட வேண்டும். இதற்கு கால அவகாசம் தேவைப்படும் என்பதால் தற்போது சென்னை மாநகராட்சி பள்ளிகளின் வளர்ச்சி மற்றும் நிர்வாகத்திறனை மேம்படுத்தும் வகையில் கீழ்கண்ட இனங்களுக்கு அரசின் ஆணை பெற செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, அவர்களுக்கு கடிதம் அனுப்ப நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. தற்காலிக ஏற்பாடாக சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், பதிவுரு எழுத்தர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களில் 57 பணியாளர்களை அயற்பணியில் சென்னை மாநகராட்சி கல்வித்துறைக்கு அனுப்பவும், கல்வித்துறையில் ஆசிரியரல்லாத காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்போது அப்பணியாளர்களை மீண்டும் சென்னை மாநகராட்சி பணிக்கு திரும்ப அழைத்துக் கொள்ளவும்.

2. அவ்வாறு அனுப்பப்படும் பணியாளர்களுக்கு அரசு நிதியில் இருந்து ஊதியம் ஒய்வூதிய பங்கு தொகை ஆகியவற்றை பெற்று வழங்கவும்.

3. அயற்பணியில் அனுப்பப்படும் 57 பணியாளர்களுக்கு இணையாக சென்னை மாநகராட்சியில் தற்போதுள்ள ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில் பதவி வாரியாக முற்றிலும் தற்காலிகமாக பணியிடங்களை சேர்த்துக் கொள்ளவும்.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்5/0126/10**
**ஆணையாளர் அவர்களின் 04.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :144/2010 பொருள் எண்.14

**பதவி பெயர்கள் மாற்றம்**

அரசாணை (நிலை) எண்.2151, இந்திய மருத்துவம், ஹோமியோபதி மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 04.11.1988 தெரிவித்துள்ளபடி மகப்பேறு உதவியாளர் / பல்நோக்கு சுகாதார பணியாளர் (Auxiliary Nurse Midwife / Multipurpose Health Worker (Female) பணியிடங்கள் "கிராம சுகாதார செவிலியர் (Village Health Nurse)" எனவும், பெண் சுகாதார பார்வையாளர் / பல்நோக்கு சுகாதார பார்வையாளர் (Lady Health Visitor / Multipurpose Health Supervisor (Female) பணியிடங்கள் பகுதி சுகாதார செவிலியர் "Sector Health Nurse" என்றும் பெயர் மாற்றம் செய்து ஆணை பெறப்பட்டது.

இவ்வரசாணையை சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்துமாறு பல்வேறு சுகாதார பணியாளர் சங்கங்கள் கோரியிருந்தனர். இவ்வரசாணை சென்னை மாநகராட்சிக்கு பொருந்தாத நிலை உள்ள காரணத்தால் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இதன் அடிப்படையில் அனைத்து மாநகராட்சிகளில் பணிபுரியும் பல்நோக்கு சுகாதார பணியாளர், மகப்பேறு உதவியாளர், ஏ.என்.எம் மற்றும் சுகாதார பார்வையாளருக்கு பதவிகளில் உள்ளவர்களுக்கு பதவி பெயர் மாற்றம் செய்து அரசாணை (2டி) எண்.01 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள் 06.01.2010ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வரசாணையை சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து நலத்துறை (ம) மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் பணி செய்து வரும் பல்நோக்கு சுகாதார பணியாளர், மகப்பேறு உதவியாளர், ஏ.என்.எம் மற்றும் சுகாதார பார்வையாளருக்கு பொருந்துவதால் இவ்வரசாணையை மேற்கண்ட பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தலாம். இதனால் சென்னை மாநகராட்சிக்கு எவ்வித நிதி இழப்பீடும் ஏற்படாது.

எனவே அரசாணை (2டி) எண்.01 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை நாள் 06.01.2010ல் உள்ளவாறு மாவட்ட குடும்ப நலத்துறை (ம) நலத்துறையின் கீழ் பணிபுரியும் பல்நோக்கு சுகாதார பணியாளர் (MPHW), ஏ.என்.எம்., மகப்பேறு உதவியாளர்கள் (Maternity Assistant) மற்றும் சுகாதாரப் பார்வையாளர்களுக்கு கீழ் கண்டுள்ளவாறு:

| மாநகராட்சிகளில் தற்போதைய பதவி பெயர் | மாற்றப்படும் பதவிப் பெயர் |
|---|---|
| ஆக்ஸிலரி உதவி செவிலியர் / பல்நோக்கு சுகாதார பணியாளர் மற்றும் மகப்பேறு உதவியாளர் (Auxiliary Nurse Midwife / Multipurpose Health Worker (Female) / Maternity Assistant) | நகர சுகாதார செவிலியர் (Urban Health Nurse) |
| சுகாதார பார்வையாளர் (Health Visitor) | பகுதி சுகாதார செவிலியர் (Sector Health Nurse) |

பதவி பெயர் மாற்றம் செய்து நடைமுறைப்படுத்த நியமனக்குழு மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**இ.பொ.து.நக.எண்.எம்7/7816/99**
**ஆணையாளர் அவர்களின் 23.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :145/2010 பொருள் எண்.15

**ஓட்டுநர் பதவிக்கான தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சியில் மண்டலங்களில் பணிபுரிந்து வரும் நான்காம் நிலை நிரந்தர துப்புரவு பணியாளர்கள் / சாலை பணியாளர்கள் கனரக ஓட்டுநர் உரிமத்தின் அடிப்படையிலும் தேவையின் அடிப்படையிலும் 69 பேர்கள் (துப்புரவு பணியாளர்கள் / சாலை பணியாளர்கள்) பணிமாற்று அடிப்படையில் ஓட்டுநர்களாக பணியமர்வு செய்யப்பட்டார்கள். இந்த 69 நிரந்தர நான்காம் நிலை பணியாளர்களின் பட்டியல் அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் பட்டியலில் எண். 64, 65, 66 (ம) 67 ல் உள்ள நான்கு பணியாளர்கள் காலமாகிவிட்டார்கள். பட்டியலில் எண். 68 ல் உள்ள திரு.எஸ்.எல். பார்த்தசாரதி, அவர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளார் மற்றும் பட்டியலில் எண். 69 ல் உள்ள திரு.ஜி. ஜெயராமன், அவர்கள் இளநிலை உதவியாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ள நிலையில் ஓட்டுநர் பதவி உயர்வு தேவையில்லை என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பாணையில் “நீதிமன்ற பேராணை எண்.9059/2006ல், குறிப்பிட்டுள்ள – இரண்டாம் பிரதிவாதி ஆணையர், சென்னை மாநகராட்சி மனுதாரர் கழகத்தின் 64 மாற்றுப்பணி அடிப்படையில் பணிபுரியும் ஓட்டுநர்கள் (துப்புரவு பணியாளர்கள் மற்றும் சாலை பணியாளர்கள்) மற்றும் நீதிமன்ற பேராணை எண்.27020/08ல் குறிப்பிட்டுள்ள 28 தினக்கூலி ஓட்டுநர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கான கருத்துரு இவ்வாணை பெறப்பட்ட 2 வார காலதிற்குள் முதலாம் பிரதிவாதி அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும், இக்கருத்துருவை இரண்டாம் பிரதிவாதியிடமிருந்து பெற்றவுடன் முதல் பிரதிவாதி அதன்பிறகு தகுதி மற்றும் சட்ட விதிகளின்படி இதனை பரிசீலித்து 6 வார காலத்திற்குள் உரிய ஆணை வழங்க வேண்டும் என்றும், நான்காம் நிலை பணியாளர்களாக பணிபுரியும் 64 ஓட்டுநர்கள் மற்றும் 28 தினக்கூலி ஓட்டுநர்களின் முதுநிலை பட்டியல் குறித்து இரண்டாம் பிரதிவாதி உரிய காலத்தில் முடிவு செய்ய வேண்டும்'' என்றும் உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட 28 தற்காலிக தினக்கூலி ஓட்டுநர்களை பணி நிரந்தரம் செய்யும் பொருட்டு முன்மொழிவு 24.07.2009 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்பொழுது சென்னை மாநகராட்சியில் நிரந்தர ஓட்டுநர்களின் காலிப் பணியிடங்கள் 101 ஆக உள்ளது. மாற்றுப்பணி அடிப்படையில் ஓட்டுநர்களாக பணிபுரிகின்ற 69 நான்காம் நிலை பணியாளர்களின் விவரங்கள் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் கீழ்வருமாறு:

1. எட்டாம் வகுப்பிற்கு மேல் கல்வி பயின்றவர்கள் – 11
2. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் – 11
   (ஓட்டுநர்களுக்கான கல்வித்தகுதி)
3. எட்டாம் வகுப்பிற்கு கீழ் கல்வி பயின்றவர்கள் – 18
4. கல்வி பயிலாதவர்கள் – 23
5. தமிழ்மொழி தேர்ச்சி பெறாதவர்கள் – 23
6. பதவி உயர்வில் சென்றவர்கள் – 1
7. விருப்பமின்மை தெரிவித்தவர்கள் – 1
8. காலமானவர்களின் விவரம் – 4

சென்னை மாநகராட்சியில் ஓட்டுநர் பதவிக்கு கல்வித் தகுதி மற்றும் வயது தளர்வாணை பெற நியமனக்குழுவிற்கு அதிகாரம் அளித்து அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 06.10.2009ல் அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வரசாணை மாமன்ற தீர்மான எண்.371/2009 நாள்.29.10.2009 மூலம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் 62 நான்காம் நிலை நிரந்தர பணியாளர்களை (அட்டவணையில் கண்டுள்ள பணியாளர்கள்) நிரந்தர ஓட்டுநர் காலிப்பணியிடத்தில் ரூ. 5200 – 20200 + 2000 (தர ஊதியம்) என்ற காலமுறை ஊதிய விகிதத்தில், இதர படிகளுடன் பதவி உயர்வு செய்யவும்,

2. ஓட்டுநர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச கல்வித் தகுதி பெறாத ஓட்டுநர்களாக பணிபுரிந்து வரும் 18 நான்காம் நிலை பணியாளர்களுக்கு மற்றும் கல்வியே பயிலாத ஓட்டுநர்களாக பணிபுரிந்து வரும் 23 நான்காம் நிலை பணியாளர்களுக்கும் கல்வித் தகுதியிலிருந்து விலக்களிக்கவும்,

3. தமிழ் மொழி தேர்ச்சி பெறாத ஓட்டுநர்களாக பணிபுரிந்து வரும் 23 நான்காம்நிலை பணிளாளர்களுக்கு தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணை அளிக்கவும்,

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**சு.து.ந.க.எண்.கா.பி.அ1/060/2009**
**ஆணையர் அவர்களின் 08.01.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :146/2010 பொருள் எண்: 16

**சென்னை மாநகராட்சி – சுகாதாரத்துறை – கால்நடைப்பிரிவு – கால்நடை உதவி மருத்துவர் திருமதி.எம்.ஸ்ரீதேவி – அரியானாவில் நடைபெற்ற கால்நடை பயிற்சியில் கலந்து கொண்டு சென்னைக்கு வருவதற்கு விமானத்தில் பயணம் செய்ததது – கால்நடை உதவி மருத்துவர் விமானத்தில் வந்ததை – அனுமதி அளித்து – அதற்குரிய தொகையை நேர் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி.**

* * * * *

அரியானா மாநிலத்தில் உள்ள பரிதாபாத் நகரத்தில் அகில இந்திய கால்நடை மருத்துவ சங்கத்தின் சார்பில் இந்தியாவில் உள்ள கால்நடை மருத்துவர்கள், நாய் பிடிப்பவர்களுக்கு மூன்று வாரம் (4.5.09 முதல் 23.5.09 வரை) நடைபெற்ற பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காக சென்னை மாநகராட்சி சார்பில் டாக்டர். P.K. ஆண்டவன் மற்றும் டாக்டர். எம்.ஸ்ரீதேவி ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களுக்கு முன்பணமாக ரூ.15000/– வழங்கப்பட்டது.

மேற்படி இரு கால்நடை உதவி மருத்துவர்களும் அரியானா மாநிலத்தில் உள்ள பரிதாபாத் நகரில் 04.05.09 முதல் 23.05.09 வரை நடைப்பெற்ற பயிற்சியில் கலந்து கொண்டு பின்னர் பரிதாபாத் நகரிலிருந்து சென்னைக்கு வருவதற்கு டாக்டர். ஸ்ரீதேவி, கால்நடை உதவி மருத்துவர் அவர்களுக்கு இரயிலில் இடம் கிடைக்காததால் தனியர் விமானத்தில் பயணம் செய்ததாக தெரிவித்துள்ளார். தனியர், குறைந்த அவகாசத்தில் அரியானாவிற்கு செல்ல ஆணை கிடைக்கப் பெற்றதாகவும், முன்பதிவு பயண சீட்டு இறுதிவரை கிடைக்கப்பெறாததால், உடனடியாக பணியில் சேர வேண்டியிருந்ததாலும், விமானத்தில் பயணம் செய்ய அவசியம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார்.

ஆணையர் அவர்கள் தனியரது விமான பயணக் கட்டணத்தை நேர் செய்ய பின்னேற்பு செய்துள்ளார். மேலும் வரும் காலங்களில் இத்தகைய நிகழ்வுகளை தவிர்க்க வேண்டியும் வலியுறுத்தியுள்ளார்.

பயிற்சியில் கலந்து கொள்ள பெறப்பட்ட முன் பணத்தை நேர் செய்யும் பொருட்டு பகுதி கணக்கு குழுமத்திற்கு (சு) அனுப்பப்பட்ட பட்டி தனியர் டாக்டர். எம். ஸ்ரீதேவி, அவர்கள் ரூ.6500/– ஊதிய விகிதத்தை சார்ந்த காரணத்தால் ரயிலில் பயணம் செய்ய தகுதியுடையவர் என்றும், விமானத்தில் பயணம் செய்ய இயலாது என கோப்பு திருப்பப்பட்டது.

நிதி ஆலோசகர் அவர்களுக்கு கால்நடை உதவி மருத்துவர் டாக்டர். எம்.ஸ்ரீதேவி, சமர்ப்பித்த மனுவின் மீது அவர் ரூ.6500/– ஊதிய விகிதத்தை சார்ந்தவர் என்ற காரணத்தால் தனியரது கோரிக்கையை சிறப்பு நிகழ்வாக கருதி மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று விமானக் கட்டணம் ரூ.6113/– யை நேர் செய்யலாம் என்று நிதி ஆலோசகர் அவர்கள் தனது குறிப்புரையில் தெரிவித்துள்ளார்.

எனவே, டாக்டர்.எம்.ஸ்ரீதேவி, கால்நடை உதவி மருத்துவர் அவர்கள் அரியானாவிலிருந்து சென்னைக்கு வந்ததற்கான விமானப் பயணக் கட்டணம் ரூ.6113/–க்கு சிறப்பு அனுமதி அளித்து, தனியரின் செய்கையை சிறப்பு நிகழ்வாக கருதி தனியருக்கு வழங்க நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"03.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.08/2010, நாள் 03.03.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

‘‘12.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.63/2010 நாள் 12.03.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.)பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.அ1/ 3161 /2008**
**ஆணையர் அவர்களின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :147/2010 பொருள் எண்.17

**கல்வி துறை – சென்னை மாநகராட்சி தொடக்க / நடுநிலைபள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எல்காட் நிறுவனத்தின் மூலம் கணினி வழி கல்வியியல் பயிற்சி பெற்றமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

சென்னை மாநகராட்சி தொடக்க/நடுநிலை பள்ளிகளில் பணியாற்றும் சுமார் 1945 ஆசிரியர்களுக்கு கணினி வழிக் கல்வியியல் பயிற்சி மேற்கொள்ள வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2008–2009 ஆம் ஆண்டு வரவு – செலவு பட்ஜெட் திட்ட உரையில் அறிவித்த இத்திட்டத்தினை செயல்படுத்த 13.10.2008 முதல் 20.03.2009 வரை எல்காட் நிறுவனத்தின் மூலம் முதல் பிரிவாக 500 ஆசிரியர்களுக்கும், மீதமுள்ள 1445 ஆசிரியர்களில் 1190 ஆசிரியர்களுக்கு இரண்டாம் பிரிவாகவும் ஆக மொத்தம் 1690 இடைநிலை ஆசிரியர்களுக்கு கணினி வழிக் கல்வியியல் பயிற்சி மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு வழங்கப்பட்டது.

ஆணையர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டத்திற்கு முதல் பிரிவாக ரூ.12,50,000/– (மொத்தம் ரூபாய் பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) BPV No/ E-125 / நாள். 06.10.2008 ல் பெறப்பட்டது. இரண்டாம் பிரிவாக ரூ.36,12,500/– (மொத்தம் ரூபாய் முற்பத்தி ஆறு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) BPV No/ E-140 / நாள். 31.10.2008ல் பெறப்பட்டது.

இத்திட்டத்திற்கு முன்பணமாக மொத்தம் ரூ.48,62,500/– பெறப்பட்டதில் எல்காட் நிறுவனத்திற்கு ரூபாய்.42,25,000/– மட்டும் காசோலையாக வழங்கப்பட்ட விவரம்.

| வரிசை எண். | காசோலை எண். | நாள். | தொகை |
|---|---|---|---|
| 1 | 726269 | 10.10.2008 | ரூ.12,50,000/– |
| 2 | 726282 | 3.11.2008 | ரூ.12,50,000/– |
| 3 | 726295 | 18.12.2008 | ரூ.12,50,000/– |
| 4 | 727603 | 1504.2009 | ரூ. 4,75,000/– |

எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபாய்.42,25,000/– த்தில் செலவான தொகை ரூ.42,21,067.30/– (மொத்தம் ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சத்து இருபத்து ஓராயிரத்து அறுபத்து ஏழு மற்றும் முற்பது பைசா மட்டும் ) இத்தொகைக்கு உண்டான Invoice பெறப்பட்டுள்ளது என்றும் மீதமுள்ள தொகையான ரூ.3,933/– க்கு எல்காட் நிறுவனம் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் பெயரின் காசோலையாக 18.11.2009 அன்று வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையினை சென்னை மாநகராட்சி கரூவூலத்தில் 27.11.2009 அன்று ரசீது எண். 22201 ல் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள தொகையான ரூ.6,37,500/–ம் ஆணையர் அவர்களின் பெயரில் கல்வி அலுவலர் காசோலையாக சென்னை மாநகராட்சி கரூவூலத்தில் 27.11.2009 அன்று ரசீது எண்.22200 ல் செலுத்தப்பட்டுள்ளது.

**Computer Training (Year 2008-2009)**

| Duration in Hrs. per Teachers | No.of Teachers | Amount in Rs. | Total Amount Rs. |
|---|---|---|---|
| 5 Days<br>10 A.M To 5.30P.M | 500<br>1190 | 2,500/–<br>2,500/– | Rs.12,50,000/-<br>Rs.29,75,000/-<br>Rs.42,25,000/-<br>============ |

எனவே, கீழ்கண்டவற்றிக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

1. கணினி வழிக் கல்வியியல் பயிற்சி எல்காட் நிறுவனத்தின் மூலம் சென்னை மாநகராட்சி தொடக்க / நடுநிலை பள்ளி **1690** இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெற்றதற்கும்,

2. இப்பயிற்சிக்கு முன்பணமாக கணக்கு குறியீடு எண்.**803** ல் BPV No/ E-125 / நாள். **06.10.2008** ல் அன்று பெறப்பட்ட ரூ.**12,50,000/–** தொகையினையும், மற்றும் BPV No/ E-140/ நாள்.**31.10.2008** அன்று பெறப்பட்ட ரூ.**36,12,500/–** தொகையினையும் சேர்த்து மொத்தம் ரூ.**48,62,500/–** பெறப்பட்டத்தில் செலவான தொகையான ரூ.**42,21,067.30/–** (மொத்தம் ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சத்து இருபத்து ஓராயிறத்து அறுபத்து ஏழு மற்றும் முற்பது பைசா மட்டும்) இத்தொகையினை கணக்கு குறியீடு எண்.**166** கல்வி செலவினங்கள் தொடக்ககல்வி **2009–2010** ஆம் ஆண்டு கணக்கு தலைப்பில் நேர்செய்ய,

நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “**05.3.2010** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.**09/2010** நாள் **05.3.2010**ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

> “**12.03.2010** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**62/2010** நாள் **12.03.2010**–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.)பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.8.ந.க.எண்.அ1/1016/2010**
**ஆணையர் அவர்களின் 23.02.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :148/2010 பொருள் எண்: 18

**பயனற்ற பேருந்து நிறுத்த நிழற்குடை இடிக்க அனுமதி**

| வார்டு எண்.115 | மண்டலம்–8 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | எல்டாம்ஸ் சாலையில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் மூலம் கட்டப்பட்ட பேருந்து நிறுத்த நிழற்குடை |
| கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1997 ஆம் ஆண்டு மண்டலம்–8 மூலம் கட்டப்பட்டது. |
| கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.950/– |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | தற்போது எல்டாம்ஸ் சாலை ஒருவழிப்பாதையாக இருப்பதால், இப்பேருந்து நிறுத்தத்திற்கு பேருந்து எதுவும் இயக்கப்படுவதில்லை. எனவே, பேருந்து நிறுத்த நிழற்குடை உபயோகமில்லாமல் அவ்விடத்தில் சமூக விரோத செயல்கள் நடக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | 150.70 சதுர அடி ( 14.00 ச.மீ. ) |
| திட்ட முன் மொழிதல் | நடைபாதையாக பராமரிக்கப்பட உள்ளது. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 8வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 422, நாள்: 10/02/2010 |

எனவே, மேற்குறிப்பிட்ட பயனற்ற பேருந்து நிறுத்த நிழற்குடையை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“10.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.38/2010 நாள்: 10.03.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.10.ந.க.எண்.சி2/6951/2009</u>**
**<u>ஆணையர் அவர்களின் 19.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :149/2010 பொருள் எண். 19

**<u>பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக்கூடம் இடிக்க அனுமதி.</u>**

| வ.எண். | வார்டு எண்.–147 | மண்டலம்–10 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மந்தவெளி தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக்கூடம் மைய எண்.1073 |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1982ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| 3. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.14,991.39 |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடித்துவிட்டு புதிய சத்துணவு கூடம் கட்டப்படவுள்ளது. |
| 5. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 752.98 சதுரஅடி |
| 6. | திட்ட முன்மொழிதல் | புதியதாக சத்துணவுக் கூடம் கட்டப்படவுள்ளது. |
| 7. | வார்டு குழு தீர்மான(பரிந்துரை) எண் மற்றும் நாள் | 10வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.446, நாள்:21.10.2009 |

எனவே, மந்தவெளி தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக்கூடம் மைய எண்.1073ஐ இடிப்பதற்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“05.3.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.10/2010 நாள் 05.3.2010ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“10.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.37/2010 நாள்: 10.03.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2190/2009</u>**
**<u>ஆணையர் அவர்களின் 09.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :150/2010 பொருள் எண். 20

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ்</u>**
**<u>தெற்கு பக்கிங்காம் கால்வாய்நீர்ப்பிடிப்பு பகுதிக்கு ஒப்பம்.</u>**

சென்னை மாநகரம் சமதள பரப்பைக் கொண்டுள்ளது. 2870 கி.மீ நீளம் சாலைத் தொகுப்பு உள்ளது. இவற்றில் தற்பொழுது 969 கி.மீ நீளத்திற்கு மட்டுமே மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு உள்ளது. இந்த மழைநீர் வடிகால்வாய்கள், 16 சிறு கால்வாய்கள், கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், அடையாறு ஆறு ஆகியன நகரில் மழைநீர் வடிவதற்கு தொகுப்பாகிறது. சென்னை மாநகரில் வெள்ளத்தடுப்புத் திட்டத்திற்காக நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, இத்திட்டத்திற்காக ரூ. 1448 கோடி திட்ட மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஒப்புதல் (திட்ட எண். JO 809 – 0035, JO 809 – 0037, JO 809 – 0041மற்றும் JO 809 – 0030 மூலம்) பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நீர்த்தேக்கப்பகுதி | சென்னை மாநகராட்சி | பொதுப்பணித்துறை ஒதுக்கீடு | ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை | மத்திய அரசில் ஒப்புதல் பெறப்பட்ட தேதி |
|---|---|---|---|---|---|
| 1. | வடக்கு நீர்த்தேக்கப்பகுதி | 277.17 | 82.69 | 359.86 | 19.12.2008 |
| 2. | மத்திய நீர்த்தேக்கப்பகுதி | 261.11 | 83.89 | 345.00 | 29.12.2008 |
| 3. | கிழக்கு நீர்த்தேக்கப்பகுதி | 140.40 | 303.67 | 444.07 | 14.01.2009 |
| 4. | தெற்கு நீர்த்தேக்கப்பகுதி | 136.20 | 162.78 | 298.98 | 22.01.2009 |
| | **மொத்தம்** | **814.88** | **633.03** | **1447.91** | |

சென்னை மாநகராட்சி பங்குத் தொகை ரூ.814.88 கோடி, இதில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 35 சதவீதம் ரூ. 285.25 கோடி, மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 15 சதவீதம் ரூ. 122.25 கோடி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித்துறையின் நிதி ஒதுக்கீடு 50 சதவீதம் ரூ. 407.50 கோடி ஆகும். இதற்கான அரசின் நிர்வாக ஒப்புதல் 06.07.2009 அன்று பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதிக்கு கடந்த 11.12.2009 அன்று 12 ஒப்பங்கள் பெறப்பட்டது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர் |
|---|---|
| 1. | M/s.B.E. Billimoria & Company Limited |
| 2. | M/s.R.P.P. construction Private Limited |
| 3. | M/s. R.A.U.S. Construction Private Limited |
| 4. | M/s. Sew Infrastructure Limited |
| 5. | M/s.IVRCL Infrastructures & Projects Limited |
| 6. | M/s.GSR Ventures Private Limited |
| 7. | M/s.Nagarjuna Construction Company Limited |
| 8. | M/s.Prathiba Industries Limited |
| 9. | M/s. ICOMM & Sierra Infra |
| 10. | M/s. D.K. Vardhaman Globus (JV) |
| 11. | M/s. Roman Tormat Limited |
| 12. | M/s. Siva Engineering Company |

இதில் வரிசை எண்.10 உள்ள ஒப்பந்ததாரர் ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டுள்ளபடி உரிய காலத்திற்குரிய பிணை வைப்புத் தொகை சமர்ப்பிக்காததால் இந்த ஒப்பங்கள் பரிசீலனைக்கு

எடுத்துக் கொள்ளப்படவில்லை. மீதமுள்ள **11** ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்களில் உள்ள சிறிய குறைபாடுகள் தேவைப்படும் விவரங்கள் குறித்து கடிதங்கள் / மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. இதில் வரிசை எண். **11** மற்றும் **12 –**ல் உள்ள M/s. Roman Tormat Limited அவர்கள் அசல் (Original) ஒப்பப்படிவங்களை சமர்ப்பிக்காததாலும் மற்றும் M/s. Siva Engineering Company அவர்கள் பணிகள் செய்த விவரம் ஒப்ப விதிகளுக்கு குறைவாக சமர்ப்பித்துள்ளதால் இவர்களது ஒப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை ஏனைய **9** ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் பரிசீலனை செய்து Evaluation Committee – க்கு சமர்ப்பிக்கப்பட்து.

Technical Bid பரிசீலிக்கப்பட்டு **02.02.2010** அன்று நடைபெற்ற Evaluation Committee – யில் **9** ஒப்பந்ததாரர்களின் Technical Bid ஒப்பங்களை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி **08.02.2010** அன்று இவ்வொப்பந்ததாரர்களின் Financial Bid திறக்கப்பட்டது. அவர்களின் ஒப்பந்த புள்ளி விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விலை | **2008 – 2009** ஆம் அலுவலக விலை விகிதப்படி ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/s.R.P.P. Constructions Private Limited | 34,62,71,778.00 | (+) 1.85% |
| 2. | M/s. R.A.U.S. Construction Private Limited | 36,01,73,481.40 | (+) 5.94% |
| 3. | M/s.IVRCL Infrastructures & Projects Limited | 37,97,90,442.94 | (+) 11.71% |
| 4. | M/s.B.E. Billimoria & Company Limited | 39,82,25,757.85 | (+) 17.13% |
| 5. | M/s.SEW INFRASTRUCTURE LIMITED | 40,06,70,939.00 | (+) 17.85% |
| 6. | M/s.Prathiba Industries Limited | 42,60,63,860.00 | (+) 25.32% |
| 7. | M/s. ICOMM & Sierra Infra | 44,02,99,128.57 | (+) 29.50% |
| 8. | M/s.Nagarjuna Construction Company Limited | 44,38,01,077.00 | (+) 30.53% |
| 9. | M/s.GSR Ventures Private Limited | 50,90,72,625.00 | (+) 49.73% |

மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ. **34,62,71,778.00** ஆனது **2008 – 2009** ஆம் ஆண்டின் அலுவலக விலை ரூ. **33,99,94,099.45 –** ற்கு ஒப்பிடுகையில் (+) **1.85** ரூ அதிகம். இந்நிலையில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரிடம் மேலும் விலைக்குறைப்புடன் விலைப்புள்ளிகளின் சரித்தன்மை (அ) கூடுதலுக்கான விளக்கங்களும் தர அறிவுறுத்தப்பட்டது.

இதற்கு திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் **16.02.2010** நாளிட்ட கடிதத்தில் விளக்கம் அளித்து விலைக் குறைப்பு செய்துள்ளார். இதன்படி திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd குறிப்பிட்ட ஒப்பத்தொகை ரூ. **34,57,82,542.65**, ஆனது **2008 – 2009** ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி (+) **1.70** ரூ அதிகம். மேலும் **2009 – 2010** ஆம் ஆண்டு அலுவலக விலைக்கு ஒப்பிடுகையில் (+) **13.48** ரூ அதிகம் மற்றும் வெளிச்சந்தையில் **(30.01.2010)** விற்கப்படும் கட்டுமானப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் (+) **0.37**ரூ அதிகம் ஆகும்.

மேலும் திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்களுக்கு வழங்கப்படும் பட்டித்தொகையில் கீழே குறிப்பிட்டுள்ள தொகைகள் பிடித்தம் செய்யப்படவேண்டும்.

(1) **2**ரூ வருமானவரி

(2) **10**ரூ வருமானவரிக்கு கூடுதல் வரி

(3) வருமானவரி மற்றும் கூடுதல் வரிக்கு கல்வி வரி **3**ரூ

(4) **2**ரூ விற்பனை வரி

(5) **0.3**ரூ தொழிலாளர் நல நிதி தொகை

(6) ஒப்பந்ததாரர் தேவைக்கேற்ப செலுத்த வேண்டிய சேவை வரியை செலுத்தப்பட வேண்டும்.

16.02.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளி குழுக் கூட்டத்தில் இப்பணிக்குரிய ஒப்பத்தொகையை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (+) 0.37ரூ கூடுதலாக உள்ளதால் பேச்சுவார்த்தை செய்து சந்தை விலையைவிட குறைவாக இருக்கவேண்டும் என்றும், மேலும் நீர்பிடிப்பு பகுதியிலுள்ள நீர் வழிக்கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால் வாய் இவற்றை தனித்தனியாக பிரித்து சந்தை விலையுடன் ஒப்பிட்டுப்பார்த்து குழுமத்திற்கு சமர்பிக்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை செய்து ஒப்பத்தொகையை சந்தைவிலைக்கு குறைவாக பெறப்பட்டுள்ளது மேலும் தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்பிடிப்பு பகுதியில் நீர்வழிக் கால்வாய் ஏதும் இல்லை என்பதை ஒப்பந்தபுள்ளி குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது. திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் இரண்டாவது பேச்சு வார்த்தைக்குப் பின் அளித்த ஒப்பத் தொகை ரூ. 34,43,79,415.20 ஆனது 2008 – 2009 ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி (+) 1.29 ரூ அதிகம். மேலும் 2009 – 2010 ஆம் ஆண்டு அலுவலக விலைக்கு ஒப்பிடுகையில் (+) 13.02 ரூ அதிகம் மற்றும் வெளிச்சந்தையில் (30.01.2010) விற்கப்படும் கட்டுமானப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் (–) 0.03ரூ குறைவு. இவ்வொப்பத்திற்கு 09.03.2010 அன்று ஒப்பங்கள் குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் இரண்டாவது பேச்சு வார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப தொகை ரூ.34,43,79,415.20ஐ (2008 – 2009ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின்படி (+) 1.29 ரூ அதிகம்) ஏற்று இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்களுக்கு ரூ.34,43,79,415.20 மதிப்பிற்கு பணிகள் அளிக்க சென்னை மாநகராட்சி சட்டம் 1919ன் விதி 80 (2) ன் படி, மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

> “10.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.41/2010 நாள்: 10.03.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி)-வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

> “12.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.64/2010 நாள் 12.03.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/0430/2010**
**ஆணையர் அவர்களின் 08.03..2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :151/2010 பொருள் எண். 21

**தனியார் நிறுவனங்கள் மேற்கொள்ளும் சாலை வெட்டுக்களை மாநகராட்சி சீரமைத்தல்**

சென்னை மாநகரில் பல்வேறு சாலைகளில் கண்ணாடி இழைவடங்கள் அமைக்கும் பணிக்காக தனியார் நிறுவனங்களுக்கு சென்னை மாநகராட்சி மூலம் அனுமதி வழங்க அரசாணை எண்:10, நாள்.04.05.2000 தகவல் தொழில்நுட்பத்துறை அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டு, இவ்வழிகாட்டுதலின்படி அனுமதி வழங்கப்பட்டுவருகிறது. இவ்வரசாணையில் பத்தி 6ல் கீழ்கண்டவாறு படிக்கப்படுகிறது.

" All restitution work within the urban areas including Town Panchayats, Municipalities and Municipal Corporations shall be carried out by the applicants at their own Cost. therefore, applicants are not required to pay any restitution charges to the urban authorities concerned. The restitution work should be carried out by the applicants as per the technical standards prescribed by Corporation of Chennai. These standards should be followed by other local bodies also. The Commissioners of Municipal Administration and Town Panchayats will obtain the details of technical standards adopted by Corporation of Chennai for the restitution work and communicate them to all the local bodies under their control. The applicants are required to give 6 months guarantee for the restitution work done by them. If any damage is caused to the road so restituted, the applicants should carry out the work again at their cost to the satisfaction of the local bodies."

**(தமிழாக்கம்)**

"அனைத்து சாலை வெட்டு சீர் செய்யும் பணிகளும் மாநகராட்சி, நகராட்சி, மற்றும் பேரூராட்சி அமைப்புகளிலும் விண்ணப்பதாரர் அவர்களுடைய சொந்த செலவிலேயே மேற்கொள்ள வேண்டும். எனவே, சீர் செய்யும் பணிக்காக எந்த ஒர் கட்டணமும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டியதில்லை. சாலை வெட்டுக்கள் சீர் செய்யும் பணிகள் விண்ணப்பதாரரால், மாநகராட்சி நிர்ணயிக்கும் தொழில்நுட்பத் தரத்திற்கேற்றவாறு (Standard) மேற்கொள்ளவேண்டும். மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் பேரூராட்சி ஆணையர்கள், சென்னை மாநகராட்சி பின்பற்றும் சாலை சீர் செய்யும் பணிகளுக்கான தொழில்நுட்ப தரத்திற்கான வழிகாட்டுதல்களை பெற்று, அவற்றை அவர்களின் கீழ்வரும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சுற்றறிக்கையாக அனுப்பவேண்டும். விண்ணப்பதாரரால் மேற்கொள்ளப்படும் சீரமைப்புகளுக்கு 6 மாதங்களுக்கு உத்திரவாதம் அளித்தல் வேண்டும். மேலும், இக்காலகட்டத்தில் சேதம் ஏற்படின், இப்பணிகளை விண்ணப்பதாரர் உள்ளாட்சி அமைப்புகளின் திருப்திக்கேற்ப தங்களது சொந்த செலவில் செய்து கொடுக்க வேண்டும்."

மேற்கூறிய வழிகாட்டுதலின்படி நிறுவனங்களிடமிருந்து தட வாடகையாக ஒரு கிலோ மீட்டர் ரூ.9,400/— வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

ஆனால், பிற நிறுவனங்களான தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை தொலைபேசி, சென்னை குடிநீர் போன்ற அரசு துறை நிறுவனங்களிடமிருந்து சாலை வெட்டிற்காக அந்தந்த சாலையின் தன்மைக்கேற்ப சாலை வெட்டினை சீர் செய்யும் தொகை பெறப்பட்டு, சாலை வெட்டுக்கள் மாநகராட்சியால் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

கண்ணாடி இழை பதிக்கும் தனியார் நிறுவனங்கள் சாலை வெட்டுக்களை சீர் செய்வதில் தங்களது முழு கவனத்தையும் செலுத்தாததால், சீர் செய்யப்படும் சாலை வெட்டுக்கள் பழுதடைந்து வாகன போக்குவரத்து மற்றும் நடைபாதை உபயோகிப்போர் ஆகியவர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

இதனால் ஏற்படும் சிரமத்தை குறைப்பதற்கு கண்ணாடி இழை வடங்கள் பதிக்கும் தனியார் நிறுவனங்கள் வரும் காலத்தில் சாலை வெட்டில்லாத தொழில்நுட்பத்தைக் (Trenchless Technology HDD Method) கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், தற்போது தனியார் நிறுவனங்கள் மேற்கொள்ளும் சாலை வெட்டுக்களுக்கு சாலை வெட்டிற்காக அந்தந்த சாலையின் தன்மைக்கேற்ப சாலை வெட்டினை சீர் செய்யும் தொகை அந்தந்த தனியார் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, சாலை வெட்டுக்கள் மாநகராட்சி ஒப்பந்ததாரர்களைக் கொண்டு மாநகராட்சி அதிகாரிகளின் மேற்பார்வையில் வெட்டுக்களை சீர் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டால் தரமான பணிகளை செய்வதுடன் பொது மக்களுக்கு ஏற்படும் சிரமத்தையும் குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

எனவே,

1) கண்ணாடி இழைவடங்கள் பதிக்கும் தனியார் நிறுவனங்கள் பேருந்து சாலைகள், முக்கிய சாலைகள் மற்றும் சாலையின் குறுக்கே வரும் காலத்தில் சாலை வெட்டில்லாத தொழில்நுட்பத்தைக் (Trenchless Technology HDD Method) கொண்டு பணிகளை மேற்கொள்ளவும், மீதம் உள்ள சாலைகளில் சாலை வெட்டிற்கான அந்தந்த சாலையின் தன்மைக்கேற்ப சாலை வெட்டினை சீர் செய்யும் தொகையினை தனியார் நிறுவனத்திடமிருந்து பெறவும்,

2) தனியார் நிறுவனங்களால் தற்போது மேற்கொள்ளும் சாலை வெட்டுக்களுக்கு சாலை வெட்டிற்காக அந்தந்த சாலையின் தன்மைக்கேற்ப சாலை வெட்டினை சீர் செய்யும் தொகையினை தனியார் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, சாலை வெட்டுக்களை மாநகராட்சி ஒப்பந்ததாரர்களைக் கொண்டு மாநகராட்சி அதிகாரிகளின் மேற்பார்வையில் வெட்டுக்களை சீர் செய்யும் பணி மேற்கொள்ளவும்,

3) மேற்கண்ட இனங்களுக்கு அரசாணை வேண்டி தகவல் தொழில்நுட்பத் துறைக்கு கடிதம் அனுப்பவும்,

மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (பணிகள்) (ம) நிலைக்குழு (வ.வி(ம)நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது

"10.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.**39/2010** நாள்: 10.03.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி)-வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"**12.03.2010** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**66/2010** நாள் **12.03.2010**–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.)பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.அ.10.ந.க.எண்.சி1/8301/2003</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 15.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :152/2010 பொருள் எண்.22

**<u>வருமான வரி காசோலை தாமதமாக செலுத்திய தொகையை நேர் செய்ய அனுமதி</u>**

மண்டலம்–10, 1994–95 முதல் 1996–97 ஆண்டுகளில் வருமான வரிக்கான காசோலைகள் காலதாமதமாக செலுத்திய வகையில் வருமான வரித்துறையில் இருந்து வருமான வரி 1961ஆம் ஆண்டு சட்டம் பிரிவு 201(1)ன்படி காலதாமதமாக செலுத்தியதற்காக அபராத கட்டணமாக ரூ.4,25,103/– செலுத்துமாறு வருமான வரித்துறையில் இருந்து கடிதம் பெறப்பட்டது. பகுதி கணக்கு குழுமத்திலிருந்து வருமான வரிக்கான காசோலை தாமதமாக செலுத்தியதால் வருமான வரித்துறையில் இருந்து கடிதம் பெறப்பட்டது. பகுதி கணக்கு குழுமத்திலிருந்து வருமான வரிக்கான காசோலை தாமதமாக செலுத்தப்பட்டுள்ளது. காலமாமதமாக செலுத்தப்பட்டதாலும், குறைவாக பிடித்தம் செய்யப்பட்ட தொகை கணக்கிட்டு வருமான வரித்துறையில் இருந்து அபராத கட்டணமாக ரூ.4,25,103/– செலுத்தும்படி வருமான வரி சட்டம் 1961ன்படி பிரிவு 201(1)ன்படி தாக்கீது பெறப்பட்டது. இந்நிலையில் இத்தொகையை வருமான வரித்துறையின் மேல்நடவடிக்கையை தவிர்க்கும் பொருட்டு ஆணையரின் 12.08.2004 மற்றும் 1.12.2005 அனுமதியில் இத்தொகை சம்மந்தப்பட்ட அலுவலர் மற்றும் அதிகாரிகளிடம் பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையின்படி அனுமதி பெறப்பட்டு இத்தொகையை முன் பணமாக ரூ.2,18,917 + ரூ.2,06,186 காசோலை பெற்று வருமான வரித்துறைக்கு செலுத்தப்பட்டது.

திருமதி.ரஷீதாபானு, மண்டல அலுவலர்–10 அவர்கள் 28.02.1999 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்கள். மேலும், அப்போது பணியில் இருந்த நிர்வாக பிரிவு மற்றும் பகுதி கணக்கு குழுமத்தில் பணியாற்றிய பெரும் பாலானவர்கள் பணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்கள்.

திருமதி.ரஷீதாபானு, மண்டல அலுவலர்–10 அவர்கள் தனக்கு முழு ஓய்வூதியம் வழங்குமாறு வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோரிடம் தொடர்ந்து மனு கொடுத்து முறையீடு செய்து வருகிறார்கள். இந்நிலையில் இக்கோப்பை மீண்டும் ஆணையரின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஓய்வு பெற்ற அலுவலர்கள் இப்பெரிய தொகை ஓய்விற்கு பிறகு நீண்ட நாட்கள் கடந்து பிடித்தம் செய்வது அவர்களுக்கு பெரிய மன உளைச்சல் ஏற்படுத்தும் என்ற நிலையில் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் கருணை கூர்ந்து இந்நிலுவை தொகைக்கு விளக்கம் அளிக்கவும், இம்முன் பணத்தை இதர செலவினங்கள் தலைப்பில் நேர் செய்யவும், 12.12.2006ல் ஆணையரின் அனுமதி பெறப்பட்டு முன்பணம் நேர் செய்யப்பட்டது. இப்பொருள் குறித்து 24.11.2008 அன்று நடைபெற்ற 10வது மண்டல வார்டுகுழு கூட்டத்தின் தீர்மான எண்.837/24.11.2008ல் தனியருக்கு தள்ளுபடி செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிலைக்குழுக்கள் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்ட கோப்பில் நிதி ஆசேலாசகர் அவர்கள் தற்காலிக முன்பணம் தொகை ரூ.25,000/– நேர் செய்யப்படாமை குறித்தும் 22.01.2009 அன்று தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, இது குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) அவர்களுக்கு குறிப்பு அனுப்பப்பட்டு இதற்கான பதிலும் 24.12.2009 அன்று பெறப்பட்டது. அதில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) அலுவலர் அவர்கள் 1996ஆம் ஆண்டு சட்ட மன்ற பொது தேர்தலுக்கான செலவினங்களுக்கான ரூ.25,740/– செலவிடப்பட்டதற்கான உதவி செயற் பொறியாளரது மேலொப்பம் பெற்று செலவின விவரம் மற்றும் ரசீதுகள் ஆகியவற்றை

சமர்ப்பித்துள்ளார். மேற்படி பெறப்பட்ட முன் பணத்திற்கான சரிக்கட்டல் பட்டியல் தயார் செய்து சம்பள கணக்கு அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பின்னரே 1996 சட்ட மன்ற பொது தேர்தல் செலவினத்திற்காக பெறப்பட்ட முன்பணம் சரிபார்க்கப்பட்டு ஆணை பெற்று பின்பு முன்பணம் பெற்ற உதவி ஆணையர் மீதான பொறுப்பு தீர்வு செய்யப்படும் என தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளில் திருமதி.ரஷீதாபானு, 28.02.1999 ஓய்வு பெற்ற மண்டல அலுவலர்–10 அவர்களின் ஓய்வு கால பணப்பயன்கள் முழுமையாக வழங்கவும், வருமான வரித்துறைக்கு அபராதம் மற்றும் குறைவாக பிடித்தம் செய்யப்பட்டு செலுத்தப்பட்ட தொகை ரூ.4,25,103/–யை தள்ளுபடி செய்ய நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இப்பொருள் 22.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தில் தீர்மான எண்.58/2010, நாள்.22.02.2010ன்படி ஒத்திவைக்கப்பட்டது.

இப்பொருள் மீண்டும் நிலைக்குழு(வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.67/2010 நாள் 12.03.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>வ.து.உ.பி.ந.க.எண்/1008/2010</u>**
**<u>ஆணையரின் 10.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :153/2010 பொருள் எண்.23

**<u>உரிம கட்டணத்தில் திருத்தங்கள்</u>**

கடந்த 12 வருடங்களுக்கு மேலாக எவ்வித மாற்றமின்றி வசூலிக்கப்பட்டு வந்த பழைய உரிமக் கட்டணத்தை மறு சீரமைத்து செய்து மாற்றியமைக்கும் பொருட்டு சிறு வணிகம் மற்றும் தொழிற் கூடங்கள் ஆகியவற்றின் தகுதிகேற்ப 6 பிரிவுகளின் கீழ் பட்டியலிட்டு புதிய உரிமக் கட்டணம் நிர்ணயித்தும் மேலும் உரிமக் கட்டணம் வசூலிக்கத் தகுதியுடைய வணிக நிறுவனம்/தொழிற் கூடங்களின் கூடுதல் பட்டியல் தயாரித்து அவற்றிற்கு உரிமக் கட்டணம் வசூலிக்கவும் ஒப்புதல் கோரி அவ்விரு பட்டியலையும் நிலைக்குழு ( வருவாய் மற்றும் நிதி) யின் மூலமாக சமர்பித்து மன்றத் தீர்மான எண் 344/08 மற்றும் 345/08 நாள்–30.07.2008ன்படி மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு 1.4.2009 முதல் புதிய உரிமக் கட்டணம் வசூலித்து புதிய உரிமங்கள் வழங்கப்படுகிறது.

மன்றத் தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களை நிதியாண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கு ஏதுவாக தீர்மானங்களின் விவரங்களை வணிகர்கள் பொது மக்கள் அறியும் வகையில் அரசிதழில் அறிவிக்கை அரசிதழ் வெளியீடு எண்.2(1) 28/2009 நாள் 14.1.2009ன்படி, வெளியிடப்பட்டது. இது சம்பந்தாமக ஆலோசனை / ஆட்சேபனை ஏதும் மாநகராட்சியில் பெறப்படவில்லை. அதனை தொடர்ந்து 1.4.2009 முதல் மாற்றியமைக்கப்பட்ட புதிய உரிமக் கட்டணம் வசூலிக்கப்பட்டு புதிய வணிக உரிமங்கள் 10 மண்டல அலுவலகங்களிலும் வழங்கப்பட்டுள்ளன.

பல்வேறு வணிகர் சங்க நிர்வாகிகள் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு அளித்த மனுவில் உரிமக் கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளதாகவும் மேலும் பரப்பளவை பல பிரிவுகளாக பிரித்து அதனடிப்படையில் உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் மேலும் உரிமக் கட்டணத்தில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

மேற்கண்ட கோரிக்கை குறித்து வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வருவாய் அலுவலர், கூடுதல் வருவாய் அலுவலர் ஆகியோர் முன்னிலையில் 12.2.2010 அன்று வருவாய் அலுவலர் அலுவலகத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூடத்தில் வணிகர் சங்கங்களின் நிர்வாகிகள், மற்றும் மாமன்ற உறுப்பினர் திரு.மங்களராஜ் ஆகியோர் தங்கள் கோரிக்கைகளை பரிசீலனை செய்யும்படி கேட்டுக் கொண்டனர். மேலும் மீண்டும் 9.3.2010 அன்று வருவாய் அலுவலர் அலுவலகத்தில் வணிகர் சங்க நிர்வாகிகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது மீண்டும் அதே கோரிக்கையை வலியுருத்தினர்.

மாற்றியமைக்கப்பட்ட உரிமக்கட்டணம் மன்றத் தீர்மான எண். 344/08 மற்றும் 345/08ன் நாள் 30-7-08ன்படி 1-4-2009 முதல் புதிய உரிமகட்டணம் வசூலிக்கப்படுகிறது. வணிகர் சங்க நிர்வாகிகளின் கோரிக்கையை ஏற்று உயர்த்தப்பட்ட உரிமக் கட்டணங்களில் உள்ள அட்டவணை-1ல் (Schedule-I) தொடர் எண். 10,18,27 மற்றும் 39 முதல் 58 வரையிலான இனங்களுக்கு கீழ்கண்டவாறு உரிமத்தொகை நிர்ணயம் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

(i) 500 சதுர அடி வரை - ரூ. 500/-
(ii) 501 சதுர அடி முதல் 1000 சதுர அடி வரை - ரூ. **750.**/-
'அ' (iii) 1001 சதுர அடிக்கு மேல் - ரூ. 5000/-

'ஆ' <u>அட்டவணை:</u> II, III, IV மற்றும் VI ஏற்கலாம்,

<u>அட்டவணை:</u> V

Provision Stores, S.M.Stall, Backery ஆகியவற்றிற்கு மேற்கூறிய வண்ணம்

'இ'

(i) 500 சதுர அடி வரை - ரூ. 500/-
(ii) 500 சதுர அடி முதல் 1000 சதுர அடி வரை - ரூ. 750/-
(iii) 1001 சதுர அடிக்கு மேல் - ரூ. **3000/-**

என உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

'ஈ.' இந்த மாற்றியமைக்கப்பட்ட உரிமத்தொகை சென்னை மாநகராட்சி மாமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து நடைமுறைபடுத்தப்படலாம்.

'உ.' உரிமம் புதுப்பிக்க கடைசி தேதி **30**.4.2010 அல்லது **31**-5-2010 வரை அனுமதிக்கலாம்.

புதியதாக நிர்ணயம் செய்யப்பட்ட உரிமக் கட்டணத்தில் சில திருத்தங்கள் செய்து உரிமக் கட்டணம் மாற்றியமைக்க வேண்டி இனம் 'அ', ஆ, இ, மற்றும் ஈ நிலைக்குழு(வருவாய் & நிதி) முலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இனம் 'உ'–வில் உரிமம் புதுப்பிக்க கடைசி தேதியை முடிவு செய்ய நிலைக்குழு(வருவாய் & நிதி) முலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"12.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.68/2010 நாள் 12.03.2010–ன்படி, இனம் 'அ' முதல் 'ஈ' வரைக்கும் மற்றும் இனம் 'உ' வை பொறுத்தவரையில் 31.05.2010 தேதியை கடைசி தேதியாக குறிப்பிடலாம் என்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.அ.7.அ.ந.க.எண்.எச்1/0574/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 10.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :154/2010 பொருள் எண்.24

**<u>வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

டாக்டர் எம்.எஸ்.ஜெகந்நாதன், மருத்துவ அலுவலராக 23.03.1984 முதல் சென்னை மாநகராட்சியில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். தனியர் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்ட நாளான 23.03.1984 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மருத்துவ அலுவலர் பதவியில் 23.03.1986 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் எம்.எஸ்.ஜெகந்நாதன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் 23.03.1994ல் தேர்வுநிலை ஊதியமும் 23.03.2004 முதல் சிறப்பு நிலை ஊதியமும் நிர்ணயம் செய்து ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

டாக்டர் எம்.எஸ்.ஜெகந்நாதன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் ஓய்வு பெற வேண்டிய நாள்.31.12.2009. அன்னார் மீது துறை ரீதியாக எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை, முன்பண நிலுவையும் ஏதும் இல்லை, சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கணக்கு முடிக்கப்பட்டு நிலுவை ஏதும் இல்லை.

டாக்டர் எம்.எஸ்.ஜெகந்நாதன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் செயல் அலுவலருக்கான தேர்வு, மருத்துவ குறியீடு தேர்வு தேர்ச்சி பெற்று பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை எண்.845 (நிதி) (அ) (ஒ) நாள்.19.10.1935 மற்றும் பிரிவு 918 (ட்டி) தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வூதிய பணிப்பயன் தொகைகள் தவறானது என்று பின்னர் தெரியவரின் அத்தொகை முழுவதையும் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திவிடுகிறேன் என்ற உறுதிமொழியும் தனியரிடம் இருந்து பெறப்பட்டுள்ளது.

துணை இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் 15.10.2009 நாளிட்ட கடிதத்தில் ஓய்வூதிய பயன்கள் பெற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 31.12.2009 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி டாக்டர் எம்.எஸ். ஜெகந்நாதன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகள், சென்னை மாநகராட்சிக்கு தொகை இழப்பீடு இருப்பது மற்றும் நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அன்னாரின் ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டும் 31.12.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

எனவே, டாக்டர் எம்.எஸ்.ஜெகந்நாதன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் 31.12.2009 முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
*******

**ம.அ.7.உ.சு.அ.ந.க.எண்.எச்1/080/2010**
**ஆணையாளர் அவர்களின் 25.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :155/2010 பொருள் எண். 25

**தகுதிகாண் பருவம் அறிவித்தல்**

டாக்டர். எல்.கே.வெண்ணிலா, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் மருத்துவ அலுவலராக இரண்டாண்டுகளுக்கு மேலாக பணி முடித்தமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க விண்ணப்பித்துள்ளார்.

டாக்டர். எல்.கே.வெண்ணிலா, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் H.D.C.No/7532/2006, நாள்.13.07.2007 சென்னை மாநகராட்சி, ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு 17.07.2007 முதல் மண்டலம்–7ல் பணியில் சேர்ந்துள்ளார்.

டாக்டர். எல்.கே.வெண்ணிலா, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்ட நாளான 17.07.2007 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

டாக்டர். எல்.கே.வெண்ணிலா, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் மீது எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை.

எனவே, டாக்டர். எல்.கே.வெண்ணிலா, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7 அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் 17.07.2009 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க நியமனக்குழு மூலமாக மாமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.5.ந.க.எண்.எச்1/1388/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 19.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :156/2010 பொருள் எண்.26

**<u>தேர்வு நிலை வழங்க அனுமதி</u>**

டாக்டர்.வைஜெயந்தி மாலா, மருத்துவ அலுவலர், மண்டலம்–5, என்பவர் மருத்துவ அலுவலராக 12.12.1997 அன்று பணியமர்த்தப்பட்டார். மேற்படி பதவியில் 12.12.1997 அன்று முதல் பணிவரன்முறைபடுத்தியும் 12.12.1999 அன்று முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக ஆணையிடப்பட்டுள்ளது.

அன்னார் 18.05.2002 முதல் 02.05.2004 வரை சம்பளமில்லா விடுப்பு மேல் படிப்பிற்காக துய்த்துள்ளதை அரசாணை எண்.31/நகராட்சி, நாள்.24.02.2005ன்படி வருடாந்திர ஊதிய உயர்விற்கு எடுக்கப்பட்டு, வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. அன்னார் கடந்த 10 ஆண்டுகளில் வேறு எந்த சம்பளமில்லா விடுப்பு துய்க்காமல் 11.12.2007 அன்று பிற்பகல் 10 ஆண்டுகள் ரூ.15,600–39,100 + 5,400 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் பணி முடித்து 12.12.2007 முதல் தேர்வு நிலை ஊதியமாக மூன்று விழுக்காடு ஊதிய உயர்வு பெற தகுதி அடைகிறார்.

டாக்டர். வைஜெயந்திமாலா, மருத்துவ அலுவலர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை/ விசாரணை எதுவும் நிலுவையில்லை.

அன்னார் இரண்டாம் நிலை பதவி வகித்து வருவதால், தேர்வு நிலை ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே, டாக்டர். வைஜெயந்திமாலா, மருத்துவ அலுவலர், மண்டலம்–5 என்பவருக்கு 10 ஆண்டுகள் ஒரே பதவியில் பணி முடித்தமைக்காக 11.12.2007 பிற்பகல் முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை புக அனுமதித்து, 12.12.2007 முதல் தேர்வு நிலை ஊதியமாக மூன்று விழுக்காடு ஊதிய உயர்வு ரூ.15,600–39,100 + 5,400 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் வழங்கி ஊதியமாக ரூ.26,660/– 12.12.2007 அன்று நிர்ணயம் செய்து வழங்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.6.அ.ந.க.எண்.எச்1/388/2010**
**ஆணையாளர் அவர்களின் 29.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :157/2010 பொருள் எண்.27

**தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வழங்க அனுமதி**

டாக்டர் டி.வி.ரமேஷ், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்கள் தனக்கு அரசாணை நிலை எண்.106 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.06.08.2007ன்படி, 01.06.1979 முதல் அரசின் உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது எனவும், பிறகு சென்னை மாநகராட்சி, ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை, சு.து.ந.க.எண்.சி1/5991/2003, நாள்.19.11.2007ன்படி மருத்துவ அலுவலர் பதவியில் 01.06.1979 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது எனவும், தனக்கு தற்போது மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்து தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

டாக்டர் டி.வி.ரமேஷ், அவர்கள் மருத்துவ அலுவலராக சென்னை மாநராட்சி, ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/26342/1978, நாள்.24.05.1979ன்படி 01.06,1979 முதல் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டார். இவர் மருத்துவ அலுவலர் பதவியில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ளதால், இவ்வலுவலருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் அரசின் உறுதியாக்கம் பெறப்படாமல் இருந்ததால், தனியருக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. மேலும் இவர் வகிக்கும் மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருவதால், இப்பதவி வகிப்பவர்களுக்கு பணிவரன்முறைப்படுத்த அரசின் உறுதியாக்கம் பெறப்பட வேண்டி கோப்பு மற்றும் பணிப்பதிவேடு அரசுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அரசாணை நிலை எண்.106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.06.08.2007ன்படி, டாக்டர் டி.வி.ரமேஷ், அவர்களது தற்காலிக பணி நியமனம் இவர் மருத்துவ அலுவலராக பொறுப்பேற்ற நாளான 01.06.1979 முதல் அரசின் உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மன்ற தீர்மான எண்.527/2007, நாள்.29.10.2007ன்படி சென்னை மாநகராட்சி, ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/5991/2003, நாள்.19.11.2007ன்படி டாக்டர் டி.வி.ரமேஷ், அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 01.06.1979 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, மன்ற தீர்மான எண்.374/2008, நாள்.30.07.2008ன்படி டாக்டர் டி.வி.ரமேஷ், மருத்துவ அலுவலர் ஐஸ்அவுஸ், தோல் மருந்தகம், மண்டலம்–6 அவர்களை 01.06.1981 அன்று முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் டி.வி.ரமேஷ், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டு காலம் மற்றும் இருபதாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | மருத்துவ அலவலரின் பெயர் | முதன் முதலில் நியமனமான நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த விவரம். |
|---|---|---|---|---|
| 01. | மருத்துவர் டி.வி.ரமேஷ் | 01.06.1979 | 01.06.1981 | 2385 |

| 10 ஆண்டு கால பணி முடித்த நாள் | 20 ஆண்டு கால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள். |
|---|---|---|---|---|
| 16.12.1995 | 16.12.2005 | ஐந்து ஆண்டுகள் திரண்ட பயனின்றி ஊதியம் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. | 17.12.1995 | 17.12.2005 |

டாக்டர் டி.வி.ரமேஷ், மருத்துவ அலுவலர் அவர்கள் 17.12.1995 அன்று சாதாரண நிலையில் மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான ரூ.2200 – 75 – 2800 – 100 – 4000 என்ற ஊதிய ஏற்ற முறையில் ரூ.2800/– அடிப்படை ஊதியமாக பெற்று வந்தார். அன்னாருக்கு 17.12.1995 அன்று தேர்வு நிலை மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான ரூ.2500 – 75 – 2800 – 100 – 4200 என்ற ஊதிய ஏற்ற முறையில் ரூ.2900/– அடிப்படை ஊதியம் வழங்க வேண்டியுள்ளது.

மேலும், டாக்டர் டி.வி.ரமேஷ், மருத்துவ அலுவலர் அவர்கள் 17.12.2005 அன்று தேர்வு நிலையில் மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான ரூ.9100–275–14050 என்ற ஊதிய ஏற்ற முறையில் ரூ.12,125/– அடிப்படை ஊதியமாக பெற தகுதியுடையவராகிறார். அன்னாருக்கு 17.12.2005 அன்று சிறப்பு நிலையில் மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான ரூ.1000–325–15200 என்ற ஊதிய ஏற்ற முறையில் ரூ.12275+125 தனி ஊதியம் அடிப்படை ஊதியம் வழங்க வேண்டியுள்ளது.

கணக்கு அலுவலர்/மண்டலம்–6 அவர்களின் 15.02.2010 நாளிட்ட குறிப்புரையில், டாக்டர் டி.வி.ரமேஷ், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6 அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணி முடித்தமைக்கு, தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.2500–75–2800–100–4200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 17.12.1995 முதல் அடிப்படை ஊதியம் ரூ.2900/– ஊதியம் நிர்ணயம் செய்யலாம் எனவும், மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு, சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 17.12.2005 முதல் அடிப்படை ஊதியம் ரூ.12125+125 தனி ஊதியம் நிர்ணயம் செய்யலாம் எனவும் குறிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு தேர்வு நிலை அனுமதிக்க மனறம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.03.09.1992ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, டாக்டர் டி.வி.ரமேஷ், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6, அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு, தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.2500–75–2800–100–4200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 17.12.1995 முதல் அடிப்படை ஊதியம் ரூ.2900/– ஊதியம் நிர்ணயம் செய்யவும், 01.01.1996 முதல் தமிழ்நாடு திருத்திய ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி புதிய ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ல் அடிப்படை ஊதியமாக ரூ.9375/– என நிர்ணயம் செய்யவும், மற்றும் மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு, சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 17.12.2005 முதல் அடிப்படை ஊதியம் ரூ.12275+125 தனி ஊதியம் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>சு.து.ந.க.எண்.சி1/5571./2009</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 14.4.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :**158/2010** பொருள் எண்.**28**

**<u>கடவுச்சீட்டு பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையின் மருத்துவ அலுவலர் மற்றும் உதவி சுகாதார அலுவலர் , மண்டலம் 4 (பொறுப்பு) டாக்டர். எஸ். கற்பகம் என்பவர் வெளிநாடு (ஐரோப்பா) பயணம் மேற்கொள்ள கடவுச்சீட்டு பெற விண்ணப்பிக்க தடையின்மை சான்றிதழ் வழங்குமாறு கோரியுள்ளார். மேலும் வெளிநாடு (ஐரோப்பா) சென்று வரும் செலவினங்களை தனது சொந்த சேமிப்பில் இருந்து ஈடு செய்வதாக தெரிவித்துள்ளார்.

டாக்டர்.எஸ்.கற்பகம் என்பவர் திருச்சி நகராட்சியில் **16.04.1986** ல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டு ஒருவழி மாறுதல் மூலம் **22.09.1988** ல் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார். இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் **16.04.1986** முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு இவருக்கு **10.09.1988** முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை கண்காணிப்பாளர் மத்திய பாதுகாப்பு பிரிவு, புலனாய்வு துறை , சென்னை -2 அவர்களின் **12.12.2009** தேதியிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார். இயக்குநர், விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை அவர்களின் **10.12.2009** நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் இல்லை என்று தெரிவித்துள்ளார் மற்றும் சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்களின் **08.01.2010** நாளிட்ட குறிப்பில் இவர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிதுள்ளார்.

சென்னை மாநகராட்சி, பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு-2 ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியர் வெளிநாடு (ஐரோப்பா) பயணம் மேற்கொள்ள கடவுச்சீட்டு பெற விண்ணப்பிக்க தடையின்மை சான்றிதழ் வழங்க மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

டாக்டர்.எஸ். கற்பகம், மருத்துவ அலுவலர் மற்றும் உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–4 (பொறுப்பு) என்பவர் வெளிநாடு (ஐரோப்பா) பயணம் மேற்கொள்ள மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/5571./2009 நாள்.**24.03.2010**–ன் வாயிலாக தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டது.

1) வெளிநாடு செல்ல கடவுச் சீட்டு புதுப்பித்திட தடையின்மை சான்று கோரும் இவர் வெளிநாட்டில் தங்கும் போது வேலைவாய்ப்பை ஏற்கவோ அல்லது படிக்கவோ மற்றும் பயிற்சியிலோ கலந்துக் கொள்ளக்கூடாது.
2) வெளிநாட்டில் தங்கும் போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக் கூடாது.
3) வெளிநாடு செல்லும் பயணச் செலவு உள்பட எவ்வித தொகையையும் சென்னை மாநகராட்சி ஏற்காது
4) அவர் வெளிநாட்டில் இருக்கும் போது அவர் சென்னை மாநகராட்சி பணியினை துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
5) வழங்கப்படும் தடையின்மை சான்றிதழை பயன்படுத்தி ஆணையரது முன் அனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணம் ஏதும் மேற்கொள்ளக்கூடாது
6) இவ்வாணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறுமாத காலத்திற்கு மட்டுமே செல்லக் தக்கது.
7) வெளிநாடு செல்லும் முன் உரிய விடுப்பு அனுமதி பெற்று வெளிநாடு செல்ல வேண்டும். அவ்விடுப்பு ஆறுமாததிற்கு மிகையாகக் கூடாது.

எனவே டாக்டர். எஸ். கற்பகம் மருத்துவ அலுவலர் மற்றும் உதவி சுகாதார அலுவலர் மண்டலம்–4 (பொ) என்பவருக்கு வெளிநாடு (ஐரோப்பா) செல்ல கடவுச் சீட்டு பெற விண்ணப்பிக்க தடையின்மை சான்றிதழ் வழங்கியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**சு.து.ந.க.எண்.சி1/002161/10**
**ஆணையாளர் அவர்களின் 14.4.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :159/2010 பொருள் எண். 29

**பணியமைப்பு**

சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரத்துறையில் 17 உதவி சுகாதார அலுவலர்களும் ஒரு கூடுதல் சுகாதார அலுவலரும் , ஒரு சுகாதாரஅலுவலரும் பணிபுரிந்து வருகின்றனர். சென்னை மாநகராட்சியில் உதவி சுகாதார அலுவலர்கள் பட்ட மேற்படிப்பு தகுதியுடன் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தமிழ்நாடு பொது சுகாதாரத்துறையில் நகர நல அலுவலர்கள் இளநிலை மருத்துவ பட்டத் தகுதியுடன் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சென்னை மாநகராட்சியில் பதவி உயர்வுகள் காலி பணியிட அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கண்ட மூன்று நிலைகள் மட்டுமே உள்ளதால் சென்னை மாநகராட்சியில் சுகாதாரத்துறையில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு மிகவும் குறைவு.

இது போன்ற பதவி உயர்வு தேக்க நிலை தமிழ்நாடு பொது சுகாதாரத்துறையிலும் உணரப்பட்டதால் இக்குறையை களையக்கோரி தமிழ்நாடு அரசு சுகாதாரஅலுவலர் சங்கத்தினர் அரசிடம் விண்ணபித்தனர். இந்த வேண்டுகோளை பரிசீலித்த தமிழ்நாடு அரசு இக்குறையினை நீக்க தமிழ்நாடு அரசு ஆணை எண்.12, தேதி 20.01.2010 (G.O.Ms.No.12, date.20.01.2010 ) யினை வெளியிட்டுள்ளது. இதன்படி கீழ்கண்ட பதவி உயர்வுகளை செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

1) புதியதாக முதுநிலை சுகாதார அலுவலர் பதவியும் துணை இயக்குநர் நிலை 2 பதவியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
2) முதுநிலை சுகாதார அலுவலர் பதவிக்கு சுகாதாரஅலுவலர் பதவியில் 6 முதுநிலை சுகாதார அலுவலர் (PB3 :GP 6600) பதவிக்கு சுகாதார அலுவலர் (PB3 :GP 5700) பதவியில் 6 வருடங்களும், துணை இயக்குநர் நிலை 2 (PB3 :GP 7600) பதவிக்கு முதுநிலை சுகாதார அலுவலர் பதவியில் 5 வருடங்களும், துணை இயக்குநர் நிலை 1 (PB4 : GP 8700) பதவிக்கு ணை இயக்குநர் பதவி நிலை 2 பதவியில் 2 வருடங்களும் பணிபுரிந்து இருக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் உதவி சுகாதார அலுவலர்களும் தமிழ்நாடு சுகாதாரத்துறையில் நகர நல அலுவலர்களும் ஒரே நிலையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். போதுமான பதவி உயர்வு வாய்ப்புகள் இல்லாததனால் 15 வருடங்களுக்குமேல் பணிபுரிந்தும் பலர் உதவி சுகாதார அலுவலர்களாகவே உள்ளனர். ஆனால் தமிழ்நாடு பொது சுகாதாரத்துறையில் பல்வேறு பதவி உயர்வுகள் கிடைக்கின்றன. இது உதவி சுகாதார அலுவலர்களிடையே ஒரு மனத்தளர்ச்சியை உருவாக்குகிறது.

எனவே மேற்கண்ட தமிழ்நாடு அரசு ஆணையை (G.O.Ms.No.12 date.20.01.2010) சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தினால் பதவி உயர்வு இல்லாமல் இருக்கும் உதவி சுகாதார அலுவலர்களுக்கு ஒரு புதிய உத்வேகத்தை கொடுக்கும். இதனால் சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் அவர்களது செயல்பாடு அதிகரிக்கும்.

ஆனால் சென்னை மாநகராட்சியில் மேற்கண்ட பதவிகள் இல்லாததனால் அரசு ஆணையில் உள்ள பதவி உயர்வுகளை அளிக்க இயலாது. எனவே குறித்த காலத்தில் அவர்களது பணி காலத்தை கணக்கில் கொண்டு ஊதிய உயர்வு மட்டும் துணை இயக்குநர் நிலை 1 வரை அளிக்கலாம்.

ஊதிய உயர்வு பெற்றாலும் கூடுதல் சுகாதார அலுவலருக்கான பதவி உயர்வு (தற்போது துணை இயக்குநர் நிலை) சென்னை மாநகராட்சி வரைவு துணை விதிகளின் படி காலி பணியிட அடிப்படையிலேயே வழங்கப்படும்.

எனவே அரசு ஆணை எண்.12 தேதி 20.01.2010 ஐ சென்னை மாநகராட்சியில் அமல்படுத்தவும் இவ்வரசாணையின் படி பதவி உயர்வு இன்றி குறித்த காலத்தில் அவர்களது பணி காலத்தை கணக்கில் கொண்டு ஊதிய உயர்வை துணை இயக்குநர் நிலை 1 வரை செயல்படுத்த அரசாணை கோரி அரசிற்கு செயற்குறிப்புகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மி.து.ந.க.எண்.மே1/அ1/4154/2009**
**ஆணையாளர் அவர்களின் 26.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :160/2010 பொருள் எண். 30

**பணியமைப்பு**

சென்னை மாநகராட்சி, மின்சாரத்துறையில் 10 மண்டலங்களில் தெரு விளக்குகளை நிறுவி, பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள கடந்த 1993 முதல் 1998 வரையிலான ஆண்டுகளில் தற்காலிக தினக்கூலி அடிப்படையில் 400 தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வந்தார்கள்.

400 தற்காலிக தொழிலாளர்களுக்கு, அரசு பொதுப்பணித்துறை மூலம் அளிக்கப்பட்டுள்ள செந்தூரவிலை விவர அட்டவணைப்படி (Standard Schedule of rates issued by PWD), ITI சான்றிதழ் பெற்ற 144 தற்காலிக பணியாளர்களுக்கு தனி தினக்கூலி ஊதியமும், கடின உழைப்பு தொழிலாளர்கள் 256 பணியாளர்களுக்கு தனி தினக்கூலி ஊதியமும் வழங்கப்பட்டு வந்தது.

அதன் அடிப்படையில் 01.01.2006 ஆம் ஆண்டு, அரசு பொதுப்பணித்துறை மூலம் அளிக்கப்பட்டுள்ள நிலையான விலை விவர அட்டவணைப்படி (Standard Schedule of rates issued by PWD), தொழில் நுட்ப ITI சான்றிதழ் பெற்ற தொழிலாளர்கள் 144 பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.163/– வீதமும், கடின உழைப்புத் தொழிலாளர்கள் 256 பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.94/– வீதமும் ஊதியம் அளிக்கப்பட்டு வந்தது.

மேற்குறிப்பிட்ட 400 தற்காலிக தொழிலாளர்களை நிரந்தர நிலையில் பணியமர்வு செய்ய, மன்ற தீர்மான எண். 457 / 2005 நாள் 21.11.2005 மூலம், அரசுக்கு 16.01.2006 அன்று முன்மொழிவு அனுப்பப்பட்டது.

அரசு ஆணை (நிலை) எண்.20, ந.நி.ம.கு.வ.துறை, நாள்23.02.2006ல் சென்னை மாநகராட்சி மின்துறையில் 10 மண்டலங்களில் தெரு விளக்குகளை நிறுவி பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள கடந்த 1993 முதல் 1998 வரையிலான ஆண்டுகளில் தற்காலிக தினக்கூலி அடிப்படையில் 400 தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து பணிபுரியும் நிலையில் அவர்களை 23.02.2006 முதல் முறையான பணியமர்த்தி அவர்களின் பணியினை வரன்முறைப்படுத்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 27.02.2006 நாளிட்ட செயல்முறை ஆணையில், 400 தற்காலிக தொழிலாளர்களை, முறையான பணியமைப்பில் காலமுறை ஊதிய விகிதம் ரூ. 2550 – 55- 2660 – 60 – 3200ல் அரசாணை வெளியிட்ட நாளான 23.02.3006 முதல் பணி வரன் முறைப்படுத்தி பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி மின்துறை அனைத்து பணியாளர் நலசங்க 01.02.2007 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சி, மின்துறையில் ITI தொழில்நுட்ப பணியாளர்களுக்கான கீழ்நிலை காலமுறை ஊதியம் ரூ.3050 – 75 – 3950 – 80 – 4590 என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்ய, கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், தமிழக அரசு பல்வேறு துறைகளில், தினக்கூலியாக உள்ள ஐ.டி.ஐ. பணியாளர்களுக்கும், தொழில் நுட்ப உதவியாளர்கள், டிரைவர்கள் மற்றும் பல்வேறு வகை தொழில் நுட்ப பணியாளர்களுக்கு, தொழில் நுட்ப பதவிக்குரிய காலமுறை வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி மின்துறையில் கம்பியில்லா தொடர்பு பிரிவில் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வந்த, பட்ட படிப்பு முடித்த உதவி பொறியாளர்களுக்கு ரூ. 2000 – 3500 லும், டிப்ளமோ முடித்த தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு ரூ. 1640 – 2900 லும் காலமுறை ஊதியத்தில் பணி அமர்த்தப்பட்டனர். (அரசு ஆணை எண். 180, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.3) நாள் 10.09.98.

சென்னை மாநகராட்சியில் பணியாற்றி வந்த **49** தினக்கூலி தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு ரூ.**4500 –125–7000** என்ற காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி இயந்திர பொறியியல் துறையில் ஓட்டுநர்கள் ரூ.3200 – 85 – 4900 என்ற காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை **45**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **7.3.2001)**

மேற்குறிப்பிட்ட மின்துறையில் **400** தற்காலிக தொழிலாளர்களாக பணி புரிந்து வந்த ITI மற்றும் கடின உழைப்பு பணியாளர்களுக்கு நிரந்தர நிலையில் பணியமர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்ட நிலையில், அரசிடம் இருந்து கீழ்கண்டவாறு வினா எழுப்பப்பட்டது.

1) ITI சான்றிதழ் பெற்ற பணியாளர்களுக்கும், Non- ITI பணியாளர்களுக்கும் தினக்கூலியில் அதிகப்படியான வித்தியாசம் உள்ள நிலையில், இருவரையும் எவ்வாறு ஒரே ஊதிய விகிதத்தில் வைக்க முடியும் **?**

2) ITI தொழிலாளர்களுக்கும் Non-ITI தொழிலாளர்களுக்கும் கல்வித் தகுதி வேறுபாடு உள்ளதால் இவர்களை எதன் அடிப்படையல் ஒரே ஊதியத்தில் வைக்க முடியும் **?**

இந்த நிலையில், **23.02.2006** நாளிட்ட அரசாணையில் கண்டுள்ளபடி சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து வந்த தற்காலிக தொழிலாளர்களை, பணி நிரந்தரம் செய்ய, அரசிடம் இருந்து ஆணை பெறப்பட்டது.

சென்னை மாநகராட்சி ஆணையாளர் மற்றும் மேற்பார்வை பொறியளர்/மின்சாரம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி வெவ்வேறு ஊதியம் பெற்றுவந்த I.T.I. சான்றிதழ் பெற்ற தொழில்நுட்ப பணியாளர்கள் **144** பேர் மற்றும் கடின உழைப்பு தொழிலாளர்கள் **256** பேர் ஆக மொத்தம் **400** தொழிலாளர்களுக்கு ரூ.**2550–55–2660–60–3200** என்ற ஒரே விதமான காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்து பணிவரன்முறைப்படுத்திவிட்டது. ஐ.டி.ஐ. சான்றிதழ் பெற்ற தொழில்நுட்ப பணியாளர்கள் கடின உழைப்பு தொழிலாளர்களைவிட கல்வித் தகுதியில் மேம்பட்டவர்களாக இருந்த காரணத்தினாலும் அவர்களின் பணி மேம்பட்ட பணியாக இருந்த காரணத்தினாலும் தான் அவர்களுக்கு பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்து இருந்த மேம்பட்ட ஊதியம் தினக்கூலியாக வழங்கப்பட்டது. ஆனால் பணி வரன்முறைப்படுத்தும் போது இருபிரிவினரையும் ஒரே நிலையில் வைத்து ரூ.**2550–3200** என்ற ஊதிய விகிதத்தில் பணி வரன் முறைப்படுத்தியது. சென்னை மாநகராட்சி மின்துறையில் I.T.I. தொழில்நுட்ப பணியாளர்களுக்கான கீழ்நிலை காலமுறை ஊதியம் அன்னார்களின் கல்வித் தகுதி அடிப்படையில் ஊதியவிகிதம் மாறுபட்டு நிர்ணயம் செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

இது குறித்து, கீழ்கண்ட கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

தமிழக அரசு பல்வேறு துறைகளில் காலிப் பணியிடம் உள்ள நிலையிலும், காலிப்பணியிடம் இல்லாத பட்சத்திலும் புதிய பதவிகள் தோற்றுவித்து தினக்கூலியாக உள்ள ஐ.டி.ஐ பணியாளர்களுக்கு, தொழில் நுட்ப உதவியாளர்கள், டிரைவர்கள் மற்றும் பல்வேறு வகை தொழில்நுட்ப பணிக்குரிய காலமுறை ஊதியம் வழங்கியுள்ளது.

சென்னை மாநகராட்சி, மின்துறையில் ITI படித்த நிரந்தர பணியாளர்களுக்கு முதல் நுழைவு பதவி ஒயர்மேன் – கிரேடு II ஆகும். அன்னார்களுக்கு பழைய காலமுறை ஊதியம் ரூ.3050 – 75 – 3950 – 80 – 4590 ஆகும். ஆறாவது ஊதிய குழுவின் பரிந்துரையின்படி, ஒயர்மேன் கிரேடு II பதவிக்கு புதிய சம்பள விகிதம் ரூ.5200 – 20200 + கிரேடு ஊதியம் ரூ.**1900** ஆகும்.

எனவே, மேற்குறிப்பிட்ட ஐ.டி.ஐ படித்த நிரந்தர பணியாளர்களுக்கு அன்னார்களின் கல்வித் தகுதியின் அடிப்படையில் காலமுறை ஊதிய விகிதம் பழையது ரூ.**3050 – 4590** என ஊதியம் நிர்ணயம் செய்து **23.02.2006** முதல் வழங்க அரசுக்கு அனுப்பி திருத்திய ஆணை பெற மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/37411/2009</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 25.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :161/2010 பொருள் எண். 31

**<u>பணியமைப்பு</u>**

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் பொதுப்பணி விதிகள், பொறியியல் பணிவிதிகள், பொது சுகாதார பணி விதிகள், மாவட்ட குடும்ப நலப்பணி விதிகள், சட்டப்பணி விதிகள் போன்ற பல்வேறு பணிவிதிகள் உள்ளடங்கியுள்ளது.

இப்பணிவிதிகளின்படி ஒவ்வொரு பதவிகளுக்குண்டான துறைத் தேர்வுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்துறை தேர்வுகள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பின் கீழ் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்படும் அலுவலர்கள் சிலர் துறை தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற விதிமுறையை அறியாமல் பணிபுரிந்து ஒய்வு பெறும் தருணத்தில் இவர்கள் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாததை உள்ளாட்சி நிதி தணிக்கை சுட்டிக்காட்டி தணிக்கை தடை ஏற்படுத்தப்பட்டு ஓய்வூதிய பயன்கள் வழங்க இயலாத நிலை உருவாகிறது. இவ்வகையான அலுவலர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு அரசிடம் கோரிக்கைகள் விடுத்து வருகிறார்கள். துறை தேர்வுகளிலிருந்து தேர்ச்சி பெறாத அலுவலர்களுக்கு சம்பந்தப்பட்ட துறை தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி அரசின் தளர்வாணை பெற்ற பின்னரே ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் வெகுவாக காலதாமதம் ஏற்படுவதோடு, சீறிய முறையில் சராசரியாக 30 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து ஓய்வு பெறும் அலுவலர்களிடையே பெரிதும் குறைகள் நிலவுவதோடு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். இவ்வகையான இனங்கள் மீது நடைமுறையில் மன்றத் தீர்மானத்திற்கு தனித்தனியாக செயற்குறிப்பு அனுப்பப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியில் பல ஆண்டுகள் பணிபுரிந்து ஒய்வு பெற்ற அலுவலர்களது பணப்பயன்களை நிறுத்தம் செய்வது எந்த வகையிலும் நிர்வாகத்தினை பாதிப்புக்குள்ளாக்க வழிவகை இல்லை. இக்கருத்து பரிசீலிக்கப்பட்டு ஒரு கால வரம்பு நிர்ணயித்து ஒய்வு பெற்ற அலுவலர்கள் / ஓர் ஆண்டுக்குள் ஓய்வு பெறும் அலுவலர்கள் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி துறை தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கலாம்.

அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 06.10.2009ல் சென்னை மாநகராட்சியிலுள்ள வகுப்பு 1 முதல் 4 வரையுள்ள பதவிகளுக்கு சில நேர்வுகளில் பதவி உயர்வுக்கு உறுதியாக்கம் வழங்குவது, பதவி உயர்வு வழங்குவது, ஒழுங்கு நடவடிக்கை நேர்வுகளில் இறுதி ஆணை வழங்குவது, வயது, தமிழ்மொழி மற்றும் பிற துறை தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணை மற்றும் பணி ஒய்வு வழங்குவது போன்ற அதிகாரங்கள் தற்சமயம் அரசிடம் உள்ளதை பட்டியலிட்டு சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு / ஆணையருக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டு, இவ்வரசாணையின்படி தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி அரசு அளித்த அதிகார பகிர்ந்தளிப்பினை தொடர்ந்து நிர்வாக நலன் கருதியும், 30 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து ஓய்வு பெறும் அலுவலர்களிடையே பெரிதும் குறைகள் நிலவி, மிகுந்த சிரமத்திற்குள்ளாவதாலும், ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் இம்மன்ற தீர்மானத்திலிருந்து ஓர் ஆண்டுக்குள் ஓய்வு பெறும் அலுவலர்களுக்கு மட்டும் அவரவர் பணியமைப்பின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி துறை தேர்வுகளில் தேர்ச்சி மற்றும் தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து முழு ஓய்வூதிய பயன்கள் வழங்கவும் மற்றும் கல்வி தகுதி தளர்வு வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண். ஈ3/31544/01**
**ஆணையர் அவர்களின் 30.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :162/2010 பொருள் எண். 32

**அதிகார பங்களிப்பு வழங்குதல்**

சென்னை மாநகராட்சி பணியமைப்பிலுள்ள நான்கு வகுப்புகளில் பின்வரும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகளுக்கு கலம் – 3ன் படி தற்போது நியமனக்குழு மற்றும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு மேல்நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.

இவ்வழக்கமான நிகழ்வுகள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் காலதாமதமின்றி எளிய முறையில் அனுமதி பெற நிர்வாக நலன் கருதி இதனை கலம் – 4ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களுக்கு அதிகார பங்களிப்பு (Delegation of Powers) வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண். | பொருள் (1) | வகுப்பு (2) | தற்போதுள்ள அதிகாரம் (3) | இனிவரும் காலங்களில் அதிகார பங்களிப்பு வழங்கப்பட வேண்டிய அலுவலர்கள் (4) |
|---|---|---|---|---|
| 01. | **பணிவரன்முறை** (Regularisation of Service) | வகுப்பு – I (ஏ), (முதன்மை கணக்கு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அரசாணை (நிலை) எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன் படி). | மன்றம் | நியமனக்குழு |
| | | வகுப்பு I (பி) அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). மற்றும் வகுப்பு II. | மன்றம் | நியமனக்குழு |
| 02. | **உறுதியாக்கம்** (Confirmation Order) | வகுப்பு – I (ஏ), (முதன்மை கணக்கு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அரசாணை (நிலை) எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன் படி). | மன்றம் | நியமனக்குழு |
| | | வகுப்பு I (பி) அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). மற்றும் வகுப்பு II. | மன்றம் | நியமனக்குழு |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. | **தகுதிகாண் பருவம்** முடித்தவராக அறிவிக் கப்படும் இனங்கள் – (ஒரு பணி விதியிலிருந்து மற்றொரு பணி விதிக்கு மாறுதலில் செல்லும் போதும் மற்றும் ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்புக்கு செல்லும் போது). **(Change in class of Service)** | வகுப்பு – I (ஏ), (முதன்மை கணக்கு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அரசாணை (நிலை) எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன் படி). | மன்றம் | நியமனக்குழு |
| | | வகுப்பு I (பி) அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). மற்றும் வகுப்பு II. | மன்றம் | நியமனக்குழு |
| 04. | ஒரே பதவியில் 10 ஆண்டுகள் / 20 ஆண்டுகள் / 30 ஆண்டுகள் தகுதி பணி முடித்த பின் முறையே தேர்வு நிலை / சிறப்பு நிலை போனஸ் ஊதிய உயர்வு தொடர்பாக. ஊதியம் நிர்ணயம் செய்வது. | வகுப்பு – I (ஏ) (முதன்மை கணக்கு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). | மன்றம் | நியமனக்குழு |
| | | வகுப்பு I (பி) அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). மற்றும் வகுப்பு II | மன்றம் | நியமனக்குழு |
| 05. | **வெளிநாடு செல்ல** கடவுச்சீட்டு (Pass Port) / வெளிநாடு செல்ல (To go Abroad) ஆட்சேபனையின்மை சான்று (N.O.C). | வகுப்பு – I (ஏ) (முதன்மை கணக்கு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). | மன்றம் | ஆணையர் |
| | | வகுப்பு I (பி) அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). | மன்றம் | ஆணையர் |
| | | வகுப்பு – II. | மன்றம் | ஆணையர் |
| | | வகுப்பு – III | நியமனக்குழு | ஆணையர் |
| | | வகுப்பு – IV. | நியமனக்குழு | ஆணையர் |
| 06. | வேலை வாய்ப்பு வேண்டி அயல்நாடு செல்வது. (Employment Overseas) | வகுப்பு – I (ஏ) (முதன்மை கணக்கு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). | மன்றம் | நியமனக்குழு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வகுப்பு I (பி) அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). | மன்றம் | நியமனக்குழு |
| | | வகுப்பு - II. | மன்றம் | நியமனக்குழு |
| | | வகுப்பு – III | நியமனக்குழு | நியமனக்குழு |
| | | வகுப்பு – IV. | நியமனக்குழு | நியமனக்குழு |
| 07. | <u>தமிழ்மொழி தேர்ச்சி மற்றும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி</u> பெறுவதிலிருந்து தளர்வாணை | வகுப்பு – I (ஏ) (முதன்மை கணக்கு அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி). | மன்றம் | நியமனக்குழு |
| | | வகுப்பு I (பி) அரசாணை (நிலை) 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்: 06.10.2009 ன்படி) மற்றும் வகுப்பு II | மன்றம் | நியமனக்குழு |
| 08. | கல்வித்தகுதி தளர்வாணை | வகுப்பு – III மற்றும் IV | நியமனக்குழு | நியமனக்குழு |
| 09. | வயது தளர்வாணை | வகுப்பு – III மற்றும் IV. | நியமனக்குழு | நியமனக்குழு |
| 10. | தமிழ்மொழி மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணை | வகுப்பு – III | மன்றம் | நியமனக்குழு |
| 11. | <u>பதவி மாற்றம்</u> ஒரு பதவியிலிருந்து மற்றொரு பதவிக்கு மாற்றம் செய்வது | வகுப்பு – IV | நியமனக்குழு | நியமனக்குழு |

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.இ7/5934/2010**
**ஆணையர் அவர்களின் 08.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :163/2010 பொருள் எண்.33

**சென்னை மாநகராட்சியின் மருந்து கிடங்குகளை ஒருங்கிணைத்தல்**

11.02.2010 அன்று ஆணையர் அவர்களின் அறையில் மருந்து கிடங்குகளை ஒன்றாக இணைத்து பராமரிப்பது தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டத்தில், தற்போது மலேரியாத் துறை, சுகாதாரத்துறை மாவட்ட குடும்ப நலத்துறை ஆகிய துறைகளுக்கு தனித்தனியாக மருந்து கிடங்கு உள்ளது. இவைகளை தனித்தனியாக பராமரிப்பதால் சென்னை மாநகராட்சியால் கொள்முதல் செய்யப்படும் மருந்து பொருட்கள் மற்றும் இந்திய அரசிடமிருந்து இலவசமாக பெறப்படும் மருந்து பொருட்கள் ஆகியவற்றை பெறும்போதும் மற்றும், இவைகளை விநியோகிக்கும் போதும், இருப்பு தொடர்பான விவரங்களை சரியான முறையில் பராமரிப்பதில் பல சிரமங்கள் உள்ளது. எனவே, அனைத்து மருந்து கிடங்குகளையும் ஒருங்கிணைத்து ஒன்றாக பராமரிக்கலாம் எனவும், இதனால் கொள்முதல் மற்றும் விநியோகம் ஆகிய பணிகள் எளிதாக இருக்கும் என தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கிடங்குகளை உதவி சுகாதார அலுவலர் மற்றும் தலைமை மருந்தாளுநர் ஆகிய நிலையில் பணி நியமனம் செய்து கண்காணிக்கவும், பண்டக காப்பாளர்களை நியமித்து பராமரிக்கலாம் எனவும், மேற்கண்ட நடவடிக்கைகளை மன்றத்தின் ஒப்புதல் பெறலாம் என முடிவெடுக்கப்பட்டது.

இதனடிப்படையில், சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை, மலேரியாத்துறை மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை ஆகிய துறைகளுக்கு தனித்தனியாக உள்ள மருந்து கிடங்குகளை ஒன்றாக ஒருங்கிணைத்து பராமரிக்க, நிலைக்குழு(சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

> ‘‘05.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.9/2010, நாள்.05.04.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.6.ந.க.எண்.இ1/ 1133/2009**
**ஆணையர் அவர்களின் 19.03.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண்:164/2010 பொருள் எண்.34

**பழுதடைந்த பொதுக் கழிப்பிடம் இடிக்க அனுமதி**

| வார்டு எண்.82 | மண்டலம்–6 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | கறீம் மொய்தீன் தெருவில் உள்ள பழைய பொதுக் கழிப்பிடம். |
| கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1977 ஆம் ஆண்டு பணித்துறையால் கட்டப்பட்டது. |
| கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.34,665.47 |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | மாண்புமிகு சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் பொது கழிப்பிடம் கட்டும் பொருட்டு இடிக்கப்பட உள்ளது. |
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | 1506 சதுர அடிகள் |
| திட்ட முன் மொழிதல் | மாண்புமிகு சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் பொது கழிப்பிடம் கட்டப்பட உள்ளது. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 6வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 282, நாள்: 27/11/2009 |

எனவே, மேற்குறிப்பிட்ட கட்டடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.04..2010 அன்று தீர்மானஎண்.12/2010ன்படி நிலைக்குழு(சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.47/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.9.ந.க.எண்.பி1/616 /2010**
**ஆணையர் அவர்களின் 08.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :165/2010 பொருள் எண்.35

**சத்துணவுக்கூட கட்டடம் இடிக்க அனுமதி.**

| வ. எண். | வார்டு எண்.–137 | மண்டலம்–9 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மதுரைவீரன் கோவில் தெருவில் உள்ள சத்துணவுக்கூடம் (மைய எண்.903) |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | கட்டிடத் துறை, 1993 |
| 3. | கட்டித்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.67,148.19 |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| 5. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 74.35 ச.மீ. (800 சதுரஅடி) |
| 6. | திட்ட முன்மொழிதல் | புதியதாக சத்துணவுக் கூடம் கட்டப்படும். |
| 7. | வார்டு குழு தீர்மான(பரிந்துரை) எண் மற்றும் நாள் | 9வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.373, நாள்:23.11.2009 |

எனவே, மேற்கண்ட கட்டடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“9.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில்தீர்மான எண்.12/2010 நாள் 09.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.48/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.9.ந.க.எண்.பி1/617 /2010</u>**
**<u>ஆணையர் அவர்களின் 19.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :166/2010 பொருள் எண்.36

**<u>சத்துணவுக்கூட கட்டடம் இடிக்க அனுமதி.</u>**

| வ. எண். | வார்டு எண்.–137 | மண்டலம்–9 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மதுரைவீரன் கோவில் தெருவில் உள்ள சத்துணவுக்கூடம் (மைய எண்.904) |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | கட்டிடத் துறை, 1993 |
| 3. | கட்டித்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.67,148.19 |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| 5. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 74.35 ச.மீ. (800 சதுரஅடி) |
| 6. | திட்ட முன்மொழிதல் | புதியதாக சத்துணவுக் கூடம் கட்டப்படும். |
| 7. | வார்டு குழு தீர்மான(பரிந்துரை) எண் மற்றும் நாள் | 9வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.372, நாள்:23.11.2009 |

எனவே, மேற்கண்ட கட்டடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

9.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.13/2010 நாள் 09.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''.

"21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.49/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

## ம.அ.10.ந.க.எண்.சி2/6956/2009
## ஆணையர் அவர்களின் 26.02.2010 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண் :167/2010 பொருள் எண்.37

**பழுதடைந்த நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடம் இடிக்க அனுமதி**

| வ.எண் | வார்டு எண்.148 | மண்டலம்–10 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | ஆர்.கே. மடம் சாலை சந்திப்பில் பழுதடைந்த உபயோகமற்ற நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடம் |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1980ம் ஆண்டு கட்டப்பட்டது. |
| 3. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.2,150.17 |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த உபயோகமற்ற நிலையில் உள்ளதால் இடித்துவிட்டு புதிய பொதுக் கழிப்பிடம் கட்டப்படவுள்ளது. |
| 5. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 256.09 சதுர அடி |
| 6. | திட்ட முன் மொழிதல் | புதியதாக நவீன பொதுக்கழிப்பிடம் கட்டுவதற்காக |
| 7. | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள் | 10வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.472, நாள்.21.10.2009 |

எனவே, ஆர்.கே. மடம் சாலை சந்திப்பில் பழுதடைந்த உபயோகமற்ற நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘05.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.10/2010, நாள்.05.04.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது’’.

> “21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.46/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**இ.பொ.து.ந.க.எண்.ம.லாரி நி./061/2009**
**ஆணையாளரின் 30.03.2009 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :168/2010 பொருள் எண்.38

**பயனற்ற வாகனங்கள் – கழிவு செய்து விற்பனை செய்தல்**

சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட 12 வாகனங்கள் பயனற்றது என கழிவு செய்து விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பு நிர்ணயம் செய்ய இணை ஆணையாளர் (பணிகள்) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 26.02.2009 மற்றும் 27.02.2009 அன்று நேரடி ஆய்வு செய்து ஒவ்வொரு வாகனத்திற்கும் மதிப்பு நிர்ணயித்து ஒப்பம்-ஏலம் கோரி விற்பனை செய்ய பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி இரண்டு முறை ஒப்பம்-ஏலம் முறையில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டு பெறப்பட்டதில் நிலவரப்படி விலை குறைவாகவே காணப்பட்டதல் ரத்து செய்து விட்டு மூன்றாவதாக விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. 10.02.2009 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறும் இறுதி நாளன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி நமூனா மட்டும் பெறப்பட்டது. மறு நாள் 11.02.2009 அன்று நடைபெற்ற ஏலத்தில் 7 ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். கீழ்கண்ட 12 வாகனங்களை வாங்குவதற்கு ஏலம் மற்றும் ஒப்பந்த நமூனாவில் கோரிய (மொத்தம் ரூ.11,83,193/- ) விலையானது தொழில்நுட்பக்குழு நிர்ணயித்த ( மொத்தம் ரூ. 10,79,000/-) மதிப்பை விட அதிகமாக (மொத்தம் ரூ.1,047,193/-) இருப்பதால் விற்பனை செய்ய பின்வருவனவற்றின் மீது அனுமதி வேண்டப்படுகிறது.

1. பயனற்றது என நிறுத்தப்பட்டுள்ள கீழ்கண்ட 12 வாகனங்கள் அனைத்தும் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பழுதுப்பார்த்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் கழிவு செய்யவும்;

2. 12 பயனற்ற வாகனங்களை விற்பனை தீர்வு செய்யும் பொருட்டு மூன்றாவது முறையாக மறு ஒப்பம்-ஏலம் கோரியதில் (வரிசை எண்.1 முதல் 9 வரை ) 9 வாகனங்களை வாங்குவதற்கு ஏலதாரர்/ஒப்பந்தப்புள்ளி நமுனாவின் கோரிய விலையானது தொழில் நுட்பக்குழு ஒவ்வொரு வாகனத்தையும் ஆய்வு செய்து நிர்ணயித்த மதிப்பைவிட அதிகமாக இருப்பதாலும் (வரிசை எண்.10 முதல் 12 வரை) 3 வாகனங்களை வாங்குவதற்கு மூன்றாவது முறையாக ஏலத்தில் பெறப்பட்ட விலையானது தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பைவிட குறைவாக இருப்பினும் மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டு கீழ்கண்ட 12 வாகனங்களை விற்பனை செய்யும் பொருட்டு மூன்றாவது முறையாக ஒப்பம் - ஏலம் கோரி பெறப்பட்ட (மொத்தம் ரூ.11,83,193/-) விலையானது தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த (மொத்தம் ரூ.10,79,000/-.) மதிப்பைவிட அதிகமாக ( மொத்தம் ரூ.1,04,193/-) இருப்பதால் உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும்,

| வ.எண் | வாகன பதிவு எண். 2. | வகை 3. | தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பு ரூ. 4. | முதல் முறை கோரி பெறப்பட்ட உயர்ந்த விலை ரூ. 5. | இரண்டாவது முறை கோரி பெறப்பட்ட உயர்ந்த விலை ரூ. 6. | மூன்றாவது முறை கோரி பெறப்பட்ட உயர்ந்த விலை ரூ. 7. | உயர்ந்த விலை அளித்தவர் பெயர் 8. |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | டி.எண்.04 எப் 6078 | லேலாண்ட் | 1,07,000/- | 93,000/- | 1,11,000/- | 1,43,000/- | ஸ்ரீபால முருகன் ஆட்டோ மொபைல்ஸ் ( ஏலதாரர்) |
| 2. | டி.எண்.04 இ 3162 | லேலாண்ட் | 1,07,000/- | 91,000/- | 1,08,000/- | 1,36,500/- | ஸ்ரீசக்திராம் டிரேடர் ( ஏலதாரர்) |
| 3. | டி.எண்.04 பீ 8229 | டாடா 608 | 54,000/-. | 40,000/- | 54,000/- | 62,506/- | ஸ்ரீபாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் ( ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்) |
| 4. | டி.எண்.04 பீ 7417 | டாடா 608 | 57,000/-. | 43,000/- | விலை கோரவில்லை | 62,588/- | ஸ்ரீபாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் ( ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்) |
| 5. | டி.எண்.04 சி 4153 | டாடா 608 | 52,000/-. | 41,500/- | 53,000/- | 62,899/- | ஸ்ரீபாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் ( ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்) |
| 6. | டி.எஸ்.சி 262 | லேலாண்ட் | 91,000/- | 65,000/- | விலை கோரவில்லை | 96,000/- | ஸ்ரீபாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் ( ஏலதாரர்) |
| 7. | டி.எஸ்.சி 261 | லேலாண்ட் | 1,00,000/- | 73,000/- | 1,00,500/- | 1,08,000/- | M/s செல்வம் டிரேடர்ஸ் (ஏலதாரர்) |
| 8. | டி.எண்.04 பீ 3613 | லேலாண்ட் | 98,000/-. | 75,000/- | 1,00,500/- | 1,25,800/- | ஸ்ரீபாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் ( ஏலதாரர்) |
| 9. | டி.எண்.04 எப் 8397 | லேலாண்ட் | 1,06,000/-. | 81,000/- | 1,06,200/- | 1,11,700/- | M/s A.V.S. டிரேடர்ஸ் (ஏலதாரர்) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **10.** | டி.எண்.04 எப் **6397** | லேலாண்ட் | **1,00,000/-.** | **80,000/-** | விலை கோரவில்லை | **91,000/-** | ஸ்ரீபாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் ( ஏலதாரர்) |
| **11.** | டி.எண்.04 எப் **6085** | லேலாண்ட் | **1,02,000/-.** | **80,000/-** | விலை கோரவில்லை | **96,000/-** | ஸ்ரீபாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் ( ஏலதாரர்) |
| **12.** | டி.எண்.04 எப் **5496** | லேலாண்ட் | **1,05,000/-.** | விலை கோரவில்லை | விலை கோரவில்லை | **87,200/-** | ஸ்ரீபாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் ( ஏலதாரர்) |

**3.** பயனற்ற வாகனங்களை விற்பனை தீர்வு செய்வதற்கு முன்பாக ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பு தொகையை **(20%)** ரூ. **2,88,945/-** சரிசெய்து செலுத்த வேண்டிய விலையின் மீதி தொகையுடன் விற்பனை வரி மற்றும் வருமான வரி ( கோரிய விலைக்கு ) தனித்தனியாக செலுத்துச்சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்த கோருவதற்கும்

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு ( பணிகள் ) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.**59/2010** நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மக.கு.ந.க.எண்.அ8/149/2010.**
**ஆணையாளரின் 16.04.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :169/2010 பொருள் எண்.39

**அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி.**

16.01.2006 நாளிட்ட அரசாணை நிதி (ஊதியம்) துறை, எண்.59.ல் அரசு பணியாளர்கள் மற்றும் அவர்கள் குழந்தைகள் செய்முறை கணினி அறிவு பெறுவதற்காக அனைத்து காலச்சம்பள ஏற்ற முறையிலுள்ள முறைப்படியான அரசு பணியாளர்கள் கணினி வாங்குவதற்கு முன்பணம் ரூ.50,000/– அல்லது கணினியின் விலை இவற்றில் எது குறைவோ அதன் அடிப்படையில் முன்பணம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

01.04.1992 நாளிட்ட அரசாணை நிதி (ஊதியம்) துறை, எண்.231ல், விதிகள் மற்றும் ஒழுங்கு முறை விதிகளின்படி, அரசு பணியாளர்கள் மோட்டார் கார் அல்லது கணினி ஏதாவது ஒன்றிற்கான முன்பணம் மட்டும் பெற தகுதியுடையவர் ஆவார்கள். மேலும், முன்பண தொகையினை 100 தவணைகளில் பிடித்தம் செய்யப்பட வேண்டும். முன்பணத் தொகை, முன்பணம் பெற்ற அடுத்த மாதத்திலிருந்தோ அல்லது கணினி வாங்கியதிலிருந்தோ எது முன்னதோ அந்த மாதத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

மோட்டார் கார் முன்பணத்திற்கு அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் முறையின் அடிப்படையில் வட்டி விகிதம் மற்றும் வட்டி பிடித்தம் கணக்கிடப்படல் வேண்டும்.

கணினி வாங்க வழங்கப்படும் முன்பணத்திற்கு தனிவட்டி விகிதத்தில் (Simple interest) வட்டி கணக்கிடவும், மோட்டார் கார் வாகன முன்பணத்திற்காக அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் வட்டி விகிதங்களும் இதற்கு பொருந்தும். மாநகராட்சி ஊழியர்களுக்கு கணினி வாங்க 460-10-12-00-Loans Advances to Employees-Computer Advance தலைப்பின் கீழ் 2010–2011ஆம் நிதியாண்டிற்கு ரூ.25,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

16.01.2006 நாளிட்ட அரசாணை நிதி (ஊதியம்) துறை, எண்.59.ல் கண்டுள்ள அரசாணையின் நகல் பகுதியில் ஆணையர், சென்னை மாநகராட்சி என்று குறிப்பிடப்படவில்லை எனினும் அனைத்து அரசாணைகளும் சென்னை மாநகராட்சிக்கு பொருந்து என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

16.01.2006 நாளிட்ட அரசாணை நிதி (ஊதியம்) துறை, எண்.59னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.82/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண். பி5/283/2010</u>**
**<u>ஆணையர் அவர்களின் 20.04.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :170/2010 பொருள் எண்: 40

**<u>மதிப்பீடு</u>**

மண்டலம் – 3 வார்டு 49 ல் கீழ்குறிப்பிட்ட பணிகளுக்கு 2009 – 2010 ஆம் ஆண்டு விலைப்பட்டியல்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 2,86,40,000/– க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | மண்டலம்/வார்டு | பணியின் விவரம் | நீளம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | மண்டலம் – 3 வார்டு 49 | எஸ்பிளனேட் சாலை (கிழக்கு), என்.எஸ்.சி போஸ் சாலை (தெற்கு), பிராட்வே பேருந்து நிலையம் (மேற்கு) மற்றும் பிரேசர் பிரிட்ஜ் சாலையில் 2 மீ க்கு 2 மீ அளவிலான பெட்டக வடிவ கான்கிரீட் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி | 575 மீ | 1,50,82,000/– |
| 2 | மண்டலம் – 3 வார்டு 49 | என்.எஸ்.சி போஸ் சாலை வடக்கு, பிராட்வே பேருந்து நிலையம் (மேற்கு) மற்றும் பிரேசர் பிரிட்ஜ் சாலையில் 2 மீ க்கு 2 மீ அளவிலான பெட்டக வடிவ கான்கிரீட் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி | 515மீ | 1,35,58,000/– |
| | | | மொத்தம் | **ரூ. 2,86,40,000 /–** |

"21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.60/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி )-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.88/2010 நாள்: 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
*******

**பா.து.ந.க.எண்.பி3/ 1508 /2001**
**ஆணையர் அவர்களின் 13.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :171/2010 பொருள் எண்.41

**கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரல்**

கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் தியாகப்பா செட்டித்தெரு மற்றும் கண்ணன் தெருக்களை இணைத்து கோட்டம் – 10 மற்றும் 11, மண்டலம் – 1ல் வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு ரூ.720 லட்சங்களுக்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.278/2003, நாள்.30.05.2003 மூலம் கீழ்க்காண்பவைகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

(1) இத்திட்டத்திற்கு சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அளித்துள்ள தோராய மதிப்பீடு தொகையான ரூ.720 லட்சங்களுக்கு ஒப்புதலும் மற்றும் அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

(2) இத்திட்டத்திற்கான செலவினத்தில் 50 சதவீதம் சென்னை மாநகராட்சியும் 50 சதவீதம் தென்னக இரயில்வேயும் பகிர்ந்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,

(3) இத்திட்டத்திற்கான தொகையினை, சென்னை மாநகராட்சி, நிதி நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு அனுமதி கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

இதனடிப்படையில் அரசுக்கு 21.07.2003 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. இதனிடையே பொதுமக்களின் நலன் மற்றும் விருப்பம் கருதி இத்திட்டத்தினை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக 2005 – 2006 அலுவலக விலைப்பட்டியிலின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.496.40 லட்சங்களுக்கு ஒப்புதல், திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றம் மற்றும் அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோர அனுமதியும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் 08.08.2006 நாளிட்ட குறிப்பின் மூலம் பெறப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்பங்கள் விற்பனையாகவில்லை. எனவே, ஒப்பக்குழுமம் மறு ஒப்பம் கோர பரிந்துரை செய்தது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 2006 – 2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி ரூ.494.50 லட்சங்களுக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.96/2007, நாள் 09.03.2007ன் மூலம் கீழ்க்கண்ட இனங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

(1) 2006 – 2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.494.50 லட்சங்களுக்கு அனுமதியும் மற்றும் ஒப்பங்கள் கோர அனுமதியும்,
(2) இத்திட்டத்திற்கான செலவினத்தில் 50 சதவீதம் சென்னை மாநகராட்சியும் 50 சதவீதம் தென்னக இரயில்வேயும் பகிர்ந்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,
(3) இத்திட்டத்திற்கான செலவினத்தை சென்னை மாநகராட்சி மூலதன நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள அனுமதியும்,
(4) 2006 – 2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகையான ரூ.494.50 லட்சங்களுக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு மற்றும் ஒப்பங்கள் கோர அனுமதி கோரி அரசுக்கு கடிதம் எழுத மன்றத்தின் அனுமதியும்,

அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு அரசாணை நிலை எண்.84, நாள் 11.06.2007 மூலம் பெறப்பட்டது. இதனிடையே இரயில்வே துறை கூடுதல் இருப்புப்பாதை அமைத்துள்ளதால் பணிக்கு தேவைப்படும் நிலத்தினை தர இயலாத நிலையில் பணியிட வரைபடத்தை சற்று மாற்றியமைத்துள்ளது.

அதன் அடிப்படையில் 2007 – 2008ம் ஆண்டு விலைப்பட்டியல்படி ரூ.628 லட்சங்களுக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தீர்மான எண்.98/2008, நாள் 29.02.2008ன் மூலம் கீழ்க்கண்ட இனங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/ 922 /2010</u>**
**<u>ஆணையர் அவர்களின் 19.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :179/2010 பொருள் எண்.49

**<u>நில உரிமை மாற்றம்</u>**

சென்னை மாநகரத்தில் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற்றுவற்காக, கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு, அடையார் கிராமம், பிளாக் எண்.8, நகர புல எண்.26ல், மண்டலம்–9, வார்டு எண்.140–ல், சைதாப்பேட்டை, சின்னமலை பகுதியில், மவுண்ட் சாலையில், சென்னை மாநகராட்சி பள்ளி விளையாட்டுத் திடலாக உள்ள 0.124 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தினை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கும், முன் நுழைவு அனுமதி வழங்குவதற்கும் G.O.M.S.No.11, Planning Development and Special Initiatives (SI) Department, dated.22.02.2010-ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்தான தெளிவுரைகள் பின்னர் அளிக்கப்படும் எனவும் அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசுக்கு சொந்தமான சர்க்கார் புறம்போக்கு, அரசாங்க நீர் இறைக்கும் நிலையம் என வகைப்பாடு கொண்ட நிலத்தினை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு ஒப்படைக்க 9வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.408, நாள்.24.12.2009ல் ஏற்கனவே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட நிலம் அரசுக்கு சொந்தமான நிலம் என்பதால், இந்த நிலத்தினை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு நில உரிமை மாற்றம் செய்வதற்காக சென்னை மாநகராட்சியின் ஆட்சேபணையின்மையினை, சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.74/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/ 1152/2010**
**ஆணையர் அவர்களின் 05.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :180/2010 பொருள் எண்.50

**நில உரிமை மாற்றம்**

மண்டலம்–9, வார்டு–139ல் உள்ள அரசுப் பண்ணை கிராமத்தில் பிளாக் எண்.32, நில அளவை எண்.2ல் உள்ள சுமார் 161.70 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலம் உள்ளது. இந்நிலத்தினை சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு மண்டலம்–9ன் வார்டு குழு தீர்மான எண்.435, நாள்.13.01.2010ல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே வார்டுகுழு தீர்மானத்தில் பரிந்துரைத்தவாறு மண்டலம்–9, வார்டு–139ல் அரசுப் பண்ணை கிராமத்தில் உள்ள 161.70 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலத்தினை சென்னை மாநகராட்சி பயன்பாட்டுக்காக நில உரிமை மாற்றம் செய்து ஒப்படைக்குமாறு கோரி சென்னை மாவட்ட ஆட்சியருக்கு முன்மொழிவு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.81/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/ 5657 /2009**
**ஆணையர் அவர்களின் 01.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :181/2010 பொருள் எண். 51

**நியாய விலைக்கடைகளுக்கு இட ஒதுக்கீடு**

10.11.2009 நாளிட்ட அரசாணையில் பொது மக்களுக்கு வசதியற்ற வகையில் தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் நியாய விலைக்கடைகளுக்கு பதிலாக அரசு மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்கள் இருப்பின் அத்தகைய தகுதியான இடங்களை தேர்வு செய்து அந்த இடங்களில் நியாய விலை கடைகளை கட்டலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பொது வினியோக திட்டப்பணிகள் குறித்து 20.05.2008 அன்று ஆய்வு செய்த போது முடிவு செய்யப்பட்டது என்றும், சென்னை மாநகராட்சியை பொறுத்த வரையில் 117 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட இடங்களில் அந்தந்த துறை மூலம் நியாய விலைக்கடைகள் கட்டுவதில் ஏற்படும் கால தாமதம் தவிர்க்க சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடம் கட்டிடம் கட்டுவதற்கான பணியை ஒப்படைத்து அக்கட்டிடத்தை வாடகையின்றி அனுமதிப்பதற்கு பதில் நிதியை நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு வழங்கி சம்மந்தப்பட்ட இடங்களில் நில உரிமை மாற்றம் இன்றி கட்டிடங்கள் கட்டி அந்தந்த துறைகளின் கட்டுபாட்டிலேயே வைத்து கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் ஆகியவைகளின் பொது வினியோக கடைகள் வாடகையின்றி அனுமதிக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது என்றும் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அரசு முதன்மை செயலர் அவர்களின் 22.12.2009 நாளிட்ட கடிதத்தில் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் தேர்வு செய்யப்பட்ட 117 இடங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களையும், மண்டல அலுவலர்கள் ஆய்வு செய்யப்பட்டு 24 இடங்கள் மட்டுமே தர இயலும் என மண்டல அலுவலர்கள் 1, 5, 9, 10 ஆகியோர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பிற இடங்கள் திறந்தவெளி நிலம், பூங்கா, பள்ளிக்கூடம், விளையாட்டு திடல் மற்றும் தனியார் இடம் என்பதால் ஒதுக்கீடு செய்ய இயலாது என்பதால் பரிந்துரைக்கப்படவில்லை. மேலும் மேற்கண்ட இடங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒப்படைப்பது குறித்து 20.01.2010 அன்று அரசு முதன்மை செயலர் அவர்களால் தலைமைச்செயலகத்தில் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தின் போது மண்டல அலுவலர்களால் பரிந்துரைக்கப்பட்ட 24 இடங்கள் மட்டுமே தர இயலும் என சென்னை மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மண்டலம்–5 மற்றும் 9 வார்டு குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட 13 இடங்களை ஒப்படைப்பதற்கு 26.02.2010 நாளிட்ட மன்றத் தீர்மானத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மண்டலம்–1 மற்றும் 10 ஆகியவற்றின் வார்டுகுழு தீர்மானத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய 11 இடங்கள் பின்வருமாறு:

| வ எண். | குறியீடு எண். | நியாய விலைக்கடையின் முகவரி | தேர்வு செய்யப்பட்ட இடம் | புல எண். |
|---|---|---|---|---|
| 1 | BF032 | பாரதியார் கூ.ப.சாலை கடை எண்.10 1.வ.வு.சி.நகர், மார்கெட் சாலை, புதுவண்ணாரப்பேட்டை, சென்னை–81. | அம்மானியம்மன் கோயில் தெரு, டாடா கம்பெனி காலனி எதிரில் | **3953/14** |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | BF030 | பாரதியார் கூ.ப.சாலை கடை எண்.11 18, சென்னியம்மன் கோயில் தெரு, புதுவண்ணாரப்பேட்டை, செ–81. | சென்னியம்மன் கோயில் தெரு, வ.வு.சி.மீனவர் காலனி எதிரில் | 3953/14 |
| 3 | IC015 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், தரமணி–1, 13.அகஸ்தியர் தெரு, தரமணி, சென்னை–113. | தாமிரபரணி தெரு, அண்ணாநகர், தரமணியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 30x20 சதுரடி நிலம். | 171 / 4 |
| 4 | IC016 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், தரமணி–3, 13.அகஸ்தியர் தெரு, தரமணி, சென்னை–113. | தாமிரபரணி தெரு, அண்ணாநகர், தரமணியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 30x20 சதுரடி நிலம். | 171 / 4 |
| 5 | LC007 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், தரமணி–2, 1.பிள்ளையார் கோயில் தெர, சென்னை–113. | குழந்தைகள் மையம், மைய எண்.989 நேருத் தெரு, கழிக்குன்றம், கானகம், தரமணியில் உள்ள 20x20 சதுரடி நிலம் | 11 / 12 |
| 6 | LC030 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், வேளச்சேரி–3, 143,காந்திரோடு, வேளச்சேரி, சென்னை–42. | புளியங்கேணி, குழந்தைகள் நல மையம் அருகிலுள்ள காலி மனை 15x30 சதுரடி நிலம். | 2/2 பகுதி & 2/13 |
| 7 | LC038 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், வேளச்சேரி–1, 14. சீனுவாசன் தெரு, வேளச்சேரி, சென்னை–42. | வேளச்சேரி காவல் நிலையம் பின்புறம், ஓரண்டி அம்மன் கோயில் தெரு, வேளச்சேரி மனை 15x30 சதுரடி நிலம். | 393 / 3 பகுதி |
| 8 | LC043 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், வேளச்சேரி–6, 14/1.திரௌபதியம்மன் கோயில் தெரு, வேளச்சேரி, செ–42. | 219பி,காந்தி ரோடு (அடுத்து) கபாலி கல்யாணமண்டபம் எதிரில் 26x9 சதுரடி நிலம் | 124 / 122 |
| 9 | LC047 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், ஆதம்பாக்கம்–1, 42. இ.பி.காலணி, மெயின்ரோடு, ஆதம்பாக்கம் | மாநகராட்சிக்கு சொந்தமான எண்.15, பிளாட் எண்.20 (அருகில்) மோகனபுரி 1வது தெரு, ஆதம்பாக்கம் 80x14 சதுர அடி நிலம். | 571 / பகுதி |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | LC048 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், ஆதம்பாக்கம்–5, பிளாட் நெ40, கதவு எண்.6, சி.வி.காலணி, 4வது தெரு, பிருந்தாவன் நகர், சென்னை–88. | மாநகராட்சிக்கு சொந்தமான எண்.15, பிளாட் எண்.20 (அருகில்) மோகனபுரி 1வது தெரு, ஆதம்பாக்கம் 80x14 சதுர அடி நிலம். | 571 / பகுதி |
| 11 | IA 023 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், மாளவியா அவின்யூ, 60 திருவான்மியூர் நெடுங்சாலை, சென்னை–41 | சிவகாமிபுரம் 2வது தெரு வார்டு 155 மண்டலம்–10, திருவான்மியூர் கிராமம் சாலை ஒர பூங்கா காலி இடம் | 23 / 102 |

எனவே மேற்கண்ட இடங்களை மன்றத்தால் பின்னர் நிர்ணயிக்கப்படும் வாடகை தொகையை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திடமிருந்து வசூலிப்பதற்கு உட்பட்டு மேற்கண்ட இடங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழத்திற்கு முன்மொழிவு அனுமதி வழங்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.71/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/ 557 /2010**
**ஆணையர் அவர்களின் 19.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :182/2010 பொருள் எண்.52

**நியாய விலைக்கடைக்கு இட ஒதுக்கீடு**

27.01.2010 நாளிட்ட கடிதத்தில் திருவான்மியூர், ஜெயந்தி தியேட்டர் பின்புறம் எண்.26, காமராஜர் நகர் முதல் பிரதான சாலை, செ–41 நியாய விலைக்கடை செயல்பட லட்சுமி புரம், முத்துலட்சுமி ரோட்டில் அமைந்துள்ள சமூக நலக்கூடத்தில் உபயோகப்படுத்தப்படாமல் உள்ள உடற்பயிற்சி கூடத்தின் (சுமார் 450 ச.அடி) இடத்தினை ஒதுக்கீடு செய்ய கேட்டு கொள்ளப்பட்டுள்ளது 10வது வார்டு குழு தீர்மான எண்.33, நாள்.22.02.2010ல் மேற்கண்ட இடத்தை ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிமிடெட் நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு மண்டலம்10, வார்டு–155ல், திருவான்மியூர் லட்சுமிபுரம், முத்துலட்சுமி ரோட்டில் அமைந்துள்ள சமூக நலக்கூடத்தில் உபயோகப்படுத்தப்படாமல் உள்ள உடற்பயிற்சி கூடத்தினை சுமார் 450 சதுர அடி ஒதுக்கீடு செய்வதற்கும், சதுர அடிக்கு ரூ.15/– என வாடகை நிர்ணயம் செய்து 12 மாத வாடகையினை முன்பணமாக பெறுவதற்கும் ஒதுக்கப்படவுள்ள மேற்படி கட்டிடத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதாக இருப்பின் சென்னை மாநகராட்சி அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பதற்கும் வாடகை தொடர்பாக திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிமிடெட் நிறுவனத்தின் இசைவினை பெற்று பின்னர் ஒதுக்கீடு செய்வதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.75/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/2076/2009**
**ஆணையர் அவர்களின் 25.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :183/2010 பொருள் எண்.53

**நியாய விலைக்கடைக்கு இட ஒதுக்கீடு**

சென்னை மண்டலம்(தெற்கு) கோட்டூர்புரத்தில் தற்போது இயங்கும் அமுதம் சில்லரை அங்காடி கோட்டூர் கடை எண்.4 (எல்ஏ 038)ல் 3200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருவதாகவும் இதனால் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்குவதில் மிகுந்த சிரமமும் காலதாமதமும் ஏற்படுவதாகவும் சட்ட மன்றத்தில் நடைபெற்ற உணவு மானிய கோரிக்கையின் போது வெளியிட்ட அறிவிப்பின்படி 2000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக்கடைகளை இரண்டாக பிரிக்க வேண்டியிருப்பதால் அப்பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 450 ச.அடி கட்டிடம் 138வது வட்டம் ஏரிக்கரை தெருவில் அமைந்துள்ள கட்டிடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது எனவும் இக்கட்டிடம் தற்போது சென்னை மாநகராட்சி மின் துறை கட்டுப்பாட்டில் பயனின்றி உள்ளதாகவும் தற்போது அமுதம் சில்லரை அங்காடிகள் இயங்கும் கடையின் அருகாமையில் உள்ள இக்கடையை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்தால் இரண்டாக பிரிக்க உத்தேசித்துள்ள மற்றொரு கடையினை மேற்படி கட்டிடத்தில் நடத்த ஏதுவாக இருக்கும் என தெரிவித்து கடையினை ஒதுக்கீடு செய்யுமாறு 09.07.2009 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

9வது வார்டுகுழு தீர்மான எண்.463, நாள்.17.02.2010ல், கோட்டம்–138ல் ஏரிக்கரை தெருவில் அமைந்துள்ள அமுதம் அங்காடிக்கு கூடுதலாக சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 450 சதுர அடி கட்டிடத்தை ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட கட்டிடத்தை ஒதுக்கி

1. சதுர அடிக்கு ரூ.15/– என்று மாத வாடகை நிர்ணயம் செய்வதற்கும், 12 மாத வாடகை முன்பணம் பெறுவதற்கும்,
2. ஒதுக்கப்படவுள்ள மேற்படி கட்டிடத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதாக இருப்பின் சென்னை மாநகராட்சி அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பதற்கும்,
3. வாடகை தொடர்பாக திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிமிடெட் நிறுவனத்தின் இசைவினை பெற்று பின்னர் ஒதுக்கீடு செய்வதற்கும்

நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.76/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/5513/2009**
**ஆணையர் அவர்களின் 29.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :184/2010 பொருள் எண்.54

**டி.யூ.சி.எஸ்.க்கு இட ஒதுக்கீடு**

11.12.2009 நாளிட்ட கடிதத்தில் ஜாபர்கான் பேட்டை மற்றும் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் இயங்கிவரும் நியாய விலைக்கடைகள் செயல்பட 131 வது வட்ட அலுவலக வளாகத்திலும், அன்னை சத்யா நகர் பகுதியிலுள்ள சென்னை மாநகராட்சியின் இடத்தினையும் ஒதுக்கீடு செய்யுமாறு டி.யூ.சி.எஸ்.நிறுவனத்தால் கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

9வது வார்டுகுழு தீர்மான எண்.451, நாள்.17.02.2010ல் வார்டு–131 அலுவலக வளாகத்தின் பின்புறத்தில் உள்ள காலியிடத்தில் நியாய விலைக்கடை அமைப்பதற்கு தேவையான காலியிடம் சுமார் (20''x 20'') 400 சதுர அடி நிலப்பரப்பு காலியிடமாக உள்ளது. மேலும், அன்னை சத்யா நகர் பகுதி–II, அண்ணா பிரதான சாலை மற்றும் அன்னை சத்யா நகர் 3வது தெரு சந்திப்பில் உள்ள மாநகராட்சி பொதுக்கழிப்பிடம் பின்புறம் சுமார் 1088 சதுர அடி (68"x16) பரப்பளவு காலியிடமாக உள்ளது. என்றும் மேற்குறிப்பிட்ட இவ்விரண்டு இடங்களும் நியாய விலைக்கடைகள் அமைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் மேற்கண்ட இரண்டு இடங்களை நியாயவிலைக்கடைகளுக்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்துள்ளது.

தற்போது டி.யூ.சி.எஸ். தனி அலுவலரின் 22.02.2010 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட இடங்களில் நியாயவிலைக்கடைகள் நடத்த 500 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடங்கள் கட்டித்தருமாறு கோரியுள்ளார்கள்.

எனவே மேற்கண்ட காலி இடங்களில் டி.யூ.சி.எஸ்.நிறுவனத்தின் நியாய விலைக்கடைகளுக்காக கட்டிடம் கட்டி பின்னர் மன்றத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகையினை வசூலிப்பதற்கு உட்பட்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்73/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/ 5383 /2009**
**ஆணையர் அவர்களின் 19.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :185/2010 பொருள் எண்.55

**கடைகள் ஏலம் மூலம் ஒதுக்கீடு**

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகள் 3 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு வழங்கிட ஒப்பந்தம் / ஏலம் முறையில் ஒப்பந்த புள்ளிகள் வரவேற்கப்பட்டு வருகிறது.

அதன்படி 14.12.2009 அன்று நடைபெற்ற ஒப்பந்தம் / ஏலத்தில் கலந்து கொண்டு ஒதுக்கீடு பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு.

இனம்–1

| வ. எண் | மண்டலம் (ம) வார்டு | வணிக வளாகத்தின் பெயர் | கடை எண். தளம் ச.அடி | ஒதுக்கீடு தாரரின் பெயர் | பிணைவைப்பு தொகை (ம) 25% K.gz« | மீதி 75% K‹ gz« | 12 மாத மு.பணம் | ஒதுக்கீடு ஆணை வழங்கியது |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5/ 68 | புல்லா அவென்யூ | 23 / த.த 147 ச.அடி | திரு.ஜெ.முகமது இத்திரிஸ். | 18,671 | 36,013 | 54684 | 18.03. 2010 |
| 02. | 5 / 67 | பிரிவரி சாலை திட்டம்–1 | 23 / த.த 237 ச.அடி | திரு.எஸ்.ராம் குமார் | 41,972 | 1,05,916 | 1,47,888 | 12/03/ 2010 |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியலில் வரிசை எண்.01 மற்றும் 02 வரையில் உள்ள நபர்களுக்கு உரிய ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டது.

இனம்–2

| வ. எண் | மண்டலம் (ம) வார்டு | வணிக வளாகத்தின் பெயர் | கடை எண். தளம் ச.அடி | ஒதுக்கீடு பெயர் | பிணைவைப்பு தொகை | மீதி 75% K‹ gz« | 12 மாத மு.பணம் | ஒதுக்கீடு ஆணை வழங்கியது |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 / 47 | ரிப்பன் கட்டிடம் ஒட்டிய வணிக வளாகம் | 04 / த.த | திரு. பீர்ஒளி | 5000 | – | – | – |

இனம்–2ல் குறிப்பிட்டுள்ள திரு. பீர்ஒளி என்பவர் சென்னை மாநகராட்சி நிர்ணயித்த சதுர அடி ஒன்றுக்கு ரூ.30/– என்பதைக்காட்டிலும் அதிக விலைப்புள்ளியாக சதுர அடி ஒன்றுக்கு ரூ.47/– என்று ஏலம் கோரிவிட்டு 12 மாத வாடகை முன்பணத்தில் 25 விழுக்காடு முன்பணம் செலுத்தாமல் சென்று விட்டார். எனவே இவர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.5000/– னை ஒப்பந்த விதிமுறை வரிசை எண்.20ல் குறிப்பிட்டுள்ளவாறு சென்னை மாநகராட்சி கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு கருவூலத்தில் செலுத்தப்பட்டு (செலுத்து சீட்டு எண்.23070, நாள்.16.12.2009) இக்கடை மறு ஏலத்தில் கொண்டு வரப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இனம்–1ல் கண்டுள்ள 2 கடைகள் தவிர 14.12.2009 அன்று ஏலத்தில் கொண்டு வரப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது ஏலம் போகாத இதர அனைத்து கடைகளும் மறு ஏலத்தில் கொண்டு வரப்பட்டது.

மேற்படி விவரங்கள் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் தகவலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.77/2010, நாள் 23.04.2010–ன்படி, இதனை நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/ 480 /2010</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :186/2010 பொருள் எண்.56

**<u>வாடகை நிர்ணயம்</u>**

மண்டலம்–5, வார்டு எண்.71, 116. ஈ.வெ.ரா.பெரியார் சாலை வணிக வளாகத்தில் இரண்டாம் தளத்தில் 2403 சதுர அடிகள் கொண்ட இடத்தை உணவு பொருள் வழங்கல் துறையின் ஆணையர் அவர்கள் அண்ணாநகர், மண்டல உதவி ஆணையர் அலுவலகம் அமைக்க 13.01.2009 நாளிட்ட நேர்முக கடிதத்தில் கோரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையானது பொது மக்கள் நலன் கருதி செயல்படும் அலுவலகம் என்பதால் மேற்கண்ட இடத்தில் முன்நுழைவு அளிக்கப்பட்டு 01.11.2009 முதல் இவ்வலுவலகம் இயங்கி வருகிறது.

மேலும் 21.12.2009 நாளிட்ட மேற்கண்ட துறையின் உதவி ஆணையர் அவர்களின் கடிதத்தில் பிரதிமாதம் வாடகை செலுத்த ஏதுவாக வாடகை தொகையினை நிர்ணயம் செய்து தரும்படி கோரப்பட்டுள்ளது.

இது குறித்து தெரிவிப்பது, மேற்கண்ட வணிக வளாகம் ஒரு சதுர அடி ரூ.35/– என புதிய சந்தை விலை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. (மன்றத் தீர்மான எண்.413/09, நாள்.19.10.2009) என்பதால் 2403 ச.அடி பரப்பளவு கொண்ட இக்கடைக்கு சதுர அடி ஒன்றுக்கு ரூ.35/– வீதம் (2403 x 35 = 84,105) ரூ.84,105/– மாத வாடகையினை 01.11.2009 முதல் மேற்கண்ட நிறுவனத்திற்கு நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.78/2010, நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பா.து.ந.க.எண்.பி3/ 1508 /2001**
**ஆணையர் அவர்களின் 13.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :187/2010 பொருள் எண்.57

**கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப்பாதை அமைக்க கண்ணன் தெருவில் தண்டையார்பேட்டை கிராமம் பிளாக் எண்.33, புல எண்.1864/16, முதலியனவற்றில் 4 கிரவுண்டு 1310 ச.அடி. நிலங்களை நில எடுப்பு சட்டம் 1894 அவசர பிரிவின் கீழ் கையகப்படுத்த மன்றத்தின் நிர்வாக ஒப்புதல் கோருதல்**

கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப்பாதை அமைக்க தியாகப்பா தெருவில் 2 கிரவுண்டு 1187 ச.அடி. தனியார் நிலங்களை கையகப்படுத்தவும், இரயில்வே துறையின் ஒரு சிறிய பகுதியை நில மாற்றம் செய்யவும் சென்னை மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டது. தனியார் நிலங்கள் 19.05.2008 முதல் கையகப்படுத்தப்பட்டு வீடுகள் இடிக்கப்பட்டன. இரயில்வே துறையினர் இரயில்வே நிலத்தில் கூடுதல் தடங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் தங்கள் நிலத்தை தர இயலாது என்று கூறி சுரங்கப்பாதைக்கு திருத்திய வரைபடம் அளித்தனர். கலந்தறிதற்குரியவர் மூலம் திருத்திய வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு 15.09.2009 அன்று இரயில்வே துறையின் இசைவு பெறப்பட்டது.

இத்திருத்திய வடிவமைப்பின்படி கண்ணன் தெருவில் தனியார் நிலங்கள் கையகப்படுத்த வேண்டியிருந்தது. தண்டையார்பேட்டை கிராமம் பிளாக் எண்.33, புல எண்கள்.1864/16, முதலியனவற்றில் 4 கிரவுண்ட் 1310 ச.அடி. தனியார் நிலங்களை கையகப்படுத்த சென்னை மாவட்ட ஆட்சியருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டன. மாவட்ட ஆட்சியரிடமிருந்து 22.10.2009 அன்று நிர்வாக ஒப்புதலுக்காக நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டது. அரசின் நிர்வாக ஒப்புதல் வேண்டி நில நிர்வாக ஆணையரிடமிருந்து அரசுக்கு 7.12.2009 அன்று அனுப்பப்பட்டது. 07.12.2009 நாளிட்ட கடிதத்தில் அரசு மேலும் சில விவரங்களைக் கேட்டு நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பியுள்ளது. அதில், நிலங்கள் கையகப்படுத்துவதற்கு சென்னை மாநகராட்சியின் மன்றத் தீர்மானமும் கோரப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டம் நீண்டநாட்களாக நிலுவையில் உள்ளது. ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு (JNNURM) திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு அனுமதியும் அதற்கு நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தினை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய அவசியம் உள்ளது. இரயில்வே துறை திட்ட வரைபடத்தை மாற்றியமைத்ததால் கால தாமதம் ஏற்பட்டு தற்போது அவர்களின் இசைவு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஏற்கனவே சுரங்கப்பாதையின் ஒரு பக்க அணுகு சாலையான தியாகப்ப தெருவில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு விட்டன. மறு பக்க அணுகு சாலையான கண்ணன் தெருவில் உடனடியாக நிலங்கள் கையகப்படுத்த வேண்டியுள்ளது.

எனவே, மேற்கூறப்பட்ட காரணங்களை கருத்தில் கொண்டு இப்பணியின் அவசியம் மற்றும் அவசரம் காரணமாக கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப்பாதை அமைக்க கண்ணன் தெருவில் தண்டையார்பேட்டை கிராமம் பிளாக் எண்.33, புல எண்கள் 1864/16 முதலியனவற்றில் 4 கிரவுண்டு 1310 ச. அடி தனியார் நிலங்களை நில எடுப்பு சட்டம் 1894 அவசர பிரிவின் கீழ் கையகப்படுத்த வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.55/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி )-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.94/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பா.து.ந.க.எண்.பி3/370/2008**

**ஆணையர் அவர்களின் 19.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :188/2010 பொருள் எண்: 58

**தங்கசாலை சந்திப்பில் மேம்பாலப்பணி – திருத்திய வடிவமைப்பின்படி நிலமாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரல்**

தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்க அரசாணை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து பாலம் அணுகு சாலைக்கு தேவைப்படும் பொதுப்பணித்துறை, மாநகர போக்குவரத்து கழகம், இராணுவத்துறை நிலங்களை நில மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டன.

இராணுவத்துறை மேற்கண்ட நிலத்தினை தங்கள் திட்டத்திற்கு தேவை என தெரிவித்து, இந்நிலங்களை பாலம் அமைக்கும் பணியில் அணுகு சாலை பணிக்கு தர இயலாது என தெரிவித்தனர்.

மேற்குறிப்பிட்ட காரணத்தினால் பால வடிவமைப்பினை சற்றே வடக்காக மாற்றப்பட்டு திருத்திய வடிவமைப்பின் சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

திருத்திய பால வடிவமைப்பின்படி அரசு நிறுவனங்களான பொதுப்பணித்துறை மாநகர போக்குவரத்துக்கழகம், மருத்துவத்துறை மற்றும் காவல்துறை வீட்டுவசதி கழகம் ஆகிய அரசு நிலங்கள் பால அணுகுசாலைக்கு தேவைப்படும் என கருதி நிலமாற்றத்திற்கான முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், இப்பாலப்பணி விரைவில் தொடங்க உள்ளதால் பால பக்கசாலைகளில் குடிநீர் மற்றும் கழிவு நீர் குழாய்கள் மாற்றி அமைக்க வேண்டியுள்ளதாலும் இந்நிலமாற்றத்தினை விரைவில் சென்னை மாநகராட்சிக்கு மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர், சென்னை அவர்களை கேட்டுக்கொள்ள நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.57/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி )–வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

> ''**23.04.2010** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**95/2010** நாள் **23.04.2010**–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

<u>**நிமஉது நக எண்.எல்இ1 /12138/76**</u>

<u>**ஆணையர் அவர்களின் 05.04.2010 நாளிட்ட குறிப்பு**</u>

தீர்மான எண் :189/2010 பொருள் எண்.59

<u>**நிலம் கையகப்படுத்துதல் – நிதி ஒதுக்கீடு**</u>

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9 வார்டு எண்.134, சைதாப்பேட்டை ஜோன்ஸ் ரோடு, சென்னை மாநகராட்சியின் பள்ளி விரிவாக்க வசதிக்காகவும், விளையாட்டுத் திடல் வசதிக்காகவும், தேவைப்படும் தனியார் நிலங்களை கோடம்பாக்கம் கிராமம், நகர நில அளவை எண்.62/8, பிளாக்–93 ல் 32 மனை தனியார் நிலங்களை கையகப்படுத்த சென்னை மாவட்ட ஆட்சியரைக் கோரிட சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.1424/75 நாள்.29.12.1975–ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி, சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானத்தைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சி பள்ளியின் விரிவாக்க வசதிக்காகவும், விளையாட்டுத் திடல் வசதிக்காகவும் தேவைப்படும் 32 மனை பரப்பளவு கொண்ட தனியாருக்கு சொந்தமான நிலங்களை கோடம்பாக்கம் கிராமம், நகர நில அளவை எண்.62/8 பிளாக் 93, தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1894–ன் கீழ் கையகப்படுத்திதர சென்னை மாவட்ட ஆட்சியரைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின் கோரிக்கையின் மீது உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு சென்னை மாவட்ட ஆட்சியரால் தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1894–ன் கீழ் 4(1)ன்படி மேற்படி 32 மனை பரப்பளவு கொண்ட தனியார் நிலத்தினை கையகப்படுத்தப்படவுள்ள அறிவிப்பு, அரசாணை எண்.809, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்துறை நாள்.17.05.1979–ன்படி வெளியிடப்பட்டது. பிறகு கையகப்படுத்த வேண்டிய மொத்த நிலமான 32 மனை பரப்பளவு நிலத்தில் 16 மனை 1555 ச.அடி பரப்பளவு நிலத்தினை தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம் என அரசால் முடிவெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் 16 மனை 1555 ச.அடி பரப்பளவு நிலத்தினை கையகப்படுத்த சென்னை மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மீதமுள்ள 15 மனை 1674 ச.அடி பரப்பளவு நிலத்தினை தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்திட நில ஈட்டுத்தொகையாக மனை ஒன்றுக்கு ரூ.5000/– வீதம் செலுத்திட சென்னை மாவட்ட ஆட்சியரால் கோரப்பட்டதைத் தொடர்ந்து கீழ்க்கண்டவாறு நில ஈட்டுத்தொகை நில எடுப்பு அலுவலருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண். | நாள். | தொகை |
|---|---|---|
| 1 | 3.11.1982 | ரூ.75,000.00 |
| 2 | 22.4.1983 | ரூ.15,260.65 |
| 3. | 18.5.1981 | ரூ.40,028.60 |

மொத்தம் .. ரூ.1,30,289.25 பை

நில எடுப்பிற்கு எதிராக நில உரிமையாளர்களால் தொடரப்பட்ட வழக்கினை எதிர்கொண்டுவரும் நிலையில் தமிழ்நாடு நில உச்சவரம்பு சட்டம் அரசால் திரும்பப் பெறப்பட்டுக் கொண்டுவிட்டதால், இச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த 16 மனை மற்றும் 1555 ச.மீ பரப்பளவு கொண்ட நிலம் கையகப்படுத்தப்படவில்லை.

இந்நில எடுப்பிற்கு எதிராக நில உரிமையாளர்களால் பல்வேறு நீதிமன்றங்களில் பல்வேறு நிலைகளில் வழக்கு தொடரப்பட்டிருந்த காரணத்தினால் தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த 15 மனை 1674 ச.அடி பரப்பளவு கொண்ட நிலமும் இதுகாறும் கையகப்படுத்தப்படவில்லை. இந்நிகழ்வில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினை மறு ஆய்வு செய்யக்கோரி மாவட்ட ஆட்சியரால் தொடரப்பட்ட மறு ஆய்வு மனு உச்ச நீதிமன்றத்தால் 3.10.07 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது புதிதாக நில ஆர்ஜிதம்
செய்ய நடவடிக்கை எடுக்க மாமன்றத்தின் அனுமதி பெற 9–ம் மண்டல வார்டு குழுவினர் பரிந்துரை தீர்மான எண்.216, நாள்.11.4.2007 மூலம் பெறப்பட்டது. இதன் அடிப்படையில் மாமன்றம் தீர்மானம் எண்.665–ல் இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது. எனவே, மீண்டும் சைதாப்பேட்டை சென்னை மாநகராட்சி பள்ளி விளையாட்டு திடல் மற்றும் பள்ளி விரிவாக்கப்பணிக்காக 31 மனைகள் மற்றும் 2005 சதுர அடி நிலத்தை சுமார் ரூ.11.50 கோடி செலவில் நில எடுப்புச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்த அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்குவதற்கும் பிரிவு 4(1) ன் கீழ் அறிவிக்கை வெளியிடவும், அரசின் ஆணை வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டது.

மேற்படி நில எடுப்பு சட்டத்தின் கீழ் நிலத்தினை கையகப்படுத்த சென்னை மாவட்ட வருவாய் அலுவலரால் புலத்தணிக்கை செய்யப்பட்டதில் இந்நிலம் ரயத்துவாரி நிலம் என்றும், இதில் மரங்கள், கட்டிடங்கள், வழிபாட்டுத்தலங்கள் ஏதும் இல்லை என்றும் மேற்பகுதியில் ஒரே ஒரு சிதிலடைந்த சுற்றுச்சுவர் மட்டும் உள்ளது, எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலம் நகர்புற நில உச்சவரம்புச்சட்டத்தினால் கவரப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி நிலத்தின் மதிப்பானது கோடம்பாக்கம் சாலையின் வழிகாட்டி மதிப்பின்படி சதுர அடி ரூ.1500/– என மதிப்பிடப்பட்டுள்ளதாக சென்னை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். 31 மனைகள் 2005 ச.அடி தோராயமாக ரூ.11,46,07,500/– என்றும் 30% ஆறுதல் தொகை மற்றும் 12% கூடுதல் சந்தை மதிப்பு தோராயமானது என்றும் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய தோராய மதிப்பு என்றும் மேற்படி நிலத்தினை முன்நில மதிப்பீடு கருத்துரு ஆய்வு செய்யும் சமயத்தில் விரிவாக ஆராயப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி நிலத்தினை நில ஆர்ஜிதம் செய்வதற்கு சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.665/07 நாள்.29.12.2007–ல் ஒப்புதல் அளித்துள்ளது.

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சைதாப்பேட்டை சென்னை மாநகராட்சி பள்ளி விளையாட்டுத்திடல் மற்றும் பள்ளி விரிவாக்கப்பணிக்காக சென்னை மாவட்டம் கிண்டி–மாம்பலம் வட்டம், கோடம்பாக்கம் கிராமம், புல எண்.62/8 ல் 31 மனைகள் மற்றும் 2005 சதுர அடி தனியார் நிலங்களை தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம்,1894–ன் கீழ் நிலமெடுப்புக்காக ஆகும் சுமார் 11.50 கோடி செலவை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் நில எடுப்பு செய்ய நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண்.17, ந.நி.ம.கு.வ.(மாந1) துறை, நாள்.25.1.2010.)

இது தொடர்பாக தனியார் நிலத்தின் புல எண்கள், வகைப்பாடு, விஸ்தீரணம், நிலத்தின் 2009–ம் ஆண்டின் வழிகாட்டி மதிப்பு மற்றும் தனியாருக்கு நிலத்திற்காக தரப்படும் இழப்பீட்டுத்தொகை மாநகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்தல் முதலியவற்றை அடங்கிய தீர்மானம் பெற்று அனுப்புமாறு வட்டாட்சியர், மாம்பலம்–கிண்டி வட்டம்,சென்னை–78 அவர்கள் கோரியுள்ளார்.

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, வார்டு எண்.134, சைதாப்பேட்டை, ஜோன்ஸ் ரோடு, சென்னை மாநகராட்சி பள்ளியின் விரிவாக்க வசதிக்காகவும், விளையாட்டுத் திடல் வசதிக்காகவும், மேற்குறிப்பிட்ட 31 மனைகள் 2005 சதுர அடி பரப்பளவு கொண்ட தனியார் நிலங்கள் கோடம்பாக்கம், கிராமம், நகர நில அளவை எண்.62/8, பிளாக் 93 அவசியம் தேவைப்படுவதால் மேற்படி திட்டத்திற்கு தேவைப்படும் தனியார் நிலங்களை தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் 1894–ன் கீழ் புதியதாக நடவடிக்கை எடுத்து விரைவில் கையகப்படுத்தித்தர சென்னை மாவட்ட ஆட்சியரைக் கோரிடவும், 2009–10ன் வழிகாட்டு மதிப்பின்படி சதுர அடிக்கு ரூ.1500/– வீதம் இதற்கான இழப்பீட்டுத் தொகை சுமார் ரூ.11.50 கோடி செலவினை சென்னை மாநகராட்சி கல்வித்துறை நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“9.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.14/2010 நாள்.09.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”.

“23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.69/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/7542/2008**
**ஆணையர் அவர்களின் 11.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :190/2010 பொருள் எண். 60

**நிலம் கையகப்படுத்துதல்**

சென்னை மாவட்டம், எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், மண்டலம்–5, வார்டு–72ல், ஆரிங்டன் சாலையும், வெங்கடாசலப்பதி தெருவினையும் இணைத்து பாதையை அகலப்படுத்தும் பணிக்காக பிளாக் எண்.17, புல எண்.279/2, 1279 சதுர அடி பரப்பளவு கொண்ட தனியார் நிலத்தை கையகப்படுத்த வேண்டி 29.10.2008 நாளிட்ட மன்ற தீர்மானம் பெற்று கேட்பு மனு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 11.8.2009ல் அனுப்பப்பட்டது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில் மேற்படி சாலையை விரிவுப்படுத்தும் நிலத்தை வட்டாட்சியரும் சென்னை மாநகராட்சி சார்ந்த அலுவலர்களும் 20.8.2009ல் கூட்டாக செய்த புலத்தணிக்கையின் மேற்படி புலத்திற்கு 1436 சதுர அடி பரப்பளவு நிலம் தேவைப்படுகிறது என்று பரிந்துரை செய்து அறிக்கை நில நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்விற்கு 1436 சதுர அடி பரப்பளவுக்கு மன்றத் தீர்மானம் 5வது வார்டுகுழு தனது தீர்மான எண்.3, நாள்:08.12.2009ல் திருத்திய தீர்மானம் இயற்றியுள்ளது.

எனவே, சென்னை மாவட்டம், எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், மண்டலம்–5, வார்டு–72ல், ஆரிங்டன் சாலையும், வெங்கடாசலப்பதி தெருவினையும் இணைத்து பாதையை அகலப்படுத்தும் பணிக்காக பிளாக் எண்.17, புல எண்.279/2, ல் 1436 சதுர அடி பரப்பளவு கொண்ட தனியார் நிலத்தை கையகப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கேட்பு மனு அனுப்ப மன்றத்தின் திருத்திய தீர்மானம் வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.43/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி )–வின் மூலமாக மன்றத்தின் திருத்திய தீர்மானம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.98/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் திருத்திய தீர்மானம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.10.ந.க.எண்.சி1/1993/2010**
**ஆணையர் அவர்களின் 08.4.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :191/2010 பொருள் எண்.61

**சாலை அகலப்படுத்த நிலம் கையகப்படுத்துதல்**

மண்டலம் 10, வார்டு–155, திருவான்மியூர் கிராமம் பகுதியில் திருவான்மியூர் குப்பம் பீச் சாலையின் தெற்குபுறம் குடியிருப்பு சாலையின் ஆக்கிரமிப்புகளை அகற்றி இச்சாலையை 40 அடி சாலையாக அகலப்படுத்த வேண்டி 1997ம் ஆண்டு முதல் அங்கு குடியிருக்கும் முக்கிய பிரமுகர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இதன் மீதான நடவடிக்கையாக இச்சாலையில் இருந்த ஆக்கிரமிப்புகளை கடந்த அக்டோபர் 2009 அன்று அகற்றப்பட்டது.

ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பின்பும், அச்சாலையில் பவானி மேடையில் இருந்து சி.ஜி.இ. காலனி வரையிலான சாலையின் அகலம் 26 அடி முதல் 35 அடி வரையிலேயே உள்ளது. ஆனால் அதே சாலையின் அகலம் சி.ஜி.இ. காலனி முதல் கடற்கரை சாலை வரை 40 அடி அகலத்திற்கு மேலாக உள்ளது.

இச்சாலையில் குறைந்தது 40 அடி சாலையாக பராமரிக்கவேண்டி பவானி மேடையில் 150 அடி நீளத்திற்கு உள்ள மருந்தீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான நிலத்தினை சென்னை மாநகராட்சி கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டி உள்ளது.

இதன்படி, கையகப்படுத்த வேண்டிய நிலம் திருவான்மியூர் கிராமம் பிளாக் எண் 60ல் நகர் புல எண்.3/1–ல், 1425 சதுர அடிக்கான நிலம் ஆகும், இந்நிலம் அருள்மிகு மருந்தீஸ்வரர் தேவஸ்தானத்தை சார்ந்தது ஆகும்.

இந்நிலத்தின் தற்போதைய வழிகாட்டி மதிப்பீட்டு விலைப்படி சதுர அடி ரூ.2,809/– வீதம் மொத்த தொகை 1425 X 2809 = ரூ.40,02,825/– ஆகும்.

இச்சாலையின் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கென இதை அகலப்படுத்தி கொடுக்குமாறு இப்பகுதி வாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்ற ஏதுவாக, மேற்குறிப்பிட்ட சதுரஅடி நிலத்தினை ரூ.40,02,825/–யை செலுத்தி சென்னை மாநகராட்சி கையகப்படுத்தி திருவான்மியூர் குப்பம் பீச் சாலையை அகலப்படுத்த 10வது வார்டு குழு தீர்மான எண்–46, தேதி–22.02.2010ல் பரிந்துரை செய்துள்ளது.

வார்டு குழுவின் பரிந்துரைபடி சாலையை அகலப்படுத்த மருந்தீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான 1425 சதுர அடி நிலத்தினை ரூ.40,02,825/– செலுத்தி சென்னை மாநகராட்சி கையகப்படுத்த நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.42/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி )–வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.99/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ‘’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1 /3940 /2008</u>**
**<u>ஆணையர் அவர்களின் 11.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :192/2010 பொருள் எண். 62

**<u>நிலம் கையகப்படுத்துதல்</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–10, வார்டு–154 ல் கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை ஒரே சீரான அளவில் இல்லாமல் உள்ளதால் இச்சாலையினை அகலப்படுத்தும் பொழுது சாலையினை ஒரே சீராக அமைக்க இச்சாலையின் ஒருபக்கத்தில் அப்பாசாமி ரியல் எஸ்டேட்க்கு அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான சுமார் 406.94 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் தேவைப்படுகிறது. இணை ஆணையர் (பணிகள்) அவர்களால் இப்பகுதியில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது, இச்சாலையில் போக்குவரத்து இடையூறின்றி செல்ல சாலையை அகலப்படுத்த தேவைப்படும் தனியார் நிலத்தை கையகப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மன்றத் தீர்மானம் எண்.557/08, நாள்.29.10.08–ன்படி கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலையை விரிவுப்படுத்த பிளாக் எண்.20, புல எண்.44 முதல் 48 வரையிலான மொத்தம் பரப்பளவு 1356 ச.அடி நிலத்தை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத்தொகை செலுத்தி தனியாரிடமிருந்து நிலம் எடுப்பு செய்வதற்கு கேட்பு மனு அனுப்பப்பட்டது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி, நிலம் மற்றும் உடைமைத்துறை சார்–ஆய்வாளர் புலத்தணிக்கை செய்து மேற்படி சாலை விரிவாக்கத்திற்கு சென்னை மாவட்ட ஆட்சியரின் 26.09.2009 நாளிட்ட பரிந்துரை கடிதத்தில் பரப்பளவு தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், திருத்தம் தேவை என்றும் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் சென்னை மாவட்டம், மண்டலம்–10, வார்டு–154–ல் மயிலை–திருவல்லிக்கேணி வட்டம், திருவான்மியூர் கிராமம், கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலையை விரிவுபடுத்துவதற்கு, நிலம் கையகப்படுத்த வேண்டி, பிளாக் எண்.20, புல எண்.44(பாகம்) முதல் 47 பாகம் வரையில் உள்ள நிலத்தை வட்டாட்சியரும், சென்னை மாநகராட்சி சார்ந்த சார் ஆய்வாளரும் இணைந்து கூட்டுப்புலத் தணிக்கை ஆய்வு மேற்கொண்டதில், நிலத்தின் பரப்பு 1432 சதுர அடி என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. என்றும், ஆகவே பரிந்துரை செய்யப்பட்டுள்ள புலங்களின் பரப்புக்கு (1432 சதுர அடி) மன்றத்தின் தீர்மானம் பெற்று உரிய நடவடிக்கை நிலம் மற்றும் உடமைத்துறை மூலம் மேற்கொள்ள 10வது வார்டு குழு தீர்மான எண்.15, நாள்.13.01.2010ல் பரிந்துரைத்துள்ளது.

எனவே மண்டலம்–10, வார்டு–154–ல் மயிலை–திருவல்லிக்கேணி வட்டம், திருவான்மியூர் கிராமம், கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலையை விரிவுபடுத்துவதற்கு பிளாக் எண்.20, புல எண்.44 (பாகம்) முதல் 47 பாகம் வரையில் திருத்தப்பட்ட பரப்பளவான 1432 சதுர அடி நிலத்தை கையகப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.44/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி )-வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.97/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.5.ந.க.எண்.பி1/2503/2010**
**ஆணையர் அவர்களின் 08.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :193/2010 பொருள் எண். 63

**டாக்டர்.விஸ்வேஷ்வரய்யா கோபுர பூங்காவில் மேம்பாட்டு பணி**

மண்டலம்–5, வார்டு–66ல் அமைந்துள்ள டாக்டர்.விஸ்வேஷ்வரய்யா கோபுர பூங்கா சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் உலக வர்த்தக பொருட்காட்சியினை முன்னிட்டு உருவாக்கப்பட்டதாகும். இப்பூங்கா சுமார் 15.5 ஏக்கர் பரப்பளவிலும், 138 அடி உயர கோபுரமும் மற்றும் அதனைச் சுற்றி நீர் தொட்டிகள், நடைபாதைகள், சிறுவர் விளையாட்டு பகுதி, 80 கிரவுண்ட் பரப்பளவில் குளம் ஆகியவற்றை கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

இப்பூங்கா, சென்னை மாநகரின் மிக முக்கிய சுற்றுலாத்தலமாகவும், அண்ணா நகர் மற்றும் அதனைச் சுற்றி உள்ள பகுதி மக்களின் பொழுதுபோக்கு இடமாகவும், சுமார் 1000 பேர்களின் நடைபயிற்சி இடமாகவும் திகழ்கின்றது.

இப்பூங்காவின் பல பகுதிகளில் நடைபாதைகள், சாலைகள், நீர் வசதி குழாய்கள், நீரூற்றுகள், கோபுரம், மழைநீா வடிகால் குழாய்கள், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் போன்றவை மிகவும் சிதலமடைந்து இருந்தமையால் இப்பூங்காவை முழுவதுமாக சீரமைத்து மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனவே, இப்பூங்காவை உலகத் தரத்திற்கு உயர்த்த, பூங்கா மற்றும் கட்டிட கலை வல்லுநர்களிடம் இருந்து பூங்கா வடிவமைப்பு அறிவுரை (Consultation) வழங்குவதற்காக ஒப்பம் கோரப்பட்டு திருவாளர். சேரலாதன் அசோசியேட்ஸ் நிறுவனம் அவர்களுக்கு பூங்கா வடிவமைப்பு வல்லுநராக பணி நியமனம் செய்யப்பபட்டது.

திருவாளர். சேரலாதன் அசோசியேட்ஸ் நிறுவனம் அவர்கள் சேதமடைந்துள்ள பகுதிகளைப் புதுப்பிக்கவும், புதிய குளக்கரை வளாகம், திறந்த வெளி கலை அரங்கம், சருக்கு விளையாட்டு அரங்கம், கோபுர வளாகம், நீரூற்றுகள், நடைபாதைகள், அதிநவீன ஒப்பனை வளாகம் ஆகியவைகளை உருவாக்குவதற்கான வடிவமைப்புகளை வழங்கினார்கள்.

கோபுர பூங்கா, நாளொன்றுக்கு சுமார் 1000 நடை பயில்பவர்களும், சுமார் 2000 முதல் 3000 பொதுமக்கள் உபயோகிப்பதாலும் இவர்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் பூங்காவை உருவாக்கவும் மேலும் துரிதமாகவும் பணியினை செய்து முடிக்க முடிவெடுக்கப்பட்டது.

எனவே, அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு ஒவ்வொரு பகுதியையும் உருவாக்குவதற்கு கீழ்கண்டவாறு தனித்தனியே மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வார்டுகுழு ஒப்புதல் பெறப்பட்டு அதன் மதிப்பிற்கேற்ப ஆணையர் அல்லது மன்றத்திடம் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பங்கள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திறந்த வெளி கலையரங்கம் கட்டும் பணி | 29.00 |
| 2 | சறுக்கு விளையாடுமிடம் கட்டும் பணி | 38.20 |
| 3 | ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடம் கட்டும் பணி | 34.40 |
| 4 | சிறுவர்கள் விளையாடுமிடம்–1 கட்டும் பணி | 9.45 |
| 5 | சிறுவர்கள் விளையாடுமிடம்–2 கட்டும் பணி | 9.95 |
| 6 | தியானக்கூடம், நடைபாதை இருக்கை மற்றும் சிற்பக்கலை கூடம் கட்டும் பணி | 22.80 |
| 7 | கிரிக்கெட் ஆடுகளம் கட்டும் பணி | 18.88 |

| | | |
|---|---|---|
| 8 | டாட்லாட்–1 கட்டும் பணி | |
| 10 | ஏரி வளாகம் மற்றும் தீவு அமைக்கும் பணி | 54.50 |
| 11 | டாட்லாட்–2 கட்டும் பணி | 4.37 |
| 12 | டவர் பிளாசா கட்டும் பணி (ஏற்கனவே மன்ற தீர்மான எண்.22, நாள் 27–1–2009ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது) | 131.00 |
| 13 | நுழைவாயில் பிளாசா கட்டும் பணி | 18.60 |
| 14 | நடைபாதை அமைக்கும் பணி | 37.78 |
| 15 | சுற்றுச்சுவர் கட்டும் பணி | 7.62 |
| 16 | செடி மற்றும் புல்தரை அமைக்கும் பணி | 16.87 |
| 17 | கோபுர பூங்காவில் வர்ணம் பூசும் பணி | 10.43 |
| 18 | திறந்த வெளி நிலத்தில் கூடுதலாக மேம்பாட்டு பணி | 5.65 |
| 19 | லேக் பிளாசாவில் கூடுதலாக மேம்பாட்டு பணி | 10.2 |
| 20 | சிறுவர்கள் விளையாடுமிடம், தியானக்கூடம், கோபுரம் மற்றும் நீரூற்று பகுதிகளை சுற்றியுள்ள நடைபாதையை மேம்படுத்தும் பணி | 10.3 |
| 21 | சிறுவர்கள் விளையாட்டு உபகரணம் மற்றும் அமரும் இருக்கை பொருத்தும் பணி | 15.22 |
| | **மொத்தம்** | **485.22** |

எனவே, நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வ.(ம)நி.) மூலம் மேற்கண்ட நிகழ்வுகளை, மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

“21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.**58/2010** நாள்: 21.04.2010-ன்படி இதனை நிலைக்குழு (பணிகள்) பதிவு செய்து நிலைக்குழு (வ வி ம நி )-é‹ மூலமாக மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘**23.04.2010** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**87/2010** நாள் **23.04.2010**–ன்படி, இதனை நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது ‘’.

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/ 785 /2010</u>**
**<u>ஆணையர் அவர்களின் 09.03.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :194/2010 பொருள் எண்.64

**<u>திறந்தவெளி நிலம் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளுதல்</u>**

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டிட வரைபட அனுமதி வழங்கும்போது திறந்தவெளி நிலமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட வி.எம்.பாலகிருஷ்ணன் தெரு, கோடம்பாக்கம் கிராமம், T.S.எண்.2 – பிளாக் எண்.127ல் (பழைய புல எண்.359/1A, 359/1B மற்றும் 360/1 பாகம்) உள்ள 708.82 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை கட்டிட உரிமையாளரிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தானமாக எடுத்துக் கொண்டுள்ளது. விதிமுறைகளின்படி இந்த இடம் உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவேண்டும்.

மேற்கண்ட திறந்தவெளி நிலத்தினை சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்வதற்கு 9வது மண்டல வார்டு குழு தனது தீர்மான எண்.464, நாள்.17.02.2010ல் பரிந்துரை செய்துள்ளது.

எனவே மேற்கண்ட திறந்த வெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.80/2010, நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/ 1037 /2010**
**ஆணையர் அவர்களின் 06.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :195/2010 பொருள் எண்.65

**சாலை பெயர் மாற்றம்**

மண்டலம்–9, வார்டு–138, கோட்டூரில் பிறந்தவர் திரு.ஆர்.எஸ்.ஸ்ரீதர் அவர்கள், முன்னாள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், சென்னை மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினர் மற்றும் வருவாய் (ம) நிதித் துறையின் தலைவராகவும், பணியாற்றி இயற்கை எய்தியவர் அவர் பிறந்த கோட்டூரில் உள்ள பாண்டிச்சேரி சாலை என தற்போது அழைக்கப்படும் சாலையினை அவரின் நினைவாக ஆர்.எஸ்.ஸ்ரீதர் சாலை என பெயர் மாற்றம் செய்திட வேண்டுமாய் தற்போதைய வார்டு–138ன் மாமன்ற உறுப்பினர் தனது 23.09.2009 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட சாலையின் பெயரை ஆர்.எஸ்.ஸ்ரீதர் சாலை எனப்பெயர் மாற்றம் செய்திட மாமன்றத்தின் ஒப்புதல் பெறுவதற்கு 9வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண்.330, நாள்.24.09.2009ல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே மண்டலம்–9, வார்டு–138ல் உள்ள பாண்டிச்சேரி சாலையின் பெயரை ஆர்.எஸ்.ஸ்ரீதர் சாலை என பெயர் மாற்றம் செய்திட அரசின் உத்தரவினை கோர, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.79/2010, நாள் 23.04.2010–ன்படி, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் தலைவர் என்ற திருத்தத்துடன் இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/ 0284/ 2010**
**ஆணையர் அவர்களின் 29.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :196/2010 பொருள் எண்.66

**பெரம்பூர் மேம்பாலத்திற்கு பெயர் சூட்டுதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.3.2010 அன்று நடைபெற்ற பெரம்பூர் மேம்பால திறப்பு விழா நிகழ்ச்சியில் பேசும் போது பெரம்பூர் மேம்பாலத்திற்கு மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் திரு.முரசொலிமாறன் அவர்களின் பெயரை சூட்டுவதாக அறிவித்துள்ளார்.

மேற்படி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த சென்னை மாநகராட்சி மன்ற ஒப்புதலினை தீர்மானமாக பெற்று அரசுக்கு கருத்துரு அனுப்ப வேண்டியுள்ளது.

எனவே கோட்டம்–37 (ம) 38, மண்டலம்–3ல் உள்ள பெரம்பூர் மேம்பாலத்திற்கு மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் திரு.முரசொலிமாறன் அவர்களின் பெயரை சூட்டுவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்72/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/ 191 /2004**
**ஆணையர் அவர்களின் 25.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :197/2010 பொருள் எண். 67

**சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு சிலை நிறுவுதல்**

14.09.2009 நாளிட்ட இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவல;ா மற்றும் அரசு துணைச் செயலாளர் அவர்களின் கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்னை கலைவாணர் அரங்கத்தில் 01.07.2006 அன்று நடைப்பெற்ற சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய போது "தலைநகர் காத்த தமிழ்ச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு உருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளதாகவும், இதன் தொடர்பாக தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை முந்தைய இயக்குநர் / இணைச் செயலாளர் அவர்களால் 10.01.2008 அன்று வட சென்னை தண்டையார்பேட்டையிலுள்ள தொற்று நோய் மருத்துவமனை எதிரிலுள்ள சதுக்கம் சிலை அமைக்க தகுதியான இடமாக தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் இந்நிலையில் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைப்பது தொடர்பாக மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர், செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை மற்றும் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை ஆகியோர்களால் சென்னை திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி கோயில் தெற்கு தோரணவாயில் எதிரே, டாக்டர் பெசன்ட் தெரு, இருசப்பன் தெரு, கஜபதிலாலா தெரு சந்திப்பில் என்.கே.டி.பள்ளிச் சுற்றுச்சுவரை ஒட்டிய இடத்தை பார்வையிட்டு அங்கு அன்னாரது சிலையை அமைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி இடத்தில் புலத்தணிக்கை செய்யப்பட்டு 572 சதுர அடி நிலம் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது என கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு திருவுருச் சிலை மற்றும் பீடம் அமைப்பதற்கு மண்டலம்–6 வார்டுகுழு தீர்மானம் எண்.24/2010, நாள்.23.02.2010ல் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் திருவுருவச்சிலை மற்றும் பீடத்தினை அமைக்க சென்னை பார்த்தசாரதி கோயில் தெற்கு, கஜபதிலாலா தெரு சந்திப்பில் என்.கே.டி.பள்ளிச் சுற்றுச் சுவரை ஒட்டிய சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 572 சதுர அடி நிலத்தில் அமைக்க அரசின் அனுமதியும், நில உரிமை மாற்றம் செய்யவும், மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் பணிகள் மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.45/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி )-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.96/2010 நாள்: 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்3/519/2010**
**ஆணையாளர் அவர்களின் 09.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :198/2010 பொருள் எண்.68

**சர்.பிட்டி தியாகராயர் கலை அரங்கம் வாடகை மறுநிர்ணயம் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–8, வார்டு–126ல் சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கம் கட்டப்பட்டு கலை நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கென வசதியாக கலையரங்கம் புதுப்பிக்கப்பட்டு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 14.02.2010 அன்று திறக்கப்பட்டது. இக்கலையரங்கத்தை பராமரிக்கவும், வாடகை அடிப்படையில் மதிப்பீடு செய்யவும் தேவையான பணியாளர்கள் நியமனம் செய்யவும், மன்றத்தீர்மான எண்.335/2001, நாள்.28.06.2001ன்படி ஒப்புதல் பெறப்பட்டது.

தற்போது, இக்கலையரங்கம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு 14.02.2010 அன்று திறக்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கென வாடகை மற்றும் இதர இனங்களுக்காக வசூலிக்க வேண்டிய தொகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

ம.அ.8.ந.க.எண்.1580/2007, 27.03.2007 நாளிட்ட ஆணையர் அவர்களின் ஒப்புதலின்படி இது வரை வசூலிக்கப்பட்டு வந்த உபயோகிப்புக் கட்டணம் பின்வருமாறு:–

| வரிசை எண் | நேரம் | வாடகை நிர்ணயம் ரூ. |
|---|---|---|
| 01 | 24 மணி நேரம் –<br>மாலை 3.00 மணி முதல் மறுநாள் மாலை 3.00 மணி வரை | 18,000.00 |
| 02 | 12 மணி நேரம் –<br>காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | 9,000.00 |
| 03 | 6 மணி நேரம் –<br>காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | 4,500.00 |
| 04 | சேவை வரி (சதவீதம்) | 12.5 |
| 05 | வைப்புத் தொகை முன் பணம் | 10,000.00 |
| 06 | மின் கட்டணம் (யூனிட் ஒன்றிற்கு) | 10.00 |

தற்போது கலை நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள், தனியார் விழாக்கள் (உணவு பொருட்கள் அனுமதி கிடையாது) மட்டும் நடத்த இருப்பதால் வாடகை மற்றும் முன்வைப்புத் தொகை கீழ்க்கண்டவாறு உபயோகிப்புக் கட்டணம் மறுநிர்ணயம் செய்து மாற்றி அமைக்கலாம்.

| வரிசை எண் | நேரம் | வாடகை நிர்ணயம் ரூ. |
|---|---|---|
| 01 | 24 மணி நேரம் –<br>மாலை 3.00 மணி முதல் மறுநாள் மாலை 3.00 மணி வரை | 30,000.00 |
| 02 | 12 மணி நேரம் –<br>காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | 15,000.00 |
| 03 | 6 மணி நேரம் –<br>காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை, மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை | 8,000.00 |
| 04 | சேவை வரி (சதவீதம்) | 12.5 |
| 05 | வைப்புத் தொகை முன் பணம் | 15,000.00 |
| 06 | மின் கட்டணம் (யூனிட் ஒன்றிற்கு) | 10.00 |
| 07 | ஒலிபெருக்கி அமைத்துத்தர | 2500.00 |

மேலும் தற்போது நடைமுறையில் உள்ள நிபந்தனைகள் தொடர்ந்து பொருந்தும். மண்டலம்–8, வார்டுகுழு தீர்மான எண்.426, நாள்.03.03.2010 ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவைகளின் அடிப்படையில் இப்புதிய உபயோகிப்புக் கட்டணத்தை நிர்ணயம் செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.85/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>சு.து.ந.க.எண்.கா.பி.அ1/033/2010</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 05.04.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :199/2010 பொருள் எண்:69

**<u>சுகாதாரத்துறை – கால்நடைப்பிரிவு – வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் கட்டணம் ஆண்டொன்றுக்கு ரூ.50/– ஆக நிர்ணயம் செய்ய அனுமதி</u>**

ஆணையர் அவர்கள் சுகாதார அலுவலர் மற்றும் உதவி சுகாதார அலுவலர்கள் ஆகியோருடன் 01.04.2010 அன்று நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் வளர்ப்பு நாய்களுக்கான சென்னை மாநகாரட்சி உரிமம் கட்டணமாக ஆண்டொன்றுக்கு ரூ.50/– என நிர்ணயம் செய்து அமுல் படுத்திட கருதப்பட்டது.

இது குறித்து தெரிவித்துக்கொள்வது யாதெனின், சென்னை மாநகரில் சுமார் 75000 நாய்கள் செல்லப்பிராணிகளாக வீடுகளில் வளர்க்கப்படுகிறது. அவ்வாறு வீட்டில் வைத்திருப்பதற்கு நாய்களுக்கான உரிமம் ஆண்டொன்றிற்கு ரூ.50/– என நிர்ணயம் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நாய்களுக்கு உரிமம் வழங்கும் முன் அவைகளுக்கு வெறி நோய் தடுப்பூசி இலவசமாக சென்னை மாநகராட்சி கால்நடை மருந்தகங்கள் மற்றும் B.R.L.C (Dog Pound) ஆகிய இடங்களில் அளிக்கப்படும். நாய்கள் மூலம் மனிதர்களுக்கு பரவக்கூடிய லெப்டோ ஸ்பைரோசீஸ் (எலி காய்ச்சல்) மற்றும் இதர நோய்களுக்கான தடுப்பூசி அதன் கொள்முதல் விலையிலேயே மாநகராட்சி கால்நடை மருந்தகங்களில் ஆண்டுதோறும் வழங்கிடவும் மற்றும் கீழ்கண்ட இனங்களுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

1. சென்னை நகரில் வீட்டில் வளர்க்கப்படும் வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் கட்டணமாக 2010–2011 ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு ரூ.50/– என நிர்ணயம் செய்திடவும்,
2. சென்னை மாநகராட்சி உரிமம் பெறும் வளர்ப்பு நாய்களுக்கு மாநகராட்சி இலவச கால்நடை மருந்தகங்கள் மற்றும் B.R.L.C (Dog Pound) இல் இலவச வெறிநோய் தடுப்பூசி போடவும்,
3. சென்னை மாநகராட்சி உரிமம் பெறும் வளர்ப்பு நாய்களுக்கு லெப்டோ ஸ்பைரோசீஸ் (எலி காய்ச்சல்) மற்றும் இதர நோய்களுக்கான தடுப்பூசி அதன் கொள்முதல் விலையிலேயே மாநகராட்சி கால்நடை மருந்தகங்களில் ஆண்டுதோறும் வழங்கிடவும்,
4. இது குறித்து பத்திரிக்கை வாயிலாக பொது மக்களுக்கு செய்தி வெளியிடவும்,

நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு & நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 09.04..2010 அன்று தீர்மானஎண்.11/2010ன்படி நிலைக்குழு (சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

> ''23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.83/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ச.கு.ந.க.எண்.சகு5/35/2007**
**ஆணையாளர் அவர்களின் 29.03.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :200/2010 பொருள் எண்.70

**சட்ட அலுவலர் புதுடெல்லிக்கு வான்வழிப் பயணம் மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டுதல்**

06.02.07 நாளிட்ட ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, திரு.சா.ஜேக்கப் ராஜன் பாபு, சட்ட அலுவலர் அவர்கள் தமிழ்நாடு பிரைவேட் சைட் ஊேறார்டிங் ஓனர்ஸ் அசோசியேசன், சென்னை மாநகராட்சி, ஆணையர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு எதிராக தொடுத்த சிறப்பு அனுமதி கோரும் விண்ணப்பங்கள் 15676/06 மற்றும் 15210/06 ன் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.5/07 தொடர்பாக அவசர அவசிய நிலையினை கருதி உச்ச நீதிமன்றம், புதுடில்லிக்கு சென்று வர ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்து ஆயிரம் மட்டும்) முன்பணம் பெற்று பயணம் மேற்கொண்டார்.

திரு.சா.ஜேக்கப் ராஜன் பாபு, சட்ட அலுவலர் அவர்கள் மேற்கண்ட வழக்கு தொடர்பாக 06.02.07 மற்றும் 07.02.07 ஆகிய நாட்களில் புது டெல்லிக்கு வான்வழிப் பயணம் மேற்கொண்டு சமர்ப்பித்த பயணப்பட்டியலில், மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.10,760/– (ரூபாய் பத்தாயிரத்து ஏழுநூற்று அறுபது மட்டும்) போக மீதம் ரூ.14,240/– (ரூபாய் பதிநான்காயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) சென்னை மாநகராட்சி கருவூலத்தில் 13.02.2007 அன்று ரூ.13,916/–ம் 9.10.09 அன்று ரூ.324/–ம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில் மேற்படி பயணப்பட்டியலுக்காக பெறப்பட்ட முன்பணம் நேர்செய்ய கோப்பு அனுப்பப்பட்டபோது நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்பில் 23.11.2001 நாளிட்ட அரசாணை எண்.464ன்படி (நிதி (படிகள்) துறை) காலமுறைச் சம்பளம் ரூ.12000–375–16500 பெறும் அலுவலர் மாநிலத்திற்கு வெளியே சிக்கன வகுப்பில் விமானப் பயணம் மற்றும் குளிர்பதன இரண்டாம் வகுப்பு ரயில் பயணம் மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார். இந்நேர்வில் ரூ.10000–325–15200 என்ற காலமுறை சம்பளம் கொண்ட சட்ட அலுவலர் பதவி வகிக்கும் திரு.எஸ்.ஜேக்கப் ராஜன் பாபு விமானப் பயணம் மேற்கொண்டு டில்லி பயணம் செய்து அவசர மற்றும் மிக முக்கியத்துவம் வாய்ந்த வழக்கின் நிமித்தம் அவசிய அவசரம் கருதி உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எனவே, மேற்படி விமான பயணம் மேற்கொண்டமைக்கு வழங்கப்பட்ட முன்பணத்தை நேர்செய்ய ஆணையர் அவர்களின் உத்தரவின்படி பயணப்பட்டியை அங்கீகரித்து பின்னர் அரசின் பின்னேற்பு பெறலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

02.03.10 நாளிட்ட இவ்வலுவலக குறிப்பினைத் தொடர்ந்து ஆணையாளர் அவர்கள் சட்ட அலுவலர் அவர்களிடம் இந்நிகழ்விற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி போதுமானது என நேரில் அறிவுறுத்தப்பட்டது.

திரு.சா.ஜேக்கப் ராஜன் பாபு, சட்ட அலுவலர் அவர்கள் வான்வழிப் பயணம் மேற்கொண்டபோது தனியரின் அடிப்படை ஊதியம் ரூ.7,900/– ஆகும். மேலும் தனியர் உதவி சட்ட அலுவலர் பதவியிலிருந்து சட்ட அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்த நாளான 16.06.06 முதல் காலமுறைச் சம்பளம் ரூ.10,000–325–15200 என்று ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பயணப்படி விதிகளின்படி திரு.சா.ஜேக்கப் ராஜன் பாபு, சட்ட அலுவலர் அவர்கள் வான்வழிப் பயணம் மேற்கொள்ளத் தகுதியில்லை. தவிர்க்க இயலாத காரணங்களினாலும், அவசர அவசிய நிலை கருதியும், வழக்கின் முக்கியத்துவம் கருதியும் சென்னை உயர்நீதிமன்ற ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி கோரும் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற காரணத்தினாலும், திரு.சா.ஜேக்கப் ராஜன் பாபு அவர்களை,

ஆணையாளர் அவர்கள் புதுடில்லிக்கு விரைந்து சென்று உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆஜராகுமாறு பணித்தார். எனவே, திரு.சா.ஜேக்கப் ராஜன் பாபு, சட்ட அலுவலர் அவர்கள் அவசரமான வான்வழிப் பயணம் மேற்கொள்ள நேர்ந்தது. சென்னை உயர்நீதிமன்றத்திலும் அவசரப் பணிகளை மேற்படி அலுவலர் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், அவர் புதுடில்லியிலிருந்து சென்னை திரும்பும்போதும் வான்வழிப் பயணம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே, திரு.சா.ஜேக்கப் ராஜன் பாபு, சட்ட அலுவலர் அவர்கள் வான்வழிப் பயணம் மேற்கொண்டதற்கும், வான்வழிப் பயணம் மூலம் செலவிடப்பட்ட தொகையை ரூ.10,760/– (ரூபாய் பத்தாயிரத்து எழுநூற்று அறுபது மட்டும்)ஐ சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.84/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ‘’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**பூ.து.ந.க.எண்.பி2/193/2010**
**ஆணையாளர் அவர்களின் 09/03/2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :201/2010 பொருள்எண்.71

**அண்ணா பூங்கா நுழைவுக் கட்டண வசூல் நிறுத்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, பூங்கா துறையில் மண்டலம்– 2 பகுதி– 5 கோட்டம்– 22ல் அமைந்துள்ள அண்ணா பூங்காவில் பொதுமக்களிடம் நபர் ஒன்றுக்கு ரூ.1/ என்ற வீதத்தில் நுழைவுக்கட்டணம் வசூலிக்கப்பட்டு வரப்பெற்றது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 08/02/2010 அன்று ஆய்வின்போது இப்பூங்காவிற்கான நுழைவு கட்டணத்தை நிறுத்தம் செய்து உத்தரவிட்டதால், அதன்படி 08/02/2010 முதல் கட்டண வசூல் நிறுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் உள்ள பூங்காக்களில் அண்ணா பூங்காவை தவிர வேறு எந்த பூங்காவிலும் நுழைவுக் கட்டணம் வசூலிப்பது நடைபெறுவதில்லை. தற்போது அண்ணா பூங்காவில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 08/02/2010 அன்று நுழைவு கட்டணம் வசூல் செய்வதை நிறுத்த அறிவுறுத்தியுள்ளதால், இதனையும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

எனவே, கீழ்காணும் இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

1. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 08/02/2010 அன்றைய ஆய்வின்போது அண்ணா பூங்காவிற்க்குரிய நுழைவுக் கட்டணத்தை ரத்து செய்ததை, உறுதி செய்ய ஒப்புதலும்.

2. 8/02/2010 முதல் நுழைவு கட்டணத்தை வசூல் நிறுத்தம் செய்ததற்கு, மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு) (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.56/2010 நாள்: 21.04.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ வி ம நி )-é‹ மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''23.04.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.100/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.7.ந.க.எண்.இ4/00146/2009**
**ஆணையாளர் அவர்களின் 20.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :202/2010 பொருள் எண்: 72

**தானப்பத்திரம்**

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் கடித எண்.சி/161/2008, நாள்.23.06.2009 ன்படி திருவாளர்கள் V.V.A ஹோட்டல் (P) லிமிடெட் அவர்கள் வார்டு–106, ஆர்.எஸ்.எண்./623/4, பிளாக்–51, எக்மோர் கிராமம், கதவு இலக்கம் 2, எத்திராஜ் சாலையில் இரட்டை அடித்தளம் + தரைதளம் + 11 தளத்துடன் கூடிய ஓட்டல் கட்டுவதற்காக சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திடம் கடித எண்.சி3/161/08, நாள்.23.06.2009படி திட்ட அனுமதி பெற்றுள்ளார்கள். இது குறித்து தெரிவிப்பது யாதெனில் எத்திராஜ் சாலை 18 மீட்டர் அகலத்திற்கு அகலப்படுத்தும் உத்தேசம் உள்ளதாலும் (Street Alignmant) மனை அமையும் இடத்தில் சாலையின் அகலம் 16.04 மீட்டர் இருந்து 16.66 மீட்டர் அகலம் வரையில் மட்டுமே உள்ளதாலும் மேற்படி அனுமதி வழங்கும்போது 18 மீட்டர் அகலத்திற்கு சாலை அமையும் வண்ணம் தேவையான இடத்தினை மாநகராட்சிக்கு விண்ணபதாரர் தானப் பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்ற உத்திரவாதத்தின் பேரில் மேற்படி அனுமதி வழங்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது. தற்போது விண்ணபதாரரின் கட்டிட அனுமதிக்கு (BA) அனுமதி வழங்கும் பொருட்டு சாலைக்காக ஒதுக்கப்பட்ட 91.12 ச.மீ பரப்பளவு இடத்தினை மாநகராட்சி எடுத்துக் கொள்ளுவதற்கு நகரமைப்பு நிலைக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி பெற 10.11.2009 அன்று நடைபெற்ற மண்டலம்–7 வார்டு குழு கூட்டத்தில் தீர்மான எண்.682ன்படி நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், சாலையை அகலப்படுத்த விண்ணபதாரரிடம் இருந்து ரூ.1,40,000/–க்கு வரைவு காசோலையும் பெறப்பட்டுள்ளது.

எனவே,.

1. சாலை விரிவாக்கத்திற்கு எடுக்கப்படும் நிலத்தை தானப்பத்திரம் மூலமாக ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு விண்ணப்பதாரரின் செலவில் பதிவு செய்வதற்கும்,
2. விண்ணப்பதாரரிடம் இருந்து தோராய அபிவிருத்தி கட்டணம் ரூ.1,40,000/– (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) வசூலித்தமைக்கு பின்னேற்பு வழங்கவும்,
3. சாலை விரிவாக்கத்திற்கு வழங்கப்பட்ட நிலத்தினை குறியிட்டு, அதிலுள்ள மதில் சுவர் மற்றும் கட்டிடங்களை விண்ணப்பதாரரின் செலவில் இடிக்கவும், மாநகராட்சிக்கு ஒப்படைத்த இடம் தவிர்த்து மீதமுள்ள இடத்தில் மனுதாரர் செலவில் சுற்று சுவர் அமைக்கவும்,

நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.03.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.05/2010, நாள் 18.03.2010–ன்படி, இதற்கு சென்னை மாநகராட்சி விதி 1919 பிரிவு விதி 244–A ன் கீழ் வரும் தண்டத் தொகையினை வசூல் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.து.ந.க.எண்.தேர்தல்கள்/11655/2009**
**ஆணையாளர் அவர்களின் 22.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :203/2010 பொருள் எண்.73

**தேர்தல்கள் – மகளிருக்கான இட ஒதுக்கீடு**

அரசு கடிதம் எண்.25278/தேர்தல்கள்/2009, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 07.12.2009 நாளிட்ட அரசுச் செயலரின் கடிதத்தில், மகளிருக்கான இட ஒதுக்கீடு குறித்து மத்திய அரசால் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டத் திருத்தம் குறித்து கருத்தினை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய அரசியமைப்பு சட்டம், பிரிவு எண்.234ட்டி–ன்படி நகராட்சி அமைப்புகளில்,

1. பழங்குடியினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்கு பழங்குடியினர் மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த மகளிருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்,

2. மொத்தமுள்ள பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு (பழங்குடியினர் மற்றும் சீர்மரபினரைச் சேர்த்து) மகளிருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

இதன்படி, சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919 பிரிவு எண்.5ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் பதவிகளில், மகளிருக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு செய்யும் வகையில் சட்டம் இயற்றப்பட்டு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது மத்திய அரசால், மேற்குறிப்பிட்ட இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவில்,

1. மகளிருக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு என்பதனை திருத்தம் செய்து, ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு என்று மாற்றுவது குறித்து கருத்து தெரிவிக்கவும்,

2. நகராட்சிகளுக்கான தலைவர் பதவிகளில் பழங்குடியினர் மற்றும் சீர்மரபினரைச் சார்ந்தவர்களுக்கு ஒதுக்கப்படும் இட ஒதுக்கீட்டில், பழங்குடியினர் மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த மகளிருக்கு ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு செய்திடுவது குறித்து கருத்தும்,

3. மொத்தமுள்ள நகராட்சிகளுக்கான தலைவர் பதவிகளில் ஐம்பது விழுக்காடு மகளிருக்கு இட ஒதுக்கீடு செய்திடவும் சட்டத்திருத்தம் கொணர உத்தேசிக்கப்பட்டுள்ளது குறித்து கருத்தும் தெரிவித்து,

இது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் கருத்துரை வழங்க வேண்டியும், மகளிருக்கு சென்னை மாநகராட்சி மன்றத்தில் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து முடிவெடுக்கவும், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘23.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.101/2010 நாள் 23.04.2010–ன்படி, இதற்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘பெரும்பாலான மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் மகளிருக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யலாம் என்ற கருத்தின் அடிப்படையில் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>க.து.ந.க.எண்.பி3/2673/2009</u>**

**<u>ஆணையர் அவர்களின் 20.04.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :204/2010 பொருள் எண். 74

**<u>மயான பூமிகள் நவீனமாக்குதல்</u>**

சென்னை மாநகரில் சென்னை மாநகராட்சி பராமரிப்புலுள்ள மயான பூமிகளில் முதற் கட்டமாக 10 மயான பூமிகளை தற்காலத்திற்கு ஏற்றவாறு நவீனமாக்கவும், அழகிய முறையில் முகப்பு தோற்றத்தை அமைக்கவும், இயற்கை காட்சிகளுடன் கூடிய நிலத்தோற்றம் அமைக்கவும் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டு, இதற்கு கலந்தறிதற்குரியவராக திரு.எம்.முரளி, கட்டிட எழில் கலைஞர் அவர்களை நியமிக்க மன்றத்தின் அனுமதி தீர்மானம் எண்.380/2009, நாள்.29.10.2009ல் பெறப்பட்டுள்ளது. இதன்படி, கீழ்க்கண்ட 10 மயான பூமிகளை நவீனமாக்க, கலந்தறிதற்குரியவருக்கு பணி ஆணை 16.11.2009 அன்று வழங்கப்பட்டது.

(1) மண்டலம்–2 வார்டு–14ல் காசிமேடு மயான பூமி
(2) மண்டலம்–3, வார்டு–33ல் வியாசர்பாடி மயான பூமி
(3) மண்டலம்–4, வார்டு–61ல் ஓட்டேரி மயான பூமி
(4) மண்டலம்–4, வார்டு–62ல் ஜி.கே.எம். மயான பூமி
(5) மண்டலம்–5, வார்டு–68ல் வேலங்காடு மயான பூமி
(6) மண்டலம்–6, வார்டு–91ல் கிருஷ்ணாம்பேட்டை மயான பூமி
(7) மண்டலம்–8, வார்டு–127ல் கண்ணம்மாபேட்டை மயான பூமி
(8) மண்டலம்–9, வார்டு–132ல் மேற்கு ஜோன்ஸ் சாலை மயான பூமி
(9) மண்டலம்–10, வார்டு–152ல் பெசன்ட் நகர் மயான பூமி
(10) மண்டலம்–2, வார்டு–31ல் மூலகொத்தளம் மயான பூமி

மேற்கண்ட 10 மயான பூமிகளில் தற்போது மண்டல–4, வார்டு–62ல் ஜி.கே.எம்.காலனி மயான பூமி வளாகத்திற்கு சுற்று சுவருடன் கூடிய நவீன நுழைவாயில் கட்டும் பணி, ஒய்வறை/தங்கும் அறை கட்டும் பணி மற்றும் இயற்கை காட்சிகளுடன் கூடிய நிலத்தோற்றம் அமைக்கும் பணி ஆகிய பணிகளுக்கு மண்டல அலுவலகம்–4ன் மூலம் மொத்த ரூ.105.00 இலட்சங்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டு தற்போது நவீன நுழைவாயில் மற்றும் ஒய்வறை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், மண்டலம்–10, வார்டு–152ல் பெசன்ட் நகர் மயான பூமியின் முகப்பை அழகுபடுத்தும் பணி, சுற்றுச்சுவர் கட்டும் பணி, ஒய்வறை கட்டும் பணி மற்றும் கழிவறை கட்டும் பணி ஆகிய பணிகளுக்கு மண்டல அலுவலகம்–10ன் மூலம் மொத்தம் ரூ.134.55 இலட்சங்களுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டு தற்போது முகப்பை அழகு படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

மேற்கூறப்பட்ட 2 மயான பூமிகள் போக1 மீதமுள்ள் 8 மயான பூமிகள் நவீனமாக்கும் பணிக்கு சம்பந்தப்பட்ட மண்டலங்கள் மூலம் மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. விரைவில் ஒப்பங்கள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ள மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது. இந்த தகவல் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

‘‘21.04.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 63/2010, நாள்: 21.04.2010-ன்படி இதனை நிலைக்குழு (பணிகள்) பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.‘‘

‘‘இதில் அரும்பாக்கம் மயான பூமியையும் சேர்க்க வேண்டும் என்ற திருத்தத்துடன் இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

*******

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 2630 /2009**
**ஆணையரின் 23.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :205/2010 பொருள் எண்.75

**பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் வேலிச்சுவர்கட்டும் பணி**

மண்டலம்–10, பகுதி–30, கோட்டம்–155ல் ரூ.2,23,25,000/– மதிப்பீட்டிற்கு பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் வடக்கு திசையில் 4250 மீட்டருக்கு வேலிச்சுவர் கட்டும் பணிக்காக 29.01.2010 என்று நாள் குறித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. குறித்த நாளான 29.01.2010 அன்று திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அளித்தனர். அவர்கள் அளித்துள்ள விலைவிவரம் கீழ்வருமாறு.

| ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2009–2010ஆம் ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன் | 1,92,47,526.50 | 2,01,13,665.00 | (+) 4.5 % |

திருவாளர்கள். மெர்குரி கன்ட்ஸ்ரக்ஷன் அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில் 02.02.2010 நாளிட்ட கடிதத்தில் தங்களின் விலைவிகிதத்தை ரூ.2,01,13,665.00 அதாவது (+) 4.5 % என்பதிலிருந்து ரூ.1,99,01,942/– என்று அதாவது (+)3.40 % என்று குறைத்து அளித்துள்ளனர். அவ்வாறு குறைத்து அளிக்கும் போது அவர்கள் தேங்கியிருக்கும் தண்ணீரினை சென்னை மாநகராட்சி வெளியேற்றி தந்த பிறகே பொருட்களை எடுத்துச் செல்ல இயலும் என்று கூறியிருந்தனர். ஒப்பந்ததாரரை அந்த நிபந்தனையினை திரும்ப பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு என்பது நிபந்தனைக்குட்பட்டது என்று கூறியுள்ளார்கள். எனவே, ஒப்பந்ததாரர் தாங்கள் கொடுத்திருந்த விலைக்குறைப்பு கடிதத்தினை திரும்ப பெறுவதாகவும், தாங்கள் ஒப்பத்தில் கொடுத்திருந்த விலையான (+) 4.50% இறுதியானது என 18.02.2010 தேதியிட்ட அவர்களின் கடிதத்தில் கூறியுள்ளார்கள். இவர்களின் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட ஒப்பத்தொகை 23.01.2010 சந்தை விலைவிகிதங்களோடு ஒப்பிடப்பட்டது. அதன்படி இந்த பணிக்கான சந்தை மதிப்பு ரூ.2,32,03,750.45 ஆகும். இதன்படி ஒப்பந்தப்புள்ளிதாரர் திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பத்தொகையான ரூ.2,01,13,665/– இப்பணிக்கான சந்தை மதிப்பை விட (–) 13.32 % குறைவாகும். இந்த ஒப்பந்ததாரர் பொதுப்பணித்துறையில் முதல் வகுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளவர். தற்போது இவர்கள் சென்னை மாநகராட்சியில் முதல் வகுப்பில் பதிவு செய்துள்ளனர்.

மேற்சொன்ன திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி குழுவின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளி குழு தங்களது 18.02.2010 அன்று நடந்த கூட்டத்தில் திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களது மேற்சொன்ன ஒப்பந்தப்புள்ளிக்கு பரிந்துரையினை வழங்கியுள்ளது.

ஏற்கனவே, இப்பணிக்கு ரூ2,41,54,000/–க்கு 2008–2009ஆம் ஆண்டு துறை விலைவிகிதங்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதலும், மேலும், இந்த திட்டம் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயலாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் வரும் பணிகள் விரைவாக செய்து முடிக்கப்பட வேண்டும் என்ற அவசரம் உள்ளதாலும், திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்பளிப்பினை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டு, அதில் குறைவான விலைப்புள்ளி அளித்திருந்த திருவாளர்கள் மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு பிறகு அளித்துள்ள

ஒப்பத்தொகையானரூ.1,99,05,899/—க்கு பரிந்துரைக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது மன்றத்தினால் **29.10.2009** அன்று நடந்த கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது இந்த பணிக்கான திட்ட மதிப்பீட்டின் விவரங்கள் கீழ்வருமாறு

| மதிப்பீட்டின் தொகை ரூ | | |
|---|---|---|
| ஆ | பணி செலவினம் மட்டும் | 1,92,47,526.50 |
| ஆ | மேற்பார்வை செலவு | 19,24,753/— |
| இ | சில்லறை மேற்பார்வை செலவு | 4,81,188/— |
| ஈ) | தரக்கட்டுப்பாடு | 1,92,475/— |
| உ) | மற்றைய எதிர்பாரா செலவு | 4,79,057.50/— |
| | மொத்தம் | ***2,23,25,000/—*** |

மேற்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ***ரூ.2,23,25,000/— (ரூபாய் இரண்டு கோடியே இருபத்துமூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்)*** மதிப்பீட்டிற்கு ஆட்சிமுறை ஒப்பளிப்பு தேவைபட்டது.

எனவே,

(1) கோட்டம்—155, பகுதி—30, மண்டலம்—10ல் **பெருங்குடி** குப்பை கொட்டும் வளாகத்தில் வேலிச்சுவர் கட்டும் பணிக்காக 2009—2010 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு ***ரூ.2,23,25,000/— (ரூபாய் இரண்டு கோடியே இருபத்துமூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்)***க்கு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதலும்

(2) மேற்சொன்ன பணிக்காக மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் அழைத்ததற்கு மன்றத்தின் பின்னேற்பும் மற்றும்

(3) மேற்சொன்ன பணிக்காக பெறப்பட்ட திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் பேச்சு வார்த்தைக்குப் பிறகு கோரியுள்ள ***ரூ.2,01,13,665/—(ரூபாய் இரண்டு கோடியே ஒரு இலட்சத்து பதிமூன்றாயிரத்து அறுநூற்று அறுபத்தி ஐந்து மட்டும்)***ஐ 2009—2010 ஆண்டு அலுவலக விலையை விட (+) 4.50 % ***அதிகமான*** ஒப்பத் தொகைக்கு ஒப்புதலும் வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு நிலைக்குழு(பணிகள்) தீர்மானம் எண்.32/2010, நாள் 19.02.2010ல் பரிந்துரை செய்து நிலைக்கு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பித்தது. இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) தீர்மானம் எண்.54/2010, நாள். 22.02.2010ல் பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பித்தது.

இப் பொருட்பாடு மன்ற தீர்மானம் எண்.102/2010, நாள்.26.02.2010 மூலம் ஒத்தி வைக்கப்பட்டது.

எனவே, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் வேலிச்சுவர் அமைக்கும் பணிக்காக பெறப்பட்ட திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பம் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி குழுவிற்கு பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி குழு தங்களது 20.04.2010 நாளிட்ட கூட்டத்தில் இதற்கு மீண்டும் பரிந்துரை வழங்கியது. இந்த கூட்டத்தில் வேலிச்சுவர் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் சதுப்பு நிலத்தில் அமைந்துள்ளதால் எந்நேரமும் தண்ணீர் சுழ்ந்த பகுதியாகும். மேலும் எந்த காலத்திலும் வற்றாததாக இருக்கும். எனவே, இங்கு பணி செய்வது, வேலிச்சுவரின் போக்கினை குறியிடுவது, மண்ணில் ஆழ்துளைகளை போடுவது, தரைக்கடியில் சிமிண்ட் தூண்களை கட்டுவது, கட்டுமான பொருட்களையும் தளவாடங்களையும் கொண்டுவருதல்

ஆகியவைகளில் பல இடர்பாடுகள் உள்ளதாக இருக்கிறது. மேலும் இந்த இடம் குப்பை கொட்டும் வளாகமாக இருப்பதால், பொருட்கள் திருடுபோகும் வாய்ப்புகளும் உண்டு போன்ற காரணிகள் பரிசீலிக்கப்பட்டு கருத்தில் கொள்ளப்பட்டன. மேலும் இந்த ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு வேறு அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டாலும், ஒப்பந்தப் புள்ளிதாரர்களிமிருந்து ஒப்பங்கள் பெறும் வாய்ப்புகளும் அரிதாக இருக்கும் என்பதும், அவ்வாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டாலும், இந்த ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்டுள்ள விலைவிகிதத்தினை விட குறைவான விலைவிகிதம் கிடைக்கும் என்பது உறுதியில்லை என்பதும் இந்த ஒப்பந்தப்புள்ளியினை நிராகரித்து வேறு ஒப்பந்தப்புள்ளியினை கோருவது இந்த திட்டம் செயலாக்கப்படுவதை தாமதமாக்கும் என்பதும் ஒப்பந்தப்புள்ளிக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.

மேலும், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் சென்னை மாநகராட்சி மதில் சுவர் கட்ட உள்ளது என்றும் அதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டுள்ளது என்றும் உயர்நீதி மன்றத்தில் வாக்குறுதிகள் அளித்துள்ளது என்றும் மற்றும் இந்த வேலிச்சுவர் கட்டும் பணி பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் விஷமிகள் உட்புகுந்து குப்பையை கொளுத்துவதை தடுத்து அருகில் வாழும் மக்களுக்கு எந்த சுகாதார அபாயமும் வராமல் இருப்பதற்கு அவசியம் என்பதும் ஒப்பந்தப்புள்ளிக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு கருத்தில் கொள்ளப்பட்டு, திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் பேச்சு வார்த்தைக்குப் பிறகு கோரியுள்ள ரூ.2,01,13,665/–(ரூபாய் இரண்டு கோடியே ஒரு இலட்சத்து பதிமூன்றாயிரத்து அறுநூற்று அறுபத்தி ஐந்து மட்டும்)ஐ 2009–2010ஆம் ஆண்டு அலுவலக விலையைவிட (+) 4.50 % ***அதிகமான*** ஒப்பத்தொகைக்கு பரிந்துரை செய்துள்ளது. இந்நிகழ்வில் திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி 27.03.2010 அன்றைய சந்தை விலையுடன் ஒப்பு நோக்கப்பட்டதில் அவர்களின் விலை விகிதம் சந்தை விலை விகிதத்தை விட (–) 17.76 சத விகிதம் குறைவாகும்.

எனவே,

(1) கோட்டம்–155, பகுதி–30, மண்டலம்–10ல் **பெருங்குடி** குப்பை கொட்டும் வளாகத்தில் வேலிச்சுவர் கட்டும் பணிக்காக 2009–2010 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு ***ரூ.2,23,25,000/– (ரூபாய் இரண்டு கோடியே இருபத்துமூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்)***க்கு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதலும்

(2) மேற்சொன்ன பணிக்காக மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் அழைத்ததற்கு மன்றத்தின் பின்னேற்பும் மற்றும்

(3) மேற்சொன்ன பணிக்காக பெறப்பட்ட திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் பேச்சு வார்த்தைக்குப் பிறகு கோரியுள்ள ***ரூ.2,01,13,665/–(ரூபாய் இரண்டு கோடியே ஒரு இலட்சத்து பதிமூன்றாயிரத்து அறுநூற்று அறுபத்தி ஐந்து மட்டும்)ஐ*** 2009–2010 ஆண்டு அலுவலக விலையை விட (+) 4.50 % ***அதிகமான*** ஒப்பத்தொகைக்கு ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி பெற்ற நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரம் கருதி நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி மீள சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மறு ஒப்பந்தம் கோரி மீண்டும் மன்றத்திற்கு சமர்ப்பிக்கலாம் என்பதன் அடிப்படையில் இப்பொருள் ஒத்திவைக்கப்படுகிறது."

*******

**சு.து.ந.க.எண்.ப.கூ./சிறப்பு/2010**
**ஆணையர் அவர்களின் 28.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :206/2010 பொருள் எண்.76

**உணவு கலப்பட தடுப்புச் சட்டம்(ம) விதிகள் – உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உணவு பொருட்களின் மீது விவரங்கள் தமிழில் குறிப்பிடுதல், சட்ட வரைமுறைகளை தீவிரப்படுத்துதல் தொடர்பாக மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பித்தல்.**

* * * * *

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தயாரிக்கப்படும் இட்லி, தோசை மாவு போன்ற உணவு பொருட்கள், பாக்கெட்டுகளில் அடைத்து விற்கப்படும் ரொட்டி, கேக், போன்ற உணவுப் பொருட்கள், குளிர்பானம் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு அதிக அளவில் விற்பனை செய்யப்படுகிறது. விரைவில் கெட்டுப்போகக்கூடிய இட்லி, தோசை மாவு ரொட்டி, கேக், ஊறுகாய் பதப்படுத்தப்பட்டு தயார் நிலையில் உள்ள உணவுப் பொருட்கள் மீது அழியக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட நாள், உபயோகிக்க கடைசி நாள் ஆகிய விவரங்கள் பார்க்க முடியாத சிறிய எழுத்துக்களால் முத்திரையிடப்படுவது அழிந்து விடுவதால் அவற்றை உபயோகப்படுத்தும் பொது மக்கள் சுகாதார பாதிப்பு அடைய வாய்ப்பு உள்ளது.

அண்மைக் காலங்களில் மாநகராட்சி பொது சுகாதாரத்துறை பெரும்பாலான உணவகங்கள் மற்றும் வியாபார மையங்களில் பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப்படும் உணவு பொருட்கள் தயாரிக்கப்பட்ட நாள், மற்றும் உபயோகிக்க கடைசி நாள் போன்ற விவரங்கள் சரிவர அச்சிடப்படாமல் விற்பனை செய்யப்படுவதாக நூற்றுக்கணக்கில் புகார்கள் பெறப்பட்டதின் தொடர்பாக கீழ்கண்ட உணவு வகைகளான

- ரொட்டி, கேக் பிஸ்கட், சமோசா, பப்ஸ்
- இட்லி, தோசை மாவு, பரோட்டா, சப்பாத்தி, இடியாப்பம்
- ஊறுகாய், பேரீச்சம் பழம், அப்பளம், ஜாம், சாஸ், புளி, பூண்டு, இஞ்சி, தயார் நிலை கரைசல்கள்
- பருப்பு பொடி, இட்லி பொடி, சாம்பார் பொடி, ரசப்பொடி
- பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப்படும் குளிர் பானங்கள்
- தயார் நிலையில் உள்ள பதப்படுத்தப்பட்ட இறைச்சி, மீன் போன்ற உணவுகள்

இனிப்பு மற்றும் காரவகைகள், தயாரிக்கப்பயன்படுத்தப்படும் எண்ணெய் ஆகிய உணவு வகைகளில் உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ், தயாரிக்கப்பயன் படுத்தப்பட்ட உணவு மூலக்கூறுகள் (Ingredients) பதப்படுத்த பயன்படுத்தும் இரசாயண கலவைகள் (Preservatives) நிறக் கலவைகள் (Colouring matter) தயாரிப்பாளர் முகவரி வரிசை எண் ஆகிய விவரங்களை பாக்கெட்டின் மீது அச்சிடப்பட்டிருக்க வேண்டும். மேலும் "3X3" அளவு லேபிலில் தமிழில் பெரிய எழுத்துக்களில் எளிதாக படிக்கும் வண்ணம் தயாரிக்கப்பட்ட நாள், மற்றும் உபயோகிக்க கடைசி நாள் ஆகிய விவரங்கள் தமிழில் அச்சிடப்பட்டு ஒட்டியிருப்பது அவசியமாகும்.

இவ்வாறு தமிழில் அச்சிடப்படாமல் விற்கப்படும் உணவு வகைகள் சென்னை மாநகர் மக்களின் உடல்நலம் கருதி பொது சுகாதாரம் மற்றும் உணவு கலப்படை தடுப்புச் சட்டத்தின் கீழ் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது திவிரமாக்கப்படும் என்பது மன்றத்தின் தகவலுக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.04..2010 அன்று தீர்மானஎண்.13/2010ன்படி நிலைக்குழு(சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் தகவலுக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.”

“சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தயாரிக்கப்படும் இட்லி, தோசை மாவு, பரோட்டா, சப்பாத்தி, இடியாப்பம், பதப்படுத்தப்பட்ட இறைச்சி–மீன் போன்ற உணவு பொருட்கள், பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப்படும் ரொட்டி, கேக், பிஸ்கட், சமோசா, பப்ஸ், போன்ற உணவு வகைகளின் பாக்கெட்டுகளில், தயாரிக்க பயன்படுத்தப்பட்ட உணவு மூலக்கூறுகள், பதப்படுத்த பயன்படுத்தப்படும் இரசாயன கலவைகள், நிற கலவைகள், தயாரிப்பாளா் முகவரி, தயாரிக்கப்பட்ட நாள், உபயோகிக்க கடைசி நாள் ஆகிய விவரங்கள் பாக்கெட்டுகள் மீது கண்டிப்பாக அச்சிடப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாக தமிழில் பெரிய எழுத்துக்களில் பொது மக்கள் எளிதாக படிக்கும் வண்ணம் குறிப்பிடப்பட வேண்டும். இவ்விவரங்கள் இல்லாத உணவு பொருட்கள் தடை செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**சு.து.ந.க.எண்.ப.கூ./சிறப்பு/2010**
**ஆணையர் அவர்களின் 28.04.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :207/2010 பொருள் எண்.77

**உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் பொது மக்கள் நலன் கருதி பாலிதீன் பாக்கெட் தண்ணீர் விநியோகம் தடை செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பாட்டில்கள், கேன் மற்றும் பாலிதீன் பாக்கெட்டுகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பாலிதீன் பாக்கெட்டுகளில் குடிநீர் விற்பனை செய்வதின் மூலம் பொது சுகாதாரம் மற்றும் சுற்றுப்புற சூழல் ஆகியவற்றிற்கு பாதிப்பு உண்டாவதினால், இவற்றை விற்பனை செய்ய தடை செய்ய வேண்டி உள்ளது. பொது சுகாதார அலுவலர்கள் குடிநீர் தயாரிக்கும் நிறுவனங்களை திடீர் ஆய்வு செய்யும் போது கீழ்கண்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது.

1. குடிநீர் தயாரிக்க பயன்படுத்தும் குடிநீர் ஆழ்குழாய் கிணறு மூலம் நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு அதை சுத்திகரித்து விநியோகம் செய்வது கண்டறியப்பட்டது. சென்னை மாநகரில் நிலத்தடி நீர் வியாபார ரீதியாக எடுப்பது அரசினால் தடை செய்யப்பட்டுள்ளது.

2. லாரிகளில் சுத்திகரிக்கப்படாத குடிநீர் தருவிக்கப்பட்டு பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் நிரப்பப்பட்டு விநியோகம் செய்வது கண்டறியப்பட்டது.

3. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தயாரிக்க பயன்படுத்தக் கூடிய உபகரணங்கள் தான் இயங்கி முறையில் (Automatic filling) இல்லாமல் பணியாளர்கள் கைகளை பயன்படுத்தும் முறை (Manual) கண்டறியப்பட்டது. இக்குடிநீர் பாக்கெட்டுகளில் கிருமிகள் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது.

4. சுத்திகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் குடிநீர் பாக்கெட்டுகள் சுமார் 3000 மாதிரிகள் பொது பகுப்பாய்வு கூடத்தில் பரிசோதணை செய்யப்பட்டு பெரும்பாலானவை மலக்கழிவு கலப்படம் உள்ளது எனவும் இவற்றின் மூலம் குடிநீரினால் பரவக்கூடிய நோய்கள் பரவிவருவது கண்டறியப்பட்டுள்ளது. இதனைக் தொடர்ந்து சென்னை மாநகராட்சி, பொது சுகாதார அலுவலர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக திடீர் ஆய்வு மேற்கொண்டு 10 இலட்சம் குடிநீர் பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக சென்னை மாநகரில் மக்கள் கூடும் இடங்கள், பெரிய வியாபார மையங்கள், மெரினா கடற்கரை போன்ற தூய்மை கடைபிடிக்க வேண்டிய இடங்களில் பயன்படுத்தப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பிளாஸ்டிக் பாக்கெட்டுகள் பயன்படுத்தப்பட்டு வீசி எரியப்படுவதன் மூலம் சுற்றுப்புறம் மாசுபடுவதுடன் புவி வெப்பம்மாவதினை அதிகமாகிறது கண்டறியப்பட்டது.

மக்கள் நெருக்கம் மிகுந்த சென்னை மாநகரில் பிளாஸ்டிக் பாக்கெட்டுக்களால் ஏற்படுத்தப்படும் துயரத்தையும், மற்றும் சுற்றுப்புற சூழல் மாசு வழியாக உடல் மற்றும் மனச் சோர்வை ஏற்படுத்துவதினால் இவ்வகையான பிளாஸ்டிக் குடிநீர் பாக்கெட்டுகளை விநியோகம் செய்வதை சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை தடைசெய்ய வேண்டும் என்று அரசுக்கு பரிந்துரை செய்யப்படுவதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.04..2010 அன்று தீர்மானஎண்.14/2010ன்படி நிலைக்குழு(சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''சென்னை மாநகரில் பாலிதீன் பாக்கெட்டுகளில் விற்கப்படும் தண்ணீரின் தரம் பரிசோதிக்கப்பட்ட போது அதில் Colliform Bacteria என்ற மல கழிவுகள் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இப்பைகளில் தண்ணீர் நிரப்பும் பணியின் போது Non-touch தொழில் நுட்பம் பின்பற்றப்படாததினால் 22 நிறுவனங்கள் மூடப்பட்டன. சென்னை மாநகராட்சியின் தொற்று நோய் மருத்துவமனையில் கடந்த காலங்களில் அனுமதிக்கப்பட்ட பெரும்பாலான நோயாளிகள் பாலிதீன் பை குடிநீர் பயன்படுத்தியது கண்டறியப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் மக்கள் கூடும் பொது இடங்களிலும், குடிசைவாழ் பகுதிகளிலும் தண்ணீர் பாக்கெட்டுகள் பயன்படுத்தப்பட்டு, வயிற்றுபோக்கு, டைபாய்டு, மஞ்சள் காமாலை போன்ற நோய்களால் பெருவாரியாக மக்கள் பாதிக்கப்படுவதை முழுமையாக கட்டுப்படுத்தும் நோக்குடன் பாலிதீன் பாக்கெட்டுகளில் குடிநீர் விற்கப்படுவது முற்றிலுமாக தடை செய்ய தமிழக அரசின் அனுமதிக்கு பரிந்துரைக்கப்படும். சமீபத்தில் கன்னியாகுமரி மாவட்டம், நீலகிரி மாவட்டங்களில் பிளாஸ்டிக் முற்றிலுமாக தடை செய்யப்பட்டது. அது போல சென்னை மாநகராட்சியிலும் பொது மக்கள் நலன் கருதி மறு சுழற்சிக்கு உட்படுத்த முடியாத, ஒரு முறை மட்டுமே உபயோகப்படுத்தப்படும் 20 மைக்ரான் (20 Micron) கீழுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் குறிப்பாக தேனீர் கப்புகள், கடைகளில் உபயோகப்படுத்தப்படும் பைகள் (Carry Bags), ரசனா பாக்கெட்டுகள் ஆகியவற்றால் பொது மக்களுக்கு சுகாதாரகேடு மற்றும் சுற்றுப்புறசூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துதல், மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் கழிவுநீர் குழாய்களில் அடைப்பு ஏற்படுதல் போன்ற விளைவுகள் ஏற்படுவதால் முற்றிலுமாக தடைசெய்ய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என்ற திருத்தத்துடன் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******